359

559

Regd. No. M. 2569

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 OCT 1938
MADRAS

ஹிபாஜத்துல் இஸ்லாம்

மலர் 9

இதழ் 10

செந்தமிழ் மாத சஞ்சிகை

HIFAZATH-UL-ISLAM

ஹிஜ்ரி 1357, ஷஅபான் மீ

1938ஞு அக்டோபர்

1. அல் குர்ஆன் ... 273
2. அல்ஹதீது ... 276
3. பலஸ்தீன் அறபியர் துயரம் ... 278
4. மதத்தின் அவசியம் ... 281
5. ஜாமி உல் அஜ்ஹர் ... 284
6. ஸ்பெயின் முஸ்லிம் மன்னரின் நீதி முறை ... 286
7. பர்மாவில் இந்தியர்கள் ... 288
8. அடிமைகள் யார்? ... 290
9. "தாருல் இஸ்லாமி"ன் தவறான பத்வா ... 293
10 காங்கிரஸும் முஸ்லிம் லீக்கும் ... 296
11. காங்கிரஸ் மேதாவிகளின் சொல்லும் செயலும் 299

சென்னை
ஹிபாஜத்துல்இஸ்லாம் சங்கத்தாரின்
வெளியீடு

S. R. SARMA.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, ஸிலோன், பர்மா முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாயா முதலிய வெளிநாடுகளுக்கு	,,	4	0	0
தனிப் பிரதி ...	,,	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயங்கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்பட மாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக் கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

43, போஸ்டாபீஸ் தெரு,

G. T., மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 OCT 1938
MADRAS

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம். (குர்ஆன்)

ஆசிரியர் :—மௌலவி A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 9	ஹிஜ்ரி 1357 ஷஅபான் மீ 1938ஹு அக்டோபர் மீ	இதழ் 10

அல் குர்ஆன்

எவர் (இம்மையில்) ஒரு நன்மையைச் செய்தாரோ அவருக்கு (மறுமையில்) அதுபோன்ற பத்து (மடங்கு நன்மை) இருக்கிறது; ஆனால் எவர் ஒரு தீமையைச் செய்தாரோ அதுபோன்றதல்லாது (மறுமையில்) அவருக்குக் கூலி (—தண்டனை) கொடுக்கப்படமாட்டாது. இன்னும், அவர்கள் அநீதி செய்யப்படமாட்டார்கள். (திரு குர்ஆன்).

அல்லாஹு தஆலா மனிதருக்குச் செய்துள்ள அனுக்கிரகங்களை எண்ணி முடிக்க ஒருவராலும் முடியாது. என்றாலும், அவன் செய்துள்ள பேரருள்களிற் சிலவற்றை நாம் கணிக்கவும் குறிப்பிடவும் முடியும். அவன் அடியார்களாகிய நமக்கு நேர்வழிகாட்டுவதற்காக நபிமார்களை அனுப்பி வேதங்களையும் கொடுத்திருப்பது மிகப் பெரிய அனுக்கிரகங்களிலொன்றாகும். அது இவ்வுலகில் அவனளித்துள்ளதாகும். இதுபோல, மறு உலகில் அவன் நமக்களிக்கும் அனுக்கிரகங்களில் இந்த ஆயத்திற் கூறப்பட்டுள்ள விஷயமொன்றாகும். இம்மையில் நாம் செய்யும் சகல காரியங்களும் நன்மை அல்லது தீமை ஆகிய இரண்டிலொன்றல்லாமலில்லை. இதில் நாம் ஒரு நன்மையைச் செய்வோமாயின் அதற்குரிய பயனை பத்து மடங்கு அதிகமாக்கிக் கொடுக்கிறான். ஒரு தீமையைச் செய்வோமாயின் அதற்குரிய தண்டனையை அதிகப்படுத்தாமல் நியாயமான அளவிற்கே அளிக்கிறான்.

திரு குர்ஆனில் சொல்லப்பட்டுள்ள இவ்விதி மனிதராகப்பிறந்த ஒவ்வொருவருக்கும் பொது விதியல்ல. காபிர்களுக்கு இவ்விதி சம்மந்தப்பட்டதல்ல. ஏனெனில் "காபிர்களது நன்மைகள், அவர்கள் இஸ்லாத்தில் சேர்ந்த பிறகுதான் ஒப்புக் கொள்ளப்படும்" என்பதாக ஹதீது ஷரீபில் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, இவ்விதி மூமின்களுக்கு மட்டிலும்தான் சொந்தமானது. ஏனெனில், "காபிர்களுக்கு அவர்களது நற்கிரியைகள் பிரயோஜனம் செய்யமாட்டா; அவர்களது நன்மைகள் பயன் அளிக்கமாட்டா; அவர்களது தீமைக்குரிய வேதனை குறைக்கப்படமாட்டாது; என்றாலும், அவர்களது குற்றத்திற்குத் தக்கவாறு வேதனையில்

சிலரைப் பார்க்கினும் சிலருக்கு அதிக வேதனை யுண்டு'' என்பதாக 'இஜ்மாஉ உம்மத்' ஏற்பட்டிருப்பதாக காஜீஇயாஜ் (றஹ்.) அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஏனெனில், காபிர்கள் இன்னும் எத்தனை வருஷம் ஜீவித்திருந்தாலும் தங்களது குப்ரான நம்பிக்கையின் பேரிலேயே ஸ்திரமாக இருப்பார்களாதலால், அவர்களது நற்கிரியைகளுக்கு மதிப்பில்லாமலாகிவிட்டது. மூமின்கள் எத்தனை வருஷங்கள் ஜீவித்திருந்தாலும், அவர்களிடம் ஈமான் இருப்பதால், பாவத்தை எப்பொழுதும், செய்யவேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு நிரந்தரமாக இருப்பதில்லை. எப்பொழுதேனும், அவர்கள் பாவம் செய்தாலும், அதனைக் குற்றமெனக்கருதுவதுடன் இனிமேல் அதனைச் செய்யலாகாது என்றே கருதி இருப்பர். ஆதலால், அவர்களது ஒரு நன்மைக்குப் பத்து மடங்கு அதிகப்பயனை அளித்து, ஒரு தீமைக்கு அதற்குரிய தீமைப்பயனை மட்டிலும் அளிக்கப்படுகிறது. அத்துடன், அவர்கள் செய்த தீமைக்குரிய பயனை, அவர்களது நன்மைக்குரிய 10 மடங்கு அதிகப்பயனில் கழித்துவிடவும்படுகிறது. ஆகவே, நன்மையைப் பார்க்கினும் 10 மடங்கு அதிகமான பாவம் செய்திருந்தால்தான் அவர்கள் நரகினுக்குச் செல்லவேண்டிய சந்தர்ப்பமேற்படும்.

மேலும், இந்த ஆயத்திற் சொல்லப்பட்டபடி 10 மடங்கு நன்மைப் பயன் மாத்திரம் அளிக்கப்படமாட்டாது. அதற் கதிகமாகவும் அவரவருடைய எண்ணம்—நம்பிக்கைக் கேற்றவாறு அளிக்கப்படும். இதனைக் குறித்து திரு குர்ஆனின் வேறு ஒரு இடத்தில் 700 மடங்கும், அதற்கதிகமாகவும் அளிக்கப்படும் என்ற விபரம் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, நன்மை செய்த மூமின்களுக்கு, அவனது திருவருளால் நன்மையைப் பார்க்கினும் அதிக நற்பயனை அளிக்கப்படும் என்பதும், தீமை செய்தால், தீமைக்குரிய தீமைப் பயன் மட்டிலும்தான் அளிக்கப்படும் என்பதும் இவ்வாயத்தின் கருத்து.

தவிர, நன்மைக்கு ஒன்றுக்குப் பத்தும், அதற்கு அதிகமாகவும் நற்பயனை அளிப்பதற்கும், தீமைக்குத் தீமைப்பயன் மட்டிலும் அளிப்பதற்குமுள்ள இரகசியம் யாதெனில், தீமையானது ஒருவகையான வித்து. நப்ஸு என்கிற பூமியில் அதனை விவசாயம் செய்யப்படுகிறது. நப்ஸு கெட்டது. உவர்ப்பு நிலத்திற்குச் சமமானது. ஆதலால், அதன் பயன் ஒன்றுக்கு ஒன்றுதான். நன்மையானது நல்ல வித்து. அது விதைக்கப்படும் பூமி கல்பு என்னும் ஹிருதயம். கல்பு மிகவும் நல்ல பூமியாக இருப்பதால், அதிற்செய்யப்படும் விவசாயமும் லாபகரமான பயனை அளிக்கிறது.

தவிரவும், அல்லாஹு தஆலா நம்மீது அவனுக்குள்ள விசாலமான கருணையினால் நாம் செய்யும் காரியம் ஒவ்வொன்றிற்கும் நன்மைப் பயனை அளித்துளான். ஆனால், அவைகளுக்குக் கிடைக்கிற நன்மைப் பயனுக்குள் வித்தியாசமுண்டு. இதனைக் குறித்து "கிரியைகள் ஆறுவகை. அதாவது இரண்டு காரியங்கள் கடமையாக்கப்படுபவை, சரிக்குச்சரி, ஒரு நன்மைக்கு ஒரு நன்மை, ஒரு நன்மைக்குப் பத்து, ஒரு நன்மைக்கு எழுநூறு. இரண்டு காரியங்கள் கடமையாக்கப்படுபவை என்பதற்கு விபரமாவது, அல்லாஹுத்தஆலாவிற்கு எவ்வஸ்துவையும் இணைவைக்காமல் இருக்கிற நிலைமையில் மரிப்பவர், இவர் சுவர்க்கத்தில் பிரவேசிப்பார். அல்லாஹு தஆலாவிற்கு இணைவைப்பவராக இருக்கிற நிலைமையில் மரிப்பவர், இவர் நரகினில் பிரவேசிப்பார்'' என்பதாகும். சரிக்குச்சரி என்பதற்கு விபரமாவது, ''எவர்ஒரு தீமையைச் செய்கிறாரோ (அவருடைய) தீமைக்குரிய பிரதிபலனானது அதுபோன்றதீமையேயாகும்'' என்ற ஆயத்தின்படி இருக்கிறது. ஒரு நன்மைக்கு ஒரு நன்மை என்பதற்கு விபரமாவது, ஒரு நன்மையான காரியத்தைச் செய்யவேண்டும் என ஒருவர் நாடுகிறார்; அவரது நாட்டத்தை அவரது நப்ஸு மட்டிலும்தான் உணர்கின்றது, அதனை அல்லாஹுதஆலா மட்டிலும் தான் அறிந்திருக்கிறான். இப்படியுள்ள நற்காரிய எண்ணமும் நற்காரியமாகவே இருப்பதால், இதற்கு ஒன்றுக்கு ஒன்று வீதம் நன்மைப் பயன் அளிக்கப்படும்.

ஒரு நன்மைக்குப் பத்து என்பதற்கு விவரமாவது, ஒரு நற்காரியத்தைச் செய்யவேண்டும் என்று நாடி, அதனைக் கிரியாம்சையில் செய்துவிடவேண்டும். இப்படிச் செய்யப்படும் காரியத்திற்குப் பத்து மடங்கு பிரதிபலன் அளிக்கப்படும். "ஒரு நன்மைக்கு எழுநூறு மடங்கு அதிகமான நன்மைப்பயன் அளிக்கப்படும் என்பது அல்லாஹு தஆலாவின் சன்மார்க்கத்தில் செலவு செய்யப்படும் செலவினங்கள் சம்பந்தப்பட்டது'' என்பதாக ஹதீது ஷரீபில் விபரிக்கப்பட்டிருக்கிறது.

நல்ல காரியம் என்பது இன்னின்னது என்ப தாக இந்த ஆயத்தில் விவரிக்கப்படவில்லை. என்ருலும், இவைகளைக் குறித்து திருகுர் ஆனின் இதர ஆயத்துகளிலும், ஹதீதுகளி லும் அதிகமாகச் சொல்லப்படுகிறது. ஒருவர் வியாபாரம் செய்வதாக வைத்துக் கொள்வோம். வியாபாரத்திற் கிடைக்கிற லாபம் அவருக்கு உலக சம்பந்தமான முன்னேற்றத்தை அளிப் பதுடன், அந்த வியாபாரத் தொழிலே அவ ருக்கு மறுமைப் பயனையும் அளிப்பதாக மாறிவிடுகிறது. எவ்வாறெனில், நல்ல பொருள் களைத் தயார்செய்து, அல்லது சேகரித்துப் பொது ஜனங்களுக்கு நாம் அளிக்கவேண்டும்; அதனை வாங்கி உபயோகிப்பவருக்கு லாபம் கிடைக்கவேண்டும்; நல்ல பொருளைத் தேடிக் கண்டுபிடித்து வாங்க இயலாத ஏழைகளுக்கும் மற்றவருக்கும் நமது வியாபாரச் சாமான்களில் தக்க உதவி இருக்க வேண்டும் என்ற எண் ணத்துடன், அவ்வியாபாரி சாமான்களைக் கொண்டுவந்து சேகரிப்பாராயின், அவரது ஒவ்வொரு மூச்சும் நன்மையான முயற்சி யிலேயே செலவாகிறது. அவரது ஒவ் வொரு முயற்சியும் நற்கிரியையாகவே கருதப்படும். இதுபோல், விவசாயி ஒரு வர், நாம் விவசாயம் செய்தால் ஆடு மாடு முதலிய மிருக ஜாதிகளை வளர்க்கலாம்; அவை களும் இறைவனது சிருஷ்டிகளைச் சேர்ந்தவை களே; அவைகள் பால் நாம் ஜீவ காருண்யத்து டன் நடந்துகொள்ளவேண்டும்; அவைகளுக் குத்தக்கவாறு நல்ல தீவனங்களை அளிக்கவேண் டும்; அளவிற்கு மீறி அவைகளிடமிருந்து வேலை வாங்கக்கூடாது; விவசாயத் தொழிலை ஆரம்பித்தால் வேலையில்லாத பரம ஏழைகளில் சிலருக்கு வேலை கொடுக்கலாம்; நாமும் பிறருக் குப் பாரமாக இல்லாமல் சுயமே ஹலாலான சம்பாத்தியத்தைத் தேடலாம் என்ற நல்ல எண்ணத்துடன் அத்தொழிலைச் செய்தால் அதிலுள்ள ஒவ்வொரு முயற்சியும் புண்ணிய மானதாகவே இருக்கிறது. இதுபோலவே, இதர பல்வேறு தொழில்களும் நல்லெண்ணத் துடன் செய்யப்படுமாயின், அவைகளும் நன் மையையே மறுமையில் அளிக்கின்றன. அவ் வாறின்றி உலகின் செல்வத்தைத் திரட்ட வேண்டும்; பெரும் சீமானுகவேண்டும் என்பன போன்ற எண்ணத்துடன் செய்யப்படும் தொழிலில் இம்மைக்குரிய பயனுகிய லாபம் கிடைத்தாலும் மறுமைப்பயன் இருப்பதில்லை. தவிரவும், நாம் நல்ல காரியத்தைச் செய்ய வேண்டும் என்று மனதில் நினைத்தாலுங்கூட, அதற்கும் நாம் நன்மைப் பயன் அடைய முடியும் என்ற விபரம் ஷை ஆயத்திலிருந்து வெளியாகு வதை நம்மவர் கவனிக்க வேண்டும். இது ஏழை எளியாருக்கும் இயலாதவருக்கும் இறை வன் அளிக்கும் விசேஷ சலுகை எனலாம். எவ்வாறெனில், நல்ல பணமும், வசதியுமுள்ள வர்கள் மஸ்ஜிதுகளைக் கட்டுகின்றனர், மத்ர ஸாக்களை ஏற்படுத்துகின்றனர், அவைகளுக் குச் சொத்துக்களை வக்புச் செய்கின்றனர். இதர தான தர்மங்களைச் செய்கின்றனர். பணமில்லாதவர்களாகிய ஏழைகள் இவ்விஷ யத்தில் பணக்காரர்களுடன் போட்டி போட முடியாது. அவர்கள் செய்யும் இவ்வாறுன நல்ல காரியங்களைப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பதைத் தவிர, அவர்களுக்கு வேறு ஒன் றும் செய்ய முடியாது. ஆனல், அவ்வேழை கள் தங்களிடம் பணமிருந்தால் தாங்களும் இவ் விதமான நற்காரியங்களைச் செய்யலாம் என்று உண்மையாகவே, அந்தரங்க சுத்தியாக நினைத் திருந்தால்,—அவர்கள் சீமான்களாகி அவ்வாறு செய்ய இயலாமற் போனுலும்—அவர்களது அந்தரங்க சுத்தியான நினைப்பிற்கு ஆண்டவன் நற்பயனை அளிக்கிருன்; ஆகவே, இறைவன் நாம் செய்யும் நன்மைகளையும், நல்ல நினைப்புகளையும் அங்கீகரித்து அவைகளுக்குத் தக்க பிரதியை மறுமையில் அளிப்பதற்கு அஸ்திவாரமாக இருப்பது நாம் அவனுக்கு ஈமான் கொள்வ தாகவே இருப்பதால், எக்காரியத்திற்கும் முதன்மையாக நாம் நம்முடைய ஈமானையே காப்பாற்ற வேண்டியதிருக்கிறது.

தவிர, சிலர் ஈமான் கொள்ளும் விஷயத்தி லும் தவருகவே இருக்கின்றனர். அல்லா ஹுத் தஆலா ஒருவன் உளன்; அவன் நம் மைப்படைத்து, ரட்சித்துக் காப்பாற்றுபவன்; நமக்கு நேர் வழி காட்டுவதற்காக நபிமார்களை யும் வேதங்களையும் நமக்களித்தான் என்று நாம் நம்பி நிர்ணயங்கொண்டிருந்த போதிலும், திருகுர்ஆனிலுள்ள ஏதேனும் ஒரு விதியை அவமதித்தாலும், ஒரு கட்டளையை வேண்டு மென்றே புறக்கணித்தாலும் நாம் உண்மையாக வே அல்லாஹ்வை விசுவாசித்தவர்களாகோம். எல்லாம்வல்ல இறைவன் நம்மனைவருக்கும் மறு மைப் பயனை ஒன்றுக்குப் பத்தாகவும், அதற்கு அதிகமாகவும் அளிப்பதற்கு ஆதாரமாகவுள்ள ஈமானை அளித்து, நல்லருள் புரிவானுக. ஆமீன்.

அல் ஹதீது

ஒரு சமூகம் நேர்வழியின் பேரில் இருந்தபிறகு, அச்சமூகத்தினுள் சச்சரவுகளேற்படாமல் (அச்சமூகம்) வழி கெட்டுப்போகவில்லை. (ஹதீது)

சோதரர்! இந்த ஹதீதில், ஒரு சமூகத்தார் நேர்வழியை அடைந்தபின் வழி கெட்டுப்போவதற்குரிய காரணம் கூறப்பட்டிருக்கிறது. அதாவது, ஒரு சமூகத்தினுள் பிளவும், வேற்றுமையும், சச்சரவும் உண்டாகிக்கொண்டிருப்பதுதான் அச்சமூகம் வழி கெட்டுப்போவதற்குரிய காரணம் என்பது இந்த ஹதீதின் கருத்து. ஒருவர் நேர்வழியை அடைந்தபின், வழி தவறி விடுவதற்குரிய காரணங்கள் பலவுண்டு. என்றாலும், ஒரு சமூகம் அதாவது, பெரும் ஜனத்தொகையைக்கொண்ட ஒரு கூட்டத்தார் வழி தவறி விடுவதற்குரிய முக்கிய காரணங்களுள், அச்சமூகத்தினுள் ஒற்றுமையில்லாதிருப்பது பிரதானமான காரணமாகும். ஒரு சமூகத்திலுள்ள வியாபாரம், தொழில், செல்வம், செல்வாக்கு ஆகியவைகள் குன்றுவதற்கு அச்சமூகத்திலுள்ளவர்கள் ஒற்றுமை இல்லாமல் ஒருவரை ஒருவர் காட்டிக் கொடுப்பதே முக்கிய காரணமாக இருக்கிறது. இதனால் பிறருக்கு இடங்கொடுத்து பலவித நஷ்டங்களுக்காளாகி விடுகின்றனர்.

நமது முஸ்லிம்களை எடுத்துக்கொள்வோம்: ஒரு காலத்தில் முஸ்லிம்களாகிய நாம் இஸ்லாமிய ஷரீஅத்தைக்கௌரவித்து, அதன் சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்த காலத்தில் நாம் சென்றவிடமெல்லாம் சிறப்பாக வரவேற்கப்பட்டோம். நமது சைனியங்கள் சென்ற திசையெல்லாம் வெற்றிக்கொடி நாட்டின. அக்காலத்தில் இருந்த தலைவர்கள் தங்களுக்கென விசேஷ அந்தஸ்தை தேடாமல் பொதுஜன ஊழியர்கள் என, தங்களை மதித்து நடந்து கொண்டனர். ஹஜ்றத் உமர்பாறூக் (றலி.) அவர்கள் கலீபாவாக இருந்த போது ஷாம், இராக், எகிப்து முதலிய தேசங்களெல்லாம் முஸ்லிம்களது ஆட்சியின்கீழ் வந்தன. இத்தேசங்களைக்கைப்பற்றிய சேனைகள் யொத்தத்தில் 40 ஆயிரம்கூட இல்லை. அதிலும், ஷாம் இராக் ஆகிய தேசங்களில் கைஸர், கிஸ்ரா ஆகிய சக்கிரவர்த்திகளை ஏககாலத்தில் எதிர்த்து யுத்தஞ் செய்ய நேர்ந்தது. அக்காலத்தில் உலகிலுள்ள வல்லரசுகளில் இவ்விருவரது அரசாங்கங்களும் தான் முதன்மை ஸ்தானத்தை வகித்து வந்தன. இவ்விருவரையும் முஸ்லிம்கள் ஜெயிப்பதற்கு மூல காரணமாக இருந்தது முஸ்லிம் களுக்குள்ளிருந்த ஒற்றுமைதான். எனவே, இவ்வொற்றுமையின் பயனாக வெகு சொற்ப காலத்திற்குள் முஸ்லிம்கள் மிகப் பெரிய அரசாங்களுக் கதிபதிகளாயினர். அப்புறம் முஸ்லிம்களில் ஒற்றுமை குன்றி, ஒவ்வொருவரும் தலைமைத்தனத்திற்கும், அரசுரிமைக்கும் ஆசைப்பட்டு பிளவு பட்டதால் பிற ஜாதியினரின் உதவியை எதிர்பார்த்து அவர்களுக்கு விசேஷ சலுகை காட்டினர். சில நாடுகளை விட்டுக் கொடுத்தனர். இதனால், முஸ்லிம்களது பலங்குன்றின. இறுதியாக இந்தியாவை ஒரு குடையின்கீழ் ஆட்சிபுரிந்த முஸ்லிம்கள் இன்று பிறருக்கு அடிமைப்பட்டிருப்பதற்கு இந்திய முஸ்லிம்களிடம் ஒற்றுமை இல்லாததே காரணமாகும். தனக்கு வேண்டுமென்றுவிரும்புகிற ஒரு கௌரவத்தைத்தனது சகோதரனும் அடையட்டும் என்ற தாராள சிந்தை நம்மில் குறைந்து போனதால், நம்முடைய சகோதரர்களை ஒடுக்குவதற்காக, நமது மத விரோதிகளுக்கு நாம் பலங்கொடுத்து, நம்மைய நாம் அழித்துக் கொண்டோம். அழித்தும் கொள்கிறோம்.

இவ்வாறு நாம் நமது அரசுரிமையை இழந்த பின்னும், நமது நிலையை உணராமல், நமக்குள் இன்னமும் வேற்றுமையையும் விரோதத்தையும் வைத்துக் கொண்டிருப்பதால் இவ்வடிமை நாட்டில் இருக்கிற அற்ப சொற்ப உரிமைகளையும் கூட நாம் அடையாமலிருந்து வருகிறோம். நம்மில் ஒற்றுமை இல்லாதிருப்பதை நமது மத விரோதிகள் தங்களுக்குச் சாதகமாக உபயோ

கித்துக் கொண்டு, நமது உரிமைகளை அனுபவித்து வருகின்றனர். இனியும் நாம் நமது நிலைமையை உணராமல் கக்ஷிப்பிளவிலும், வேற்றுமையிலும் ஸ்திரமாக இருப்போமாயின் எதிர்காலத்தில் நமது சமூகம், இந்த ஹதீதில் கூறப்பட்டபடி வழிகேட்டில் விழ வேண்டிய நிலைமையே ஏற்படும் என்பதிற் சந்தேகமில்லை. ஏனெனில், நமது கக்ஷிப்பிளவினாலும் வேற்றுமையினாலும் நாம் மாற்றானுக்கிடங்கொடுத்து, அவனைப் பலப்படுத்துவதுடன் மட்டுமில்லாமல், நமக்குள்ளாகவே சண்டை சச்சரவுகளைச் செய்து கொண்டு கோர்ட்டுகளில் பணத்தை வீண் விரயம்செய்கின்றோம். இக்காலங்களில் நமக்குத் தொழில் செய்யமுடிவதில்லை. அவ்வாறு முடியுமென்றாலும் அதில் போதியளவு கவனம் செலுத்தச் சாவகாசம் கிடைப்பதில்லை. கையிலிருக்கிற பணம் கோர்ட்டுச் செலவில் சென்று விடுகிறது. இறுதியாக தொழிலில்லாமல் பணமுடைக்காளாகிக் கடன்காரரார்களாகவுமாய் விட வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. தரித்திரத்திலகப்படுவது ஈமானை விற்க வேண்டிய நிலைமைக்குத் தான் கொண்டுவரும். வட இந்தியாவில் மல்கானா பிரதேசத்தில் வசித்து வந்த சில முஸ்லிம்கள் ஹிந்து லேவா தேவிக்காரர்களிடம் கடன் பட்டவர்களாகவும், மார்க்கக் கல்வியற்றவராகவும் இருந்ததன் பயனாக, இஸ்லாம் மதத்தை விட்டு மாறி, ஆரிய சமாஜிகளால் சுத்தி செய்யப்பட்டு ஹிந்து மதத்தில் சேர்ந்ததும், அவர்களை மீட்பதற்காக இந்தியாவிலுள்ள முஸ்லிம் பெருங் குடி மக்கள் பண உதவி செய்ததும், உலமாக்கள் அங்கு சென்று சன்மார்க்கப் பிரசாரம் செய்து, அவர்களை மீட்டியதும் நம்மில் அநேகருக்குத் தெரியாத விஷயமன்று. உலகிலுள்ள மதப் பிரசாரகர்களெல்லாரும் முஸ்லிம்களது ஈமானைக் கெடுக்கவும், முஸ்லிம்களைத் தங்களது வலைக்குள் சிக்கவைக்கவுமே விரும்புகின்றனர். ஆஸ்பத்திரிகளென்றும், அனாதைச் சாலைகளென்றும், ஸ்கூல்களென்றும் பெயர் வைத்துப் பல ஸ்தாபனங்களை ஏற்படுத்தி, தங்களது மதப் பிரசாரத்தைச் செய்து வருகின்றனர். இவர்கள் புரியும் சொற்பப் பண உதவிக்காசைப்பட்டு நம்மிலுள்ள ஏழைகள் இவ்வனாதைச் சாலைக்குத் தங்கள் குழந்தைகளை அனுப்புகின்றனர், இவர்களது பூரண சகாயத்துடன் கல்விச் சாலைகளுக்கனுப்புகின்றனர். ஆனால், இவ்வித உதவி பெறும் சிறுவர்களும், அவர்களைச் சேர்ந்த மற்ற ஏழைகளும் நாளடைவில் தங்களுக்கு உபகாரம் செய்யும் கிறிஸ்துவ ஸ்தாபனங்கள் அல்லது ஆரிய சமாஜத்தினர்களது செல்வாக்குக்குக்கீழ்ப்பட்டு மதம் மாறிவிடுகின்றனர். வட இந்தியாவில் முஸ்லிம் குழந்தைகளும், பள்ளி மாணவிகளும், ஆரிய சமாஜத்தினராலும், கிறிஸ்துவ மெஷினரிகளாலும் ஏமாற்றி அழைத்துச் சென்ற விருத்தாந்தங்கள் பல பத்திரிகைகளில் வெளி வந்திருக்கின்றன. நம்மிலுள்ள ஏழை முஸ்லிம்களும், ஈமான் என்ற பிரகாசத்தை இருதயங்களில் கொண்ட மாதா பிதாக்களுக்குப் பிறந்து அனாதையாக விடப்பட்டவர்களும் பணமில்லாததன் காரணத்தினாலல்லவா வேறு மதத்தினருக்கு அடங்க வேண்டியதிருக்கிறது. நம்மில் சிலருக்குப் பணமிருந்தாலும் இத்தகைய ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதற்கு நம் சமூகத்தில் போதிய பணமில்லாததனாலல்லவா நாம் நமது ஏழைகளையும் அனாதைகளையும் சம்ரக்ஷணை செய்ய முடியாத நிலைமையிலிருக்கின்றோம். ஆகவே, தரித்திரம் என்பது மிகக் கொடியது. நமது ஒற்றுமையைக் குலைப்பதற்கும் அது பெருங் கருவியாக இருக்க முடியும். ஆனால் இவ்வித நிலைமை திடீரென ஒரே வருஷத்திலோ அல்லது பத்து வருஷத்திலோ ஏற்படக் கூடியதல்ல. சிறுகச் சிறுக நாளடைவில் ஏற்படக்கூடியது. ஆதலால், முஸ்லிம்கள் நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து கொண்டிருப்பதை எல்லோரும் தெரிந்து கொள்வதற்கில்லை. எனவே, எம் பெருமானார் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்த இந்த ஹதீதுக்கேற்ப, வழிகெடும் நிலை நம்மவருக்கு வருமுன், நமக்குள் உள்ள வேற்றுமைகளையும், பிளவுகளையும் நீக்கி நம்மை ஒற்றுமைப்படுத்தி, பொருளாதார நிலையைச் சீர்திருத்தி, சத்திய சன்மார்க்கத்திலேயே ஸ்திரமாக இருக்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

பலஸ்தீன் அறபியர் துயரம்

தற்போது பலஸ்தீனில் ஏற்பட்டுள்ள கலவரம் உலக முஸ்லிம்களின் கவனத்திலிருந்து வருகிறது. அங்கு பிரிட்டிஷ் சர்க்கார் அறபியரை நசுக்க தீவிர முயற்சி செய்துவருவதை ஒவ்வொரு முஸ்லிமும் மிக மனவருத்தத்துடன் கவனித்து வருகின்றனர். பலஸ்தீன் பிரச்னையைப்பற்றி கவனிப்பதற்காக எகிப்திலுள்ள கெய்ரோ நகரில், உலக முஸ்லிம் மகாநாடு கூட்ட முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்ஷா அல்லாஹ் இம்மாதத்தில் அம்மகாநாடு நடைபெறுமென்று தோன்றுகிறது. இதற்காக உலகமெங்குமுள்ள முஸ்லிம் தலைவர்களுக்கும் பிரபலஸ்தர்களுக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் மட்டும் 200 பேர்களுக்கு அழைப்பு அனுப்புவதாக அகில இந்திய முஸ்லிம்லீக் தலைவர் ஆலீஜனுப் முஹம்மது அலீ ஜின்னு அவர்களுக்கு எகிப்திலிருந்து சென்ற மாத ஆரம்பத்திலேயே தகவல் வந்திருக்கிறது. ஆகவே, பலஸ்தீனத்தில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் கிளர்ச்சிக்குக் காரணம்யாது? இக்கிளர்ச்சியை ஒழிப்பதற்கான முறை என்ன? வென்பதைக் குறித்து சிறிது ஆராய்வோம்: பலஸ்தீனத்தில் யூதர்களைப் பிரிட்டிஷார் குடியேற்றுவதை அங்குள்ள அறபியர் ஆக்ஷேபித்துக் கலகம் செய்கின்றனர் என்று பிரிட்டிஷார் கூறுகின்றனர். பொது ஜனங்களிலும் அநேகருடைய கருத்து இவ்விதமாகவே இருந்து வருகிறது. இதில் ஒரளவு உண்மை இல்லாமலில்லை. என்றாலும், இக்கிளர்ச்சிக்கு முக்கிய காரணம் வேறு. பலஸ்தீனத்தை நிரந்தரமாக அடிமைப்படுத்தித் தங்களது ஆதிக்கத்தின் கீழ் வைத்துக்கொள்ள பிரிட்டிஷார் விரும்புகின்றனர். அறபியர்களோ விடுதலையை விரும்புகின்றனர். இதுதான் தற்போதைய கிளர்ச்சிக்கும் கலவரத்திற்கும் உண்மைக் காரணம். பலஸ்தீனத்திலுள்ள 'பைத்துல் முகத்தஸி'லும், இதர புண்ணிய க்ஷேத்திரங்களிலும் முஸ்லிம்கள் அதிகாரம் வகிப்பதை ஐரோப்பியர் சகிக்கவில்லை. இதற்காக சிலுவை யுத்தங்களைச் செய்தனர். சிறிது காலம் பைத்துல் முகத்தஸை அவர்கள் கைப்பற்றி இருந்தாலும் முஸ்லிம்கள் இறுதியாக ஜெயித்து, அதனை மறுபடியும் பிடித்துக் கொண்டனர்.

முஸ்லிம்களை நேருக்கு நேராக எதிர்த்து, பைத்துல் முகத்தஸைக் கைப்பற்ற முயலுவது உலக முஸ்லிம்களை யுத்தம் செய்ய அழைப்பதாக இருப்பதால், ஐரோப்பிய கிறிஸ்துவர்கள் ராஜதந்திர முறைப்படி, பைத்துல் முகத்தஸைக் கைப்பற்ற முயன்று வந்தனர். இதற்கனுகூலமாக மகாயுத்தமும் தோன்றியதால் ஐரோப்பிய ராஜதந்திரம் ஒருவாறு பலனளிக்கவும் ஆரம்பித்தது. எவ்வாறெனில், துருக்கி உதுமானி அரசாங்கத்தின் கீழிலிருந்த அறபியர் தங்களுக்குப் பூரண சுயேச்சை வேண்டும் என்று விரும்பினர். இவ்விருப்பத்தை ஐரோப்பிய ஒற்றர்கள் இன்னும் அதிகமாகக் கிளப்பினர். பிரிட்டிஷாரின்

சூழ்ச்சியை உணராத அறபியர்கள் அவர்கள் கூறுவதை மெய்யென்று நம்பி, மகா யுத்தத்தின்போது துருக்கிக்கு விரோதமாக பிரிட்டிஷாருடன் சேர்ந்து சதியாலோசனை செய்து, துருக்கியரை விட்டுப் பிரிந்து பிரிட்டிஷாருக்கு உதவி புரிந்தனர். இதன் பலனாக அறபியர் வாழும் நாடுகள் துருக்கியரின் கையை விட்டகன்றன. துருக்கியர் யுத்தத்தில் தோல்வியடைந்தனர். இறுதியாக பலஸ்தீனத்தை ஆட்சி புரியும் மேலதிகார உரிமையை சர்வதேச சங்கத்திலிருந்து பிரிட்டிஷார் அடைந்து ஆட்சி புரிகின்றனர். சுயேச்சையை விரும்பி துருக்கியரை எதிர்த்து, பிரிட்டிஷாருக்குத் துணை புரிந்த அங்குள்ள அறபியர் திடுக்கிட்டனர்; கிணறு வெட்டப் பூதம் வெளிப்பட்டது போல முஸ்லிம் ஆட்சிக்குப் பதிலாக கிறிஸ்துவ ஆட்சியல்லவா உண்டாகி இருக்கிறது என நினைத்து வருந்தினர்; தங்களது சுயநிர்ணய சுதந்திரத்திற்காகக் கிளர்ச்சி செய்யத் தொடங்கினர்.

பிரிட்டிஷார் ஆரம்ப முதற்கொண்டே எச்சரிக்கையாக இருந்தார்களாதலின், யூதர்களுக்கு பலஸ்தீனத்தில் தாயகம் ஏற்படுத்திக் கொடுப்பதாகக்கூறி, அவர்களிடமிருந்து யுத்தத்திற்காக ஏராளமான பொருள்களைக் கடனாகவும், நன்கொடையாகவும் வாங்கி இருந்தனர். ஆகவே, யூதர்களைப் பலஸ்தீனில் குடியேற்ற ஒரு திட்டத்தை வகுத்து, அதனை அமுலில் கொண்டு வந்தனர். ஏனெனில், சுயேச்சைக்காகப் போர் செய்யும் அறபியரை எதிர்த்துச் சண்டை போடுவதற்கு ஆள் வேண்டும், பலஸ்தீன் வாசிகளுக்கிடையில் ஒற்றுமையில்லாமலாக்கி, பிரித்தாளும் தந்திரத்தை உபயோகிக்க வேண்டுமல்லவா? இதற்காகவென்றே யூதருக்கு வாக்குறுதிகள் பலவளித்து, பலஸ்தீனில் அவர்களைக் குடியேற்றத் தொடங்கினர். சுயேச்சைக்காகப்போராடும் அறபியர் பிரிட்டிஷாரின் இந்தத் திட்டத்தையும் எதிர்த்தனர். உடனே யூதருக்கும் அரபியருக்கும் விரோதத்தை மூட்டிவிட்டு இப்பொழுது பலஸ்தீனத்தை யூதர்நாடு என்றும், அறபியர் நாடு என்றும் பங்கு போட்டுவிட பிரிட்டிஷார் முயலுகின்றனர். தொண்ணூற்று மூன்று சதவிகிதம் இருந்த முஸ்லிம்கள் இப்பொழுது, யூதர் குடியேற்றத்தால் எழுபது சத விகிதமாக இருக்கின்றனர். எனவே, சுதந்திரக் கிளர்ச்சி வகுப்புக்கலகமாக மாற்றப்பட்டு யூதருக்கு சகாயம் செய்வது போல் யூதர்களைக் கொண்டு அறபியரைக் கொலை செய்யும் தொழில் புரியப்பட்டு வருகிறது. இயற்கையாகவே தாயகமில்லாமல் தவித்துக் கொண்டிருந்த யூதருக்கு பிரிட்டிஷாரின் சகாயம் கிடைத்ததால், பலஸ்தீனத்தில் அதிகாரம் செலுத்தலாம் என்ற பேராசையால், பிரிட்டிஷாரின் உதவியின் பேரில் பலஸ்தீனைவிட்டு அறபியர்களைத் துரத்திவிடுவதற்கு அவர்களாலியன்ற சகல முயற்சிகளையும் யூதர்கள் செய்து வருகின்றனர்.

பிரிட்டிஷார் இவ்விரு வகுப்பாருக்குமிடையில் சண்டையை மூட்டிவிட்டு, சமாதானத்தை நிலை நிறுத்துவதாக வெளிக்குக்கூறி அறபியரை சுட்டு வீழ்த்துகின்றனர். இன்று பலஸ்தீனில் ராணுவ ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அறபியர் யூதர்களாலும், பிரிட்டிஷ் சிப்பாய்களாலும் கொல்லப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இவ்வித நிலைமையைப் பிரிட்டிஷார் உண்டாக்கியதற்கு முக்கிய காரணம் மூன்றுள. 1, அங்குள்ள புண்ணிய க்ஷேத்திரங்களில் முஸ்லிம் ஆட்சி இருக்கக்கூடாது. 2, இந்தியா முதலிய கீழ்நாடுகளில் தங்களுக்கிருக்கிற ஆதிக்கத்தை ஸ்திரப் படுத்துவதற்காக, அந்நாட்டைத் தங்கள் ஆதீனத்தின்கீழ் வைத்துக் கொள்ளவேண்டும். 3, சூயஸ் கால்வாய், ஜிப்ரால்டர் முதலியவைகள் வழியாகத் தங்கள் கடற்படை கீழ்நாட்டுக்குச் செல்

வதில் தடையோ, தாமதமோ ஏற்படுங்கால், ஆகாய விமானங்கள் மூலம் வெகு சீக்கிரத்தில் கீழ்நாடு செல்ல பலஸ்தீன் பிரிட்டிஷாருக்கு அவசியம் வேண்டும். தவிரவும், இராக், ஈரான் ஆகிய நாடுகளிலுள்ள பெட்ரோல் எண்ணெய்களைத் தங்கள் நாட்டிற்குப் பணச் செலவில்லாமல், துரிதமாகக் கொண்டு போவதற்கு பலஸ்தீன் மிக உபயோகமாக இருக்கிறது. எனவே, இத்தியாதி காரணங்களை உத்தேசித்து பிரிட்டிஷார் பலஸ்தீனத்தில் நடனம் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

பலஸ்தீன் அறபியர் தங்கள் நாட்டில் பிற ஜாதியினர் குடியேறுவதை அடியுடன் ஆக்ஷேபிக்கவில்லை. தங்கள் நாட்டில் தங்களுக்குப் பூரண சுயேச்சை இருக்கவேண்டும்; பிறஜாதியினர் மைனரிட்டிகளாக வாழலாம்; மைனரிட்டிகளாக இருப்பவருக்கு நியாயமான உரிமைகளை ஏனைய அரசாங்கங்கள் அளித்திருப்பதுபோல, நாங்களும் நியாயமான உரிமைகளை அளிக்கிறோம் என்றே அவர்கள் கூறுகின்றனர். யூதர்களுக்கு இங்கு தாயகம் ஏற்படுத்தி, அவர்களுக்குப் பூரண உரிமைகளை அளிக்கவும், அவர்களது உரிமைகளைக் காப்பதற்காக மேலதிகாரம் வகிக்கவும் பிரிட்டிஷார் விரும்புகின்றனர். பிரிட்டிஷாரின் சகாயத்தை நம்பி யூதர்கள் அங்கு தனியாட்சி செலுத்த முயலுகின்றனர். இது தான் அங்குள்ள கிளர்ச்சிக்கும், கொலை பாதகங்களுக்குமுள்ள மூலகாரணம். எனவே, பிரிட்டிஷாரின் இந்நோக்கம் ஈடேறுமா என்பதை இனி கவனிப்போம்.

பலஸ்தீனத்தை இறைவன் முஸ்லிம்களுக்கு அளித்தான். இறைவனது நாட்டமின்றி அந்நாடு முஸ்லிம்களது கையை விட்டுப் போகாது. யூதர்களுக்கு இறைவன் தாயகமில்லாமல் செய்து விட்டான். ஆகவே, பலஸ்தீனத்தில் முஸ்லிம்களது ஆதிக்கத்தை ஒழிக்க முயலுவதும், யூதருக்குத் தாயகம் ஏற்படுத்திக்கொடுக்க விரும்புவதும் இறைவனது சித்தத்திற்கு எதிரான செய்கைகளாகும். பிரிட்டிஷாரின் தற்போதய முயற்சி முஸ்லிம்களுக்கு விரோதமானதல்ல; இறைவனுக்கு விரோதமானது. ஆதலால், பிரிட்டிஷாரின் இவ்விரு முயற்சிகளும் தோல்வியுறுவது திண்ணம். அவமானத்துடன் இம்முயற்சிகளைக் கைவிட்டு பலஸ்தீனத்திலிருந்து பிரிட்டிஷார் வெளியேறுவதற்குமுன் கௌரவமாக வெளியேறுவார்களா? என்பதையே உலக முஸ்லிம்கள் இப்பொழுது கவனித்து வருகின்றனர். அங்குள்ள அறபியர்கள் துன்பப்படுகிற அளவிற்கு உலக முஸ்லிம்களது அனுதாபம் அவர்கள்பால் அதிகப்படுகிறது. இப்பொழுதே அரபி அறசர்கள் பிரிட்டிஷாருக்கு எச்சரிக்கை செய்ய வாரம்பித்து விட்டனர். அரபி அரசாங்கங்கள் பலஸ்தீனிலுள்ள அரபியருக்கு பகிரங்கமாக ராணுவ உதவி புரிய முன்வந்து, அறபி அரசர்களை பிரிட்டிஷார் எதிர்ப்பார்களாயின் உலக முஸ்லிம்கள் அனைவரும் பிரிட்டிஷாருக்கு விரோதமாகக் கிளம்பிவிடுவர். அப்புறம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எங்கும் பல சங்கடங்கள் விளையலாம். ஆதலால், உலக முஸ்லிம்களைப் பகைத்துக்கொள்வதற்கு முன்னதாகவே, பலஸ்தீன் அறபியருக்குப் பூரண சுயேச்சையை அளித்து முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்வது நலம் என எச்சரிக்கை செய்கிறோம்.

முஸ்லிம்கள் பிளவுபட்டுக் கொண்டிருந்த காலம் மலையேறிவிட்டது. தங்களுக்குள் ஒற்றுமையில்லாமல் தங்களது நாட்டைப் பிறரது ஆதிக்கத்தில் விட்டு விட்டு தங்கள் உரிமைகளை இழந்துவிட்டதை இப்பொழுது முஸ்லிம்கள் உணர்ந்து விட்டனர். ஆகவே, இனிமேல் ஒற்றுமை இல்லாமலிருக்கலாகாது என்பதற்காக முஸ்லிம் அரசாங்கங்கள் தங்களுக்குள் உடன்படிக்கைகளைச் செய்து கொண்டி

ருக்கின்றன. பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவி செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கின்றனர். இவ்வித நிலைமையில் முஸ்லிம் அரசாங்கங்களிலே ஏதேனும் ஒன்று பலஸ்தீன் அறபியருக்கு உதவி செய்ய முன்வருமாயின், அதனை அற்பமாக மதித்து பிரிட்டிஷார் எதிர்ப்பார்களாயின், முஸ்லிம் அரசாங்கங்கள் எல்லாவற்றையும் பிரிட்டிஷார் பகைத்துக்கொள்ள நேரிடும். தவிரவும் ஐரோப்பாவின் நிலை கொந்தளிப்பாக இருக்கிற இச்சமயத்தில் பிரிட்டிஷார் முஸ்லிம் அரசாங்கங்களின் விரோதத்தைத் தேடிக்கொள்ளாமலிருப்பது புத்திசாலித்தனமாகும். ஆகவே, ராஜதந்திரத்திற் சிறந்த பிரிட்டிஷார், சொற்ப வசதியை உத்தேசித்து உலக முஸ்லிம்களின் விரோதத்தைத் தேடிக்கொள்ளாமல், பலஸ்தீன் அறபியருக்குப் பூரண சுயேச்சையளித்து உலக முஸ்லிம்களின் ஆதாரவை அடைய முயலுவார்களாக.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
218943
சென்னை-600 008

மதத்தின் அவசியம்

மனித இயற்கையிலேயே மதம் சம்பந்தப்பட்டிருக்கிறதென்ற விஷயம் அனுபவப் பூர்வமாகவும், சரித்திரப் பூர்வமாகவும் ருஜுவாகிறது. மனிதன் தானாக உண்டாகிவிடவில்லை. தன்னையும், இவ்வுலகிலுள்ள இதர பொருள்களையும் சிருஷ்டித்தவன் ஒருவன் உளன் என்பதை மனிதன் தனது அறிவின் உதவியால் அறிந்திருக்கிறான் என்ற விபரம் பூர்வ காலத்திலுள்ள கற்சாசனங்களிலிருந்து தெரியவருகிறது. இதிலிருந்து கடவுளின் பெயரை அறிந்துகொள்வதற்குமுன்னதாகவே, மனிதன் தனக்குமேலாக ஒருவனிருக்கிறான்; அவனை வணங்கவேண்டும் என்று உணர்ந்துகொண்டிருக்கிறான் என்பது புலப்படுகிறது. தவிரவும், கல்வி, அறிவு, நாகரீகம் என்பதைக் கொஞ்சமும் தெரிந்துக்கொள்ளாத காட்டுமிராண்டிகளான ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்டிரேலியாவின் காடுகளில் வாசஞ் செய்யும் ஜனங்களின் வாழ்க்கை முறைகளைக் கவனிக்கும்போது, அவர்களும் ஏதோ ஒருவகையில் மதத்தைப் பின்பற்றி வருபவர்களாகவே காணப்பட்டு வருகின்றனர். மரணத்திற்குப்பிறகுள்ள வாழ்க்கையைக் குறித்த நம்பிக்கை அவர்களுக்குமிருக்கிறது; தங்களைப் பார்க்கினும் மேம்பாடான ஒரு சக்தி இருந்து வருகிறதென்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள் என்ற விபரம் புலனாகின்றது. இவ்வித உணர்வுதான் மதத்தின் ஆன்மா. மதத்தை அடியுடன் மறுப்பவர்கள்கூட, மதவாதிகள் கடவுளுக்கு வைத்திருக்கிற பெயரைத்தான் மறுக்கமுடியுமே யன்றி, அறிவுக்கெட்டாத ஒரு சக்தி இருக்கிறதென்பதை மறுப்பதில்லை. அவ்வாறு மறுக்கவும் அவர்களால் இயலாது. 'அப்லாத்தூன்' என்பவர் ஒரு பெயரைக் கூறுகிறார். 'அரஸ்தூ' என்பவர் முதற்காரணம் என்கிறார். அறிவுக்கு எட்டாப் பொருள் என்று மற்றொருவர் கூறுகிறார். இவ் வகிலத்தின் அதிகாரி என இன்னொருவர் கூறுகிறார். இவ்விதமாக தத்துவ சாஸ்திரிகளும், விஞ்ஞானிகளும், நிரீஸ்வரவாதிகளும், பிறரும் தங்கள் தங்களுக்குத் தோன்றியவாறு ஒரு பெயரைக் கூறுகிறார்களே யன்றி, கடவுளை அடியுடன் மறுக்கமுடியவில்லை. எனவே, தெய்வ பக்தியை யூட்டுகிற மதம் மனித இயற்கையிலேயே சேர்ந்திருக்கிறது என்பது இதனால் புலனாகின்றது.

சிலருக்கு மதம் பிடிக்காம லிருக்கலாம், சிலர் மதத்தை உணராம லிருக்கலாம். இதனால் மனிதப் பிறவியிலேயே மதம் சேர்ந்திருக்கிறது, மனிதனுக்கு மதம் அவசியம் என்ற உண்மை பொய்பாகிவிடமாட்டாது. எவ்வாறெனில், மனிதனுக்குப் பேசும்சக்தி இயற்கையாகவே இருக்கிறது. சிலர் ஊமையாகப் பிறக்கின்றனர். இதனால் மனிதனுக்குப் பேசும் ஆற்றல் இயற்கையிலேயே இல்லை யென்றேற்பட்டு விடாதல்லவா? சிலருக்குப் பிறவியிலேயே புலவத்தன்மை இருக்கிறது. சிலருக்கு சிற்ப சாஸ்தி

ரத்தில் அபாரப் பிரேமை இருக்கிறது. சிலர் சங்கீதத்தில் வல்லவராக இருக்கின்றனர். சில ருக்கு சங்கீதம் என்றால் பிடிக்காது. சிலருக்கு எவ்வளவு முயன்றாலும் செய்யுள் இயற்ற இயலுவதில்லை. இவ்விதம் மனிதர் பற்பல வித மாக இருப்பதுபோல், சிலர் மதத்தை வெறுப் பவராக இருக்கக்கூடும், சிலர் மதத்தை உண ராம லிருக்கக்கூடும். இதனால் மதமே இல்லை என்றும், மதம் இயற்கைக்கு மாறானது என்றும் ஏற்பட்டுவிடாது. இனி மதம் என்பது என்னவென்பதைக் கவனிப்போம்.

பற்பல மதங்களைச் சேர்ந்த அறிஞர்கள் மதம் என்பதற்கு பற்பலவித இலக்கணங்களைக் கூறி இருக்கின்றனர். அவை ஒவ்வொன்றை யும் இங்கெடுத்து எழுதி வியாக்யானம் செய்வ தற்கு இடந்தாராதாகையால், இங்கு ஒரே ஒரு இலக்கணத்தை மட்டிலும் குறிப்பிட விரும்பு கிறேன்.

மதம் என்பதற்கு வழி என்பது பொருள். ஆனால், அல்லாஹு தஆலாவின்பால் சேர்த்து வைக்கும் வழி எதுவோ, அதற்கு மதம் என்று பெயர். தெய்வச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதன் மூலம் இந்த ஜீவியத்தின் நோக் கத்தை அடைவதற்கு தர்க்க சாஸ்திரிகள் மதம் என்று கூறுகின்றனர். அல்லாஹு தஆலாவின் திருப்தியை தனது திருப்தியைப் பார்க்கினும் முதன்மையாகக் கருதுவதுதான் மதம் என்ப தாக மத பக்தர்கள் கூறக்கூடும். கடவுள் ஒரு வன் உளன், மரித்த பிறகும் ஜீவியமிருக்கி றது, இவ் உலக ஜீவியத்தில் நல்லொழுக்கமா யிருக்கும் பொறுப்பை உணர்தல், மறுமையில் நன்மை தீமைப் பயனை அடைதல், பாபம் செய்தல் அல்லாஹு தஆலாவிற்கு திருப்தி யில்லாதது என்பன போன்றவைகள்தான் மதத்தின் முக்கிய அம்சங்கள். இவைகளில் முதலிரண்டும் மதத்திற்கு உயிர் போன்றவை எனக் கூறல் பொருந்தும்.

மதத்தினால் மனிதனுக்கு ஒரு ஆறுதல் ஏற்படுகிறது. இறைவன் எனக்கு உதவி புரிகிறான்; இதனால், இவ்வாழ்க்கையின் பிரச் னைகளில் நான் நிச்சயம் வெற்றியடைவேன்; இறைவனது கருணை என்பாலிருப்பதால், இவ் வுலகில் நிகழும் இன்னல்கள் எனக்குத் தீங்கு செய்ய முடியா என்ற நம்பிக்கை மதத்தினால் ஏற்படுகிறது. இவ்வித நம்பிக்கையினால் மனி தன் அடையும் ஆறுதல் ஒரு பெரிய அருட் கொடையாகும். இதற்கு நிகரான செல்வம் வேறொன்றுமில்லை. இவ்வித ஆறுதல், மனச் சாந்தி, பொன்னாலும் பொருளாலும், மண்ணா லும், பெண்ணாலும், பிள்ளையாலும் உண்டாகப் போவதில்லை.

இவ்வுலகில் தோன்றும் கஷ்ட சங்கடங்களை எதிர்த்துச் சகித்துக்கொள்வதற்குரிய சக்தியை மதம் அளிக்கின்றது. மதம்தான் மனிதனுக்கு நல்லொழுக்கத்தை உண்டாக்குகிறது. மனித னது மூளைச் சக்தியையும் ஸ்தூல சக்தியையும் நடு நிலைமையில் வைப்பதும் மதமேயாகும். அறிவு உணர்ச்சியை அடக்கி ஒடுக்க முடியாது; மனிதனுக்கு அறிவு மிகவும் பிரயோஜனமா னது என்பதிற் சந்தேகமில்லை. என்றாலும், சில சமயங்களில் மனித உணர்ச்சி கட்டுக் கடங்காததாகி விடுகிறது. அப்பொழுது, அறிவு ஒன்றும் செய்ய முடியாது. இவ்விதச் சந்தர்ப்பங்களில் மதம்தான் அவனை நிதானம் தவறவிடாமல் தடுத்து அவனைக் காப்பாற்று கிறது.

அரசாங்கச் சட்டம் மனிதனைத் திருத்த முடியாது. சில சமயத்தில் மனிதன் அரசாங் கச் சட்டத்திற்குப் பயந்து பகிரங்கமாக ஒரு குற்றத்தைச் செய்யாதிருக்கலாம். ஆனால், மறைவில் அதனைச் செய்யவிடாமல் அச்சட் டம் தடுக்க முடியாது. சில சட்டத்திற்கு மனிதன் கீழ்ப்படியவேண்டியதேற்படுகிறது; ஆனால், அவனது மனம் அதற்கு நேர்மாறா கவே இருக்கிறது. ஆகவே, அரசாங்கச் சட் டம் புறத்தில், ஸ்தூலத்தைக் கட்டுப்படுத்த முடியுமே யன்றி, அகத்தில் அவனது உணர்ச் சியையும் எண்ணத்தையும் கட்டுப்படுத்தாது. ஆனால், மதம் அவனது அகம், புறம், உணர்ச்சி, அறிவு ஆகிய யாவற்றையும் கட்டுப்படுத்து கிறது.

புத்தியும் மனசாக்ஷியுமிருக்கும்போது மதத் திற்கு என்ன அவசியம் என்று சிலர் நினைக்கக் கூடும். இவ்விரண்டும் மதத்தின் ஊழியர்களே யல்லாமல் வேறில்லை. மதத்தின் ஆதிக்கம் இவ் விரண்டின்மீது மில்லையேல், இவ்விரண்டாலும் ஒன்றுமே செய்துகொள்ள முடியாது. உலக சரித்திரத்தைக் கவனிக்கின், இற்றைக்கு இரண் டாயிரம் வருஷங்களுக்கு முன்னதாக இருந்த 'அபலாத்தூன்' தனது அகமியத்தை உணர்ந்து கொள்ள முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார் என்பது தெரிய வருகிறது. இவ்விஷயத்தில் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் மனிதன் எந்நிலையிலிருந்தானோ அதே நிலையில் தான்

இன்றுமிருக்கிறுன் என்பதாக ஒரு அறிஞர் கூறியுள்ளார். இவ்வித நிலைமையில் மனிதன் தனது அறிவைக் கொண்டு மாத்திரம் எவ்வாறு கடைத்தேற முடியும்? ஒன்றும் முடியாது. ஆகவே, இறைவனின் உதவி மனிதனுக்கு இன்றியமையாதது; இவ்வுதவிக்குத் தான் "மதம்" என்று பெயர்.

"அல்லாஹு தஆலாவிற்குக் கீழ்ப்படிவதைப் பார்க்கினும் சிறந்த நற்காரியம் வேறென்றுமில்லை" என்பதாக 'அப்லாத்தூன்' கூறி இருக்கிறுர். ஆகவே, அவனுக்குக் கீழ்ப்படிவதுதான் மதத்தின் சாரம். மனிதன் நகர வாசியாகவும், பட்டிக்காட்டானுகவும், அரசனுகவும், ஆண்டியாகவும், அதிகாரியாகவும், நீதிபதியாகவும் பற்பல விதமான அந்தஸ்திலிருக்கிறுன். ஆனுல், அவனில் கடவுளின் அடிமை என்ற எண்ணமில்லாவிடில், அவனது வாழ்க்கையின் தன்மையே அர்த்த மற்றதாகி விடுகிறது. ஆழ்ந்து சிந்திக்குமிடத்து "ஆண்டவனின் அடிமை" என்பதுதான் மனிதனின் சிறப்புப் பெயராக இருக்கிறது என்பது தெரியவரும்.

"மதம் ஜனங்களை வெவ்வேருகப்பிரித்துவிடுகிறது; மதம்தான் வேற்றுமைக்குக் காரணம்" என்பதாகச் சிலர் கூறுகின்றனர். இது சரியான அபிப்பிராயமன்று. ஹிந்துவோ, முஸ்லிமோ, கிறிஸ்துவனே, இதரவனே மதத்தைச் சரியாக உணர்ந்து கொள்ளாமல், தனது சுய நலத்தின் காரணமாக சண்டை போட்டுக்கொள்வதையும், பிளவுபட்டு நிற்பதையும் கண்டு, மதத்தின்மீது குறை கூற முடியாது. இரண்டு ரயில் வண்டிகள் ஒன்றேடொன்று மோதிக்கொண்டு உயிர் பொருள் நஷ்டங்களேற்படுவதாக வைத்துக் கொள்வோம். இதனுல் ரயில் வண்டிகளே உதவாது என, எவரேனும் கூறமுடியுமா? ரயில்வே டிரைவர் செய்த தவறுக்கு ரயில் வண்டி என்ன செய்ய முடியும். இதுபோல மதத்தில் நம்பிக்கையுள்ள சிலர் ஒருவரோடொருவர் சண்டை போட்டுக்கொண்டால், அதற்காக மதமே கூடாது என்று கூறுவது சரியான வாதமாகாது.

"யுக்தியையும் அறிவையும் விருத்தி செய்வதற்கு மதம் முட்டுக்கட்டையாக இருக்கிறது. ஏனெனில், மதத்தில் சொன்னபடி ஏன்? எதற்காக? என்றுங் கவனியாமல் கீழ்ப்படிய வேண்டும் என்று அம்மதவாதிகள் கூறுகின்றனர்" என்று சிலர் குறை கூறுகின்றனர். அறிவையும் புத்தியையும் விருத்தி செய்வதற்குத் தடையாக இருப்பது மதமாக இருக்க முடியாது. இதற்காக இங்கு ஒவ்வொரு மதத்தையும் எடுத்து தனித்தனியே விவாதிக்கச் சந்தர்ப்பமில்லை என்றுலும், இஸ்லாம் மதத்தைப்பற்றி மட்டிலும் சில வார்த்தை கூற முடியும். இஸ்லாம் மதம் ஒவ்வொரு காரியத்திலும் புத்தியை உபயோகிக்கும்படியாகவே கூறுகிறது. ஆகவே, அம்மதத்திலுள்ள ஒவ்வொரு அம்சத்தையும் நன்குஆராய்ந்து பார்ப்பவருக்கு அது புத்திக்குகந்தமதம் என்பது வெளியாகும். "மதம் மூடநம்பிக்கையையும், கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதையும் போதிக்கிறது; மதத்தைப் பின்பற்றுபவர்களின் உணர்ச்சியையும்கூட அது அடிமைப் படுத்திவிடுகிறது" என்று சிலர் கூறுகின்றனர். இவ்வாறு கூறுவதும் தவருகும். ஏனெனில், மதம் வேண்டாம் என்று கூறுபவர்கள் பெரும்பாலும் மூடக்கொள்கையுள்ளவர்களையும் மதத்துவேஷிகளையும், தனிப்பட்ட மனிதர்களுக்குக் கௌரவமளிப்பவர்களையுமே காண்கின்றனர்; அன்னேருடன் கலந்து உறவாடுகின்றனர்; இவர்களிலுள்ள சில மதவாதிகளைப் பார்த்து இவ்வித அபிப்பிராயத்திற்கு வருகின்றனர். இவர்கள் கண்ட அல்லது பழகிய சிலரினுல், உலகிலுள்ள எல்ல மதங்களுமே குறுகிய புத்தியுள்ளதாகவோ, மூடக்கொள்கை நிறைந்ததாகவோ இருக்குமென முடிவுசெய்துவிடுவது முறையல்ல. இதர மதங்களைப்பற்றி நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனுல், இஸ்லாம் மதத்தில் இவ்வாருன குறைகளெதுவுமில்லை என்று நாம் உறுதியாகக்கூற முடியும். அம்மதத்திலுள்ள திருகுர்ஆனை ஆரம்பமுதல் கடைசிவரை நன்கு படித்துப்பார்க்கட்டும். ஓரிடத்திலாவது அவர்கள் கூறும் குறைகளிலெதையும் அவர்கள் கண்டு கொள்ள மாட்டார்கள்.

"மனிதனது தேவைகள் எல்லாக்காலத்திலும் ஒரே மாதிரி நிரந்தரமாக இல்லை. புதுப் புது காரியங்களும் தேவைகளும் தினசரி உண்டாகிக்கொண்டே இருக்கின்றன. ஆதலால் நாம் ஒரு மதத்தைப் பின்பற்றி அதில் கூறப்பட்டுள்ள திட்டத்தை ஒப்புக்கொண்டால் அது மனிதனது தேவைக்குத் தக்கவாறு நடந்துகொள்ளவிடாமல், கஷ்டத்திலாழ்த்திவிடும்" என்று சிலர் கூறலாம். இவ்வித குறை

யும் இஸ்லாம் மதத்திலில்லை. இஸ்லாம் மதம் சத்தியம், யுக்தி ஆகியவைகளையே அஸ்திவாரமாகக்கொண்டது. சில பிரதான விதிகளையே அது மனிதருக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. உபவிதிகளை அவ்வக்காலத்திற்கேற்றவாறு ஏற்படுத்திக்கொள்ள அனுமதி கொடுத்துள்ளது. தவிரவும், இஸ்லாம் மனிதனது வாழ்க்கையின் முழு அம்சங்களுக்குமுள்ள திட்டத்தை சமர்ப்பிப்பதால் இவ்வித தடைகளெதுவும் அதிலில்லை என்பது நன்குபுலனாகும்.

"மதம் படிக்காதவர்களுக்கும் பாமரர்களுக்கும்தான் தேவை; அறிவுள்ளவர்களுக்கும் படித்தவருக்கும் தேவை இல்லை" என்று சிலர் கூறலாம். மதத்தின் நோக்கத்தையும் அந்தஸ்தையும் உணராதவர்தான் இவ்வாறு கூற முடியும். அல்லாஹு தஆலாவிற்கு திருப்தியானது எது என்பதை அறிவிப்பதும், அகத்தூய்மையை உண்டாக்குவதும்தான் மதத்தின் நோக்கம். எவ்வளவு கல்வியைக் கற்றாலும் அக்கல்வி இக்காரியங்களைச் செய்துவிட முடியாது. ஆதலால் மதம், படித்தவர் பாமரர் யாவருக்கும் அவசியமானதேயாகும். ஆகவே, மதம்தான் மனிதனது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகவிருக்கிறது; மதம் மனிதனை பாதாளத்திலாழ்த்தி விடுகிறது; மதத்தைத் தொலைத்து தலைமுழுகினால்தான் மக்கள் முன்னேற்ற பாட்டையில் தடங்கலன்றி செல்ல முடியுமென்று நாஸ்தீக் குழுக்கள் கூறித்திரியும் பகற்கூற்றுக்கள் ஆதாரம், அடிப்படை யற்ற பொய்க்கூற்றென்பது இனிது புலனாகின்றது.

ஜாமி உல் அஜ்ஹர்

ஹஜ்ரத் நூஹ் (அலை.) அவர்கள் ஆயிரம் வயது வரை வாழ்ந்தார்கள் என்பது சரித்திரப் பிரசித்தம். இப்பொழுது சமீபத்தில், எகிப்து "ஜாமி உல் அஜ்ஹர்" கலாசாலை ஹஜ்ரத் நூஹ் (அலை.) அவர்களது வயதைக் கடந்துவிடும் எனத் தோன்றுகிறது. தற்போது உலகிலிருந்துவரும் கலாசாலைகளில் இத்தாலியிலுள்ள போலோனியா கலாசாலையைத் தவிர, வேறு எந்தக் கலாசாலைக்கும் இத்தனை வயது இல்லை. எனவே, உலகில் மிகப் பழமையான கலாசாலையாகிய அஜ்ஹர் கலாசாலை எப்பொழுது, எவரால் ஸ்தாபிக்கப்பட்டது என்பதைப் பற்றிச் சிறிது கூறுவது அவசியமென நினைக்கிறோம்.

பகுதாது நகரைத் தலைமையாகக்கொண்டு ஆட்சிபுரிந்து வந்த அப்பாஸியா வம்சத்து முஸ்லிம் அரசாங்கம் க்ஷீணதிசையடைந்திருப்பதை யுணர்ந்த முஇஸ்ஸுத்தீன் மகுரிபி பாத்திமி என்பவர், எகிப்து தேசத்தைக் கைப்பற்றுவதற்காகத் தனது சேனாதிபதியான ஜௌஹரின் தலைமையின்கீழ் ஒரு படையை அனுப்பினார். அவர் தனது எகிப்திய வெற்றிக்கு அறிகுறியாக ஹிஜ்ரீ 359-ம் வருஷத்தில் ஒரு மஸ்ஜிதைக்கட்டி, அதற்கு "அல் அஜ்ஹர்" என்பதாகப் பெயரிட்டார். அக்காலத்தில் மஸ்ஜிதுகளிலேயே கல்விச் சாலைகளும் இருப்பது வழக்கம். இதற்கிணங்க, இம் மஸ்ஜிதும் கல்விச்சாலையாயிற்று. எகிப்திலுள்ள பாத்திமி வம்சத்து கலீபாவான "அல் அஜீஸ் பில்லாஹ்" என்பவர் ஹிஜ்ரீ 365-ம் வருஷத்தில் இம் மஸ்ஜிதில் ஒரு கல்விச்சாலையையும் ஸ்தாபித்தார். 35 மாணவர்களைக்கொண்டு இக் கல்விச்சாலை ஆரம்பமாயிற்று. இப்பொழுது இச் சர்வ கலாசாலையில் 14 அல்லது 15 ஆயிரம் மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். பாரிஸ் சர்வ கலாசாலையைத் தவிர்த்து வேறு எந்த சர்வ கலாசாலையிலும் இத்தனை மாணவர்கள் இல்லையென்று எகிப்தியர் கூறிவருகின்றனர்.

இக் கலாசாலையில் இத்தனை ஆயிரம் மாணவர்கள் கல்விபயிலுவதால், இதற்கென கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் மிக ரம்மியமாக இருக்குமென்றும், இதன் கட்டிடத்தின் காம்பௌண்டு பலமைல் சுற்றளவுள்ளதாக இருக்குமென்றும், சாதாரணமாக எவரும் கருதுவர். இதே எண்ணத்துடன் அநேகர் எகிப்து தலைநகரான கைரோவிற்குச் செல்வதுமுண்டு. அவ்வாறு செல்பவர்கள் ஏமாற்ற மடைவதுடன், அந்த சர்வ கலாசாலையைப்பற்றி எவ்வளவு உயர்வாக மதித்திருந்தனரோ அவ்வளவுக்கு

கேவலமாகவும் மதிப்பதுண்டு. ஆனால், அக் கலாசாலையின் உண்மை நிலைமையை உணர்ந்தவர்கள் அவ்வாறு மதிக்க மாட்டார்கள்.

இக் கலாசாலையை ஸ்தாபித்த அரசர் அல் அஜீஸ்பில்லாஹ் பாத்திமீ ஷீஆ வகுப்பிலுள்ள இஸ்மாயீலி பிரிவைச் சேர்ந்தவர். இக் கலா சாலையில் இப் பிரிவாரின் மதக்கொள்கைகளே ஆரம்பத்தில் போதிக்கப்பட்டு வந்தன. அத்துடன் அவ்வரச வம்சத்தினர் எகிப்தை ஆட்சி புரிந்துவந்த காலத்தில் கட்டிய மஸ்ஜிதுகள், கல்விச்சாலைகள் யாவும் இந்த சர்வ கலாசாலையுடனேயே இணைக்கப்பட்டதுடன், இம் மஸ்ஜிதுகளுக்கும், கல்விச்சாலைகளுக்கும் அவ் வரசர்களால் விடப்பட்ட வக்புச் சொத்துக்கள் யாவும் இக் கலாசாலையுடனேயே இணைக்கப்பட்டன.

அப்புறம், எகிப்தில் பாத்திமீ வம்சத்தினரின் ஆதிக்கம் நீங்கி, சுன்னத்து வல் ஜமாஅத்தைச் சேர்ந்த அய்யூபிய்யா வம்சத்தினர் அதிகாரத்திற்கு வந்தனர். இவர்கள் அதிகாரத்தை ஒப்புக்கொண்டவுடன் அஜ்ஹர் கலாசாலையில் இஸ்மாயீலிப் பிரிவாரின் மதக் கொள்கைகளைப் போதிப்பதைத் தடைசெய்து, இதனைச் சேர்ந்த கல்விச்சாலைகளை யெல்லாம் மூடி, இவைகளின் வக்புச் சொத்துக்களையும் ஜப்தி செய்து விட்டனர். அப்புறம் 'மலிக்குல்லாஹிர் பேபரஸ்' என்பவர் அதிகாரத்திற்கு வந்தபிறகு அஜ்ஹர் கலாசாலைகள் மறுபடியும் திறக்கப்பட்டன. வக்புச் சொத்துக்களும் திரும்பக் கொடுக்கப்பட்டன. ஆனால், சுன்னத்து வல்ஜமாஅத்தாரின் மதக் கொள்கைகளே இக் கலாசாலைகளில் படித்துக் கொடுக்க அனுமதிக்கப்பட்டது. அன்றுமுதல் இன்றுவரை இக் கலாசாலைகளில் இதே மதக் கிரந்தங்கள்தாம் போதிக்கப்படுகின்றன.

மொகலாய வம்சத்தினர் பகுதாது நகரைக் கைப்பற்றி அழித்து, ஷாம் தேசத்திலும் படையெடுத்து ஹலப், தியார் பக்கர் முதலிய நகரங்களைக் கைப்பற்றிய போது எகிப்து தேசத்தை 'அல்மலி குல் முலப்பர்' என்பவர் ஆட்சிபுரிந்து வந்தார். இவர் அதிர்ஷ்ட வசத்தால் துருக்கியரின் இப் படையெடுப்பை எகிப்தில் பிரவேசிக்க விடாமல் தடுத்து நிறுத்தினர். இவருக்கு உதவியாக இராக் ஷாம் ஆகிய தேசங்களிலுள்ள கியாதி பெற்ற ராணுவ நிபுணர்கள் ஒன்று கூடியதால், இவர் மொகலாய வம்சத்தினரான துருக்கியரைத் தோற்கடித்து, எகிப்தை அழிவுறாமல் காப்பாற்றினர். ஆகவே, மொகலாய வம்சத்தினரால் இராக், ஷாம் முதலிய நாடுகளிலுள்ள பெயர் பெற்ற கல்விச் சாலைகள் அழிக்கப்பட்டதால், அங்குள்ள மாணவர்களும் ஆசிரியர்களும் எகிப்தின் அஜ்ஹர் சர்வகலாசாலைக்கு வந்தனர். அன்று முதல் இச்சர்வ கலாசாலைக்கு கீழ்நாடுகளில் கீர்த்தி பெருகிற்று. இஸ்லாமிய உலகின் பலபாகங்களிலிருந்தும் ஏராளமான மாணவர்கள் வந்ததாலும் இவர்கள் ஷாபிஈ மாலிக்கி, ஹன்பலீ, ஹனபீ மதுஹபுகளைச் சேர்ந்தவர்களாக இருந்ததாலும், மாணவர்களின் சௌகரியத்தை உத்தேசித்து இந்நான்கு மதுஹபுகளையும் சேர்ந்த உலமாக்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். எகிப்து தேசத்தில் பெரும்பாலர் ஷாபிஈ மதுஹபைப் பின்பற்றுபவர்களாக இருந்தாலும், இங்கு கல்வி பயிலும் மாணவர்களைக் கவனித்து ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதால் இங்குள்ள ஆசிரியர்களிற் பெரும்பாலர் ஹனபீ மதுஹபியினரே யாவர்.

இக்கலாசாலையின் கிளைகள் எகிப்து தேசமெங்கும் அநேக நகரங்களிலும் கிராமங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. எகிப்தின் பிரதான பட்டணங்களான கைரோ, அலக்ஜாண்ட்ரிய்யா, தன்தா, ஸூக், திம்யாத் முதலிய நகரங்களில் இதன் பிரதான கிளை ஸ்தாபனங்களிருந்து வருகின்றன. கைரோ நகரில் மட்டிலும் பல கிளை ஸ்தாபனங்கள் இதற்குண்டு. சுருங்கக் கூறுமிடத்து, எகிப்து தேசத்திலுள்ள மார்க்கக் கல்விச்சாலைகள் அவை சிறியதாயினும்சரி, பெரியனவாயினும்சரி, யாவும் இச்சர்வ கலாசாலையைச் சேர்ந்தனவேயாகும். இவை எல்லாவற்றிலும் வாசிக்கும் மாணவர்கள்தான் மொத்தத்தில் 15 ஆயிரம் பேர். இவர்களுக்கு 200-க்கு அதிகமானவர்கள் ஆசிரியர்களாக இருக்கின்றனர். இவர்களை யல்லாமல் அநேக இன்ஸ்பெக்டர்களு மிருக்கின்றனர். ஆகவே, இவைகளை மேல் பார்க்கும் மேலாதிகாரிகள், ஆசிரியர்கள் இவைகளின் வக்புச்சொத்துக்களைப் பரிபாலிப்பவர் யாவருக்கும் இச்சர்வ கலாசாலையிலிருந்தே சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஏழை மாணவர்களுக்கு இலவசமாகச் சாப்பாடு முதலியவைகள் கொடுக்கப்பட்டு வந்தன. இப்பொழுது அவைகள் நிறுத்தப்பட்டு ஸ்காலர்ஷிப்புகள் வழங்கப்படுகின்றன.

இக்கலாசாலையில் கல்வி கற்பவர்களிற்பெரும்பாலர் எகிப்தியரே. இங்கு கல்விபயிலும் எகிப்தியர் 2 வருஷ காலத்திற்கு ராணுவ சேவை புரிய வேண்டும் என்ற நிபந்தனையிலிருந்து விடுபடுகின்றனர். இக்கலாசாலையின் உயர்தரப் படிப்பு 12 வருஷங்களில் பூர்த்தியடைகின்றது. 18 வருஷகாலம் வரை கல்விபயின்றும் உயர்தரப் படிப்பை பூர்த்தி செய்யாதவர்களை இக்கலாசாலையின் மாணவர் ஜாப்தாவிலிருந்து நீக்கிவிடப்படுகிறது. ஒவ்வொரு வகுப்பிற்கும் வருஷந்தோறும் பரீக்ஷை நடைபெறுகின்றது. இப்பரீக்ஷைகள் பெரும்பாலும் எழுத்து மூலமாகவே நடைபெறுகின்றன. ஆனால், 12-வது வகுப்பின் உயர்தர பரீக்ஷை மட்டிலும் எழுத்துடன் வாய் மொழியாகவும் செய்யப்படுகிறது. இப்பரீக்ஷைகளில் வெற்றி பெற்றவருக்கு அக்கலாசாலையின் உயர்தர சர்ட்டிபிகேட் அளிக்கப்படுகிறது. 8-ம் வகுப்பில் தேர்ச்சி பெறுபவர்களுக்கு கீழ்த்தரமான சர்ட்டிபிகேட் வழங்கப்படுகிறது. ஆனால், உயர்தர சர்ட்டிபிகேட் பெறுபவர்களது எண்ணிக்கை அத்தனை அதிகமில்லை. என்றாலும், இக்கலாசாலையின் கௌரவம் இவர்களால்தான் பெருகுகிறது. எகிப்து தேசத்துடையவும், அரசாங்கத்துடையவும் பாஷை அறபியாக இருப்பதால், இக்கலாசாலையில் கீழ்த்தரமான சர்ட்டிபிகேட் பெறுபவர்களும்கூட சகலவித தொழில்களைச் செய்வதற்குத் தகுதியாகி விடுவதுடன் மிகச் சுலபமாக சர்க்கார் உத்தியோகத்தை அடைந்து விடுகின்றனர். உயர்தர சர்ட்டிபிகேட்டுகளைப் பெறுவோர் ஜட்ஜுகளாகவும், மந்திரிகளாகவும்கூட நியமிக்கப்படுகின்றனர். வக்கீல் தொழிற் இவர்களுக்கு மிகச் சுலபமானது. ஆனால், இக்கலாசாலையில் ஆசிரியர்களாக நியமனம் பெறுவதுதான் எல்லாவற்றிலும் மிகக் கௌரவமாகக் கருதப்படுகிறது. இக்கலாசாலையில் பெரும்பாலும் மதக்கல்விதான் போதிக்கப்படுகிறது. ஆனால், ஷெய்கு முஹம்மது அப்துஹு சான்ஸலராக இருந்த போது சில சீர்திருத்தங்களைச் செய்தார். அப்புறமும் சில சீர்திருத்தங்கள் நிகழ்ந்தன. இதன்படி நம்முடைய ஸ்கூல்களில் படித்துக்கொடுப்பதுபோல எல்லாப் பாடங்களும் அறபிப் பாஷையில் கற்பிக்கப்படுகின்றன. இங்கிலிஷ் 2-வது பாஷையாகப் போதிக்கப்படுகிறது. எல்லா வகுப்புகளிலும் மதப்பாடம் கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. இச் சீர்திருத்தத்தின்படி, இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள ஸ்கூல் பைனல் பரீக்ஷையைப் பாஸ் செய்தவுடன், மாணவர்கள் இஷ்டப்பட்டால் இதே சர்வகலாசாலையில் மேல் படிப்புக்குச் சேரலாம். அல்லது எகிப்திலுள்ள இதர நவீன சர்வகலாசாலைகளில் சேர்ந்து தற்காலமுள்ள பட்ட பரீக்ஷைகளிற் போட்டி போடலாம். ஆகவே, மதப்படிப்புக்கும், லௌகிகப் படிப்புக்கும் ஒத்த முறையில் இங்குள்ள ஆரம்பக் கல்விப் போதனா முறை திருத்தப்பட்டிருக்கிறது. இச்சீர்திருத்தம் மிகப் பிரயோஜனமுள்ளதாகக் கருதப்பட்டது. இறுதியாக, இப்பொழுது செய்துள்ள திருத்தத்தின்படி இங்கு உயர்தர சர்ட்டிபிகேட் பெறுபவர்கள் இனி லௌகிகக் கல்வியிலும் தேர்ந்தவர்களாக இருக்கவேண்டும் என்று திருத்தம் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. இதன் ஆயிர வருஷக் கொண்டாட்டத்தை நடத்த ஏற்பாடாகி வருகிறது. இதற்காக பெரும் முயற்சி செய்யப்படுகிறது. உலகின் பற்பல பாகங்களிலுமிருந்து மக்கள் இவ் வைபவத்தில் கலந்து கொள்வதற்காக ஒன்று திரண்டுவந்து குழுமுவரெனவும் தெரிகிறது.

ஸ்பெயின் முஸ்லிம் மன்னரின் நீதிமுறை

ஸ்பெயின் தேசத்தில் தற்போது உள்நாட்டுச் சண்டைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்குள்ள பிரஜைகளில் நூற்றுக்கு தொண்ணூற்றொன்பதற்கு அதிகமானவர்கள் கிறிஸ்தவர்களேயாவர். ஒரு காலத்தில் இங்கு முஸ்லிம்கள் ஆட்சி புரிந்தனர். அவர்களது ஆட்சி ஏழு நூற்றாண்டுகள்வரை அங்கிருந்தது. லக்ஷக்கணக்கான முஸ்லிம்கள் அங்குவசித்துவந்தனர். அங்கிருந்த முஸ்லிம்கள் கிறிஸ்துவர்களால் துரத்தப்பட்டும், படுகொலை புரியப்பட்டும், மதம் மாற்றப்பட்டும் போயினர். இப்பொழுதும் அங்கு முஸ்லிம்களின் ஞாபகச் சின்னங்களிருந்து வருகின்றன. பலவந்தமாக மதம் மாற்றப்பட்டவர்களின் சந்த

தியினரில் இன்னமும் இஸ்லாமிய உணர்ச்சி இருந்துகொண்டுதானிருக்கிறது. ஆனால், அங்கு வாழ்ந்த முஸ்லிம்களின் ஞாபகச்சின்னம் கட்டிடங்களாகவும் வேறுவிதமாகவும் இருந்தாலும் அவைகளிற் சில அழிந்துவிட்டன. என்றாலும் அங்கு அரசாட்சி புரிந்த முஸ்லிம் அரசர்கள் எவ்வளவு நீதியாக இருந்தனர் என்பதற்கும், பிரஜைகளின் நலனைக்காப்பதில் எவ்வளவு சிரத்தைகொண்டிருந்தனர் என்பதற்குமுரிய ஞாபகச்சின்னங்கள் சரித்திரங்களில் என்றும் அழியா வண்ணம் இருந்து வருகின்றன. அவைகளிலிருந்து ஒரு சம்பவத்தை ஈண்டு எடுத்தெழுதுவோம்:—

கி. பி. 913-ம் வருஷத்தில் அப்துல்லாஹ் என்ற அரசர் மரணமடையவே, அவருடைய ஸ்தானத்தில் அவரது பௌத்திரர் மூன்றாவது அப்துர்ரஹ்மான் என்பவர் ஸ்பெயின் அரசரானார். இவருக்கு அல்ஹக்கம் என்றும், அப்துல்லாஹ் என்றும் இருபுதல்வர்களிருந்தனர். இவ்விருவரும் மிகத்திறமைசாலிகள். ராணுவப் பயிற்சி, தேச பரிபாலனம் முதலிய சகல துறைகளிலும் மேம்பட்டிருந்தனர். ஆகவே, இவ்விருவரில் ஒருவரான அல்ஹக்கம் என்பருக்கு இளவரசுப்பட்டம் கொடுக்கப்பட்டது.

அரசரின் மற்றொரு புதல்வரான அப்துல்லாஹ்விற்கு நெருங்கிய துணைவன் ஒருவனிருந்தான். அவனது பெயர் 'அப்துத்தார்' என்பது. தனக்கு பிரதம நீதிபதி (காலியுல்குலாத்) பதவியை அளிக்காததால் அரசர்மீது அவனுக்கு துவேஷமிருந்து வந்தது. ஆதலால், இந்நியமனத்தைத் தனக்குச் சாதகமாக உபயோகித்து, அரசரிடம் வஞ்சம் தீர்த்துக்கொள்ள நினைத்து, தனது நண்பனான அரச குமாரன் அப்துல்லாஹ்விற்கு துற்போதனை செய்தான். ஆகவே, ஒரு பெரும் சதியாலோசனையை இருவரும் செய்தனர். குறிப்பிட்ட ஒரு சமயத்தில் அரசரையும், அவரது பட்டத்து இளவரசரான அல்ஹக்கமையும், கொலைசெய்து விடுவதற்காக சகல ஏற்பாடுகளும் இரகசியமாகச் செய்யப்பட்டன.

நல்ல வேளையாக இச்சதியாலோசனை நிறைவேற்றப்படுதற்குமுன், இதனைப்பற்றிய தகவல் அரசரான மூன்றாவது அப்துர் ரஹ்மானுக்குக் கிடைத்தது. உடனே, தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது. நம்பிக்கையுள்ள ஒரு ராணுவ உத்தியோகஸ்தரின் தலைமையில் போதிய பட்டாளமொன்று கார்டோவாவிற்கு அனுப்பப்பட்டது. அங்கு அரச குமாரர் அப்துல்லாஹ்வும், அவரது துணைவனான அப்துத்தாரும் கைது செய்யப்பட்டனர். அரசர் முன் இரு கைதிகளும் ஆஜர் செய்யப்பட்டனர். அரசர் தமது புதல்வரான அப்துல்லாவை நோக்கி "உன்னைப் பட்டத்து இளவரசனாக்கவில்லை என்பதற்காக நீ மனவருத்தமடைந்தாயோ" என்று வினவினர். இவ்வினாவிற்கு அப்துல்லாஹ் பதிற் கூறாமல், கண்ணீர் வடித்தனன். அரசரது கட்டளைப்படி இரு கைதிகளும் தனித்தனியே வெவ்வேறு அறைகளில் காவல் வைக்கப்பட்டனர். அன்றைய இரவில் 'அப்துத்தார்' தனது அறைக்குள் தற்கொலை செய்துகொண்டான். அரசகுமாரனை அப்துல்லாஹ்வின்மீது சுமத்தப்பட்ட சதியாலோசனை வழக்கு விசாரிக்கப்பட்டது. குற்றம் ருஜுவாகி விட்டதால் மரண தண்டனை விதிக்கப்பட்டார்.

அரச குமாரனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதைக் கேள்வியுற்ற அவரது சகோதரரும், பட்டத்து இளவரசருமான அல்ஹக்கம், தனது சகோதரர்பால் கருணை காட்டவேண்டுமென்று அரசரிடம் சிபாரிசு செய்துகொண்டார். அரசர் இந்த சிபாரிசை ரத்துச் செய்துவிட்டதுடன், தமது பட்டத்து இளவரசரை நோக்கி,

"நீ சிபாரிசு செய்வது முறைதான். நானும் இதையே விரும்புகிறேன். அவன் மரணமடைவதை குளிர்ந்த மனத்துடன் பார்ப்பதை நானும் சகியேன். என்றாலும், நான் அரசன். இனி வருங்காலத்தைப்பற்றியும் நான் கவனம் செலுத்த வேண்டும். அவன் மனதிற் றோன்றிய சதி எண்ணம் அவனை விட்டு ஒருபோதும் நீங்காது. எனக்குப்பின் நீங்களிருவரும் சண்டை போட்டுக்கொள்வீர்கள். உங்களிருவரது முடிவும் எப்படியானாலும், அதனைப்பற்றி நான் கவலைப்படவில்லை. இதனால், பிரஜைகள் நாசமுறுவர். அநேக தாய்மார்கள் தங்கள் மைந்தர்களுக்காக அழுவர். அநேக ஸ்திரீகள் விதவைகளாவார்கள். எண்ணற்ற குழந்தைகள் அனாதைகளாவர். நாட்டில் பஞ்சம் தோன்றும். விளைச்சல் குறையும். விவசாயம் நடைபெறாது. இதனால் நாடெங்கும் அமைதியின்மை ஏற்படும். இவைகளைப்பற்றி நான் சிந்தித்துப் பார்க்கும்போது எனக்கு நடுக்கமுண்டாகின்றது. ஆதலின், ஆயிரக்கணக்கானவர்கள் வீடு வாசல்களைஇழந்து, ஆயிரக்கணக்கான ஸ்திரீகள் விதவைகளாகியும், ஆயிரக்கணக்கான குழந்தைகள் அனாதைகளாகியும் போவதற்குப்

பதிலாக இக்குழப்பத்திற்கு அஸ்திவாரமாக இருக்கிற ஒரே ஒரு மனிதனை ஒழித்துவிடுவது நல்லதல்லவா?

தவிர, மற்ெருரு விஷயமும் இங்கு கவனிக்கப்படல் வேண்டும். வேறு ஒரு அந்நியர் அரசரையும் இளவரசரையும் கொலை செய்ய முயன்றிருந்தால், அவருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்படுமல்லவா? அதே குற்றத்தை அரசரின் புதல்வன் செய்தால், அவனுக்கு மட்டிலும் கருணை காட்ட வேண்டுமோ? ஆதலால், நான் நீதியை நிலைநிறுத்துவதற்காக ஒரு முன் மாதிரியை ஏற்படுத்த விரும்புகிறேன்.

என்னுடைய இவ்வாலிப புதல்வனுக்காக நான் மிகவும் அழுவேன். எனது வாணுள் முழுவதிலும் அழுதுகொண்டே இருப்பேன். ஆனல், மகனே, அல்ஹக்கமே! உனது கண்ணீரும், எனது அழுகையும், எனது குடும்பத்தினர் அனைவருடைய பொரிசும் துர்அதிர்ஷ்டமுள்ள எனது இப்புதல்வன், இக்குற்றத்திற்காக தண்டனையடைவதைவிட்டு அவனைக் காப்பாற்ற முடியாது".

என்று கூறினர். அதே இரவில் அரச குமாரன் அப்துல்லாஹ் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டான். இச் சம்பவம் கி.பி. 949-ல் நடைபெற்றது. அரசர் தனது புதல்வனின் பிரிவால் எப்பொழுதும் துக்கமடைந்துகொண்டே இருந்தார். அவரது துக்கமும் கவலையும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே இருந்தது. அவர் மரிப்பதற்கு ஒரு வருஷத்திற்கு முன்பே ராஜ்ய பாரத்தைவிட்டு ஒதுங்கிவிட்டார். இறுதியாக, இந்நீதி அரசர் கி.பி. 961-ம் வருஷத்தில் தமது 73-வது பிராயத்தில் 51 வருஷகாலம் ஆட்சிபுரிந்த பின் இறந்தார்.

சோதரீர்! முஸ்லிம்கள் பிரஜைகளின் க்ஷேமத்தைக் கருதுவதில்லை; வாளாயுதத்தால் ஆட்சிபுரிந்தனர்; பலவந்தமாக இஸ்லாம் மதத்தில் பிறரைச் சேர்த்தனர், என்று குறைகூறுவதின் அறியாக்கூற்றின் அந்தரங்கத்தைப் பார்த்தீர்களா? எனவே, முஸ்லிம் மன்னர்களையும், அவர்களது ஆட்சி முறைகளையும் குறித்து இஸ்லாமிய விரோதிகள் தூற்றிவரும் இக்காலங்களிலும்கூட, சரித்திரப் பூர்வமாகவுள்ள இத்தகைய சம்பவங்கள் அவர்களது கூற்றுகளை மறுக்க நித்திய சாக்ஷியமாக இருந்துவருகின்றன.

பர்மாவில் இந்தியர்கள்

பல நூற்றுண்டுகளாக இந்தியாவிற்கும் பர்மாவிற்குமிடையே சம்பந்தமிருந்து வருகிறது. இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டதிலிருந்து பர்மா பிரிட்டிஷ் இந்தியாவின் ஒரு மாகாணமாகச் சேர்க்கப்பட்டு இந்திய வைசிராயால் ஆளப்பட்டு வந்தது. இந்தியாவில் காங்கிரஸ் கிளர்ச்சியும், ஒத்துழையாமையும், சட்ட மறுப்புகளும் தோன்றவே, பர்மாவிலும் ஒரு இயக்கம் தோன்றிற்று. அதாவது இந்தியாவைவிட்டு பர்மாவைத் தனியேபிரித்துவிடவேண்டுமென பர்மியரிற் சிலர் கிளர்ச்சி செய்தனர். பிரிட்டிஷ் அரசாங்கமும் இதற்கு ஆதரவாக இருந்ததென்றுங் கூறலாம். இறுதியாக, இக் கிளர்ச்சி அந் நாடெங்கும் ஆதரவு பெற்று உச்ச ஸ்தானத்தை அடைந்தபோது, சென்ற 1930-ல் பர்மா துறைமுகத்தில் வேலை செய்துகொண்டிருந்த இந்தியக் கூலிகளுக்கும் பர்மியக் கூலிகளுக்கும் ஏற்பட்ட தகராரின் காரணமாக இந்தியருக்கும் பர்மியருக்குமிடையில் பெருங் கலகமுண்டாயிற்று. இதில் நூற்றுக் கணக்கான இந்தியர் காயமடைந்தனர். அநேகர் மரித்தனர். பிறகு, சிட்டகாங் வாசிகளான இந்திய விவசாயிகள் தாக்கப்பட்டனர். பெகு டாங்கோ முதலிய பகுதிகளிலுள்ள இந்திய விவசாயிகள் வீடு வாசல்களை விட்டுவிட்டு இரங்கோனுக்கு ஓடிவந்தனர். இதில் இந்தியர்களின் பொருள்கள் சூறையாடப்பட்டன. அநேக உயிர் நஷ்டங்களுமேற்பட்டன. காயப்பட்டவர்கள் ஏராளம். இப்பொழுது மூன்ருவதாக சென்ற ஜுலை மாதத்திலிருந்து பர்மாவின் எல்லாப் பகுதிகளிலும் இந்தியர் அகாரணமாகத் தாக்கப்பட்டு சொல்லொணுத் துன்பங்களுக்காளாகின்றனர். இந்தியர்களில் 500-க்கு அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும், 2000-பேருக்கு அதிகமானவர் காயப்பட்டிருப்பதாகவும், லக்ஷக்கணக்

கான சொத்துக்கள் பர்மியரால் சூரையாடப் பட்டதாகவும் தெரியவருகிறது. அன்றியும், முஸ்லிம்களது மஸ்ஜிதுகளில் 74-ம், ஹிந்துக் கோவில்களில் 2-ம் இடிக்கப்பட்டிருக்கின்றன. பர்மாவில் வதியும் இந்தியர் உயிருக்குப் பயந்து ஆயிரக் கணக்கில் இந்தியாவிற்கு வந்துகொண்டிருக்கிறார்கள். ஆயிரக் கணக்கானவர்கள் கப்பல் கட்டணமில்லாமல் இந்தியா கொண்டுவரப்பட்டு, சர்க்கார் செலவில் அவரவர் சுய ஊர்களுக்கு அனுப்பப்பட்டனர். இதனைக்குறித்து சென்னை சட்ட சபையிலும் பிரஸ்தாபிக்கப்பட்டது. சென்ற செப்டம்பர் மாதத்தில் இந்தியா சட்டசபையிலும் ஒருஅவசரத் தீர்மானம் முஸ்லிம்லீக் கக்ஷியைச் சேர்ந்த ஆலிஜனுப் ஸர் ஜியாவுத்தீன் அஹ்மது அவர்களால் கொண்டு வரப்பட்டது. சட்ட சபைகளில் காங்கிரஸ், முஸ்லிம்லீக் என்ற பாகுபாடின்றி எல்லா கக்ஷியினரும் ஒரு முகமாக இத்தீர்மானங்களை ஆதரித்தனர். சென்னை மாகாண சர்க்காரும் மத்திய சர்க்காரும்கூட இத்தீர்மானங்களை ஆகரித்து தக்கது செய்வதாக வாக்களித்தன. ஆனால், நடக்கும்காரியங்களை பார்த்தால் எல்லாம் மழுப்பலாகவே தோன்றுகின்றன. பர்மா சர்க்காரால் கலக விசாரணை நீதி சபை என்பதாகக் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. சென்னை சர்க்காரில் உத்தியோகம் பார்த்து வந்த ஸ்ரீ ஹென்டர்ஸன் இந்தியா சர்க்காரின் பர்மா ஏஜென்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார். பர்மா சர்க்காரின் கமிஷன் விசாரணையும், இந்திய சர்க்காரின் ஏஜெண்டு நியமனமும் இப்பொழுது நஷ்டமடைந்துள்ள இந்தியருக்கு திருப்திகரமான முறையில் பரிகாரம் செய்யக்கூடிய நிலைமையில்லை. மத்திய சட்ட சபையில் கொண்டு வரப்பட்ட அவசரத் தீர்மானம் விவாதத்துக்கு வந்தபோது இந்திய சர்க்கார் சார்பாகக் கூறப்பட்ட பதிலில் "நஷ்ட ஈடு கொடுப்பது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதாகவும், மேற்கொண்டு எதுவும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள சட்டபூர்வமான சில இடையூறுகளிருப்பதாகவும்" பதில் கூறப்பட்டது. இந்திய சர்க்காரும், பர்மா சர்க்காரும் எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பார்த்தால் இந்தியர் கண்ணைத் துடைப்பதாக இருக்கிறதே அன்றி, சரியான முறையில் நடந்து கொள்வதாகத் தெரியவில்லை. பர்மாவில் வாழும் இந்தியர்கள், கலவர சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு உத்தியோகப்பற்றற்ற ஒரு கமிஷன் நியமிக்கப்படவேண்டும்; 2. நஷ்டமடைந்த இந்தியர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படவேண்டும்; 3. அவர்களது உயிர் பொருளைக் காப்பாற்றுவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்" என்று விரும்புகிறார்கள். இம்மூன்று கோரிக்கைகளும் மனப்பூர்வமாக நிறைவேற்றப் படுவது சந்தேகம் என்பதே, அவ்விரு சர்க்கார்களின் போக்கிலிருந்து தெரியவருகிறது.

தவிர, ஒரு விஷயத்தை இங்கு குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. சுயேச்சையுள்ள ஒரு நாட்டின் பிரஜைகள் மீது அந்நிய நாட்டில் இத்தகைய படுகொலை நிகழ்ந்திருந்தால் இதற்குள் இருநாடுகளுக்குமிடையில் மாபெரும் யுத்தம் தோன்றி இருக்கும்.

ஏழை இந்தியர்கள் விஷயத்தில் இந்திய சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கும் சிரத்தையைக் காணுமிடத்து, இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் சர்க்கார் இந்தியர் நலனுக்காக இல்லை என்றே தோன்றுகிறது. இந்தியர் நலனை இதுபோழ்து சரியாகக் கவனியாமல் இருந்துவிட்டால், அயல் நாடுகளில் வாழும் இந்தியர் கதி இனிமேல் அதோகதியாகிவிடும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ஆகவே, இந்திய சர்க்கார் இவ் விஷயத்தில் காலந் தாழ்த்தாமல் இந்தியரைப் பாதுகாக்கச் சகலவிதமான முயற்சிகளையும் தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென விரும்புகிறோம்.

பர்மியர்கள் இன்று இந்தியர்மீது துவேஷங் கொண்டு, அவர்களைத் தங்கள் நாட்டை விட்டுத் துரத்தப் பார்க்கின்றனர். இதற்காக குற்றமற்ற இந்தியரைப் படுகொலை புரிகின்றனர். இவ்விதமான நடவடிக்கைகளால் இந்தியரைப் பர்மியர் துரத்திவிட முடியாது. கோடிக் கணக்கான சொத்துக்களை விட்டுவிட்டு, இந்தியர் அவ்வளவு சுலபமாக வெளியேறிவிடமாட்டார்கள். இவ்வித துவேஷ உணர்ச்சியால் பர்மியருக்குத்தான் கஷ்டமுண்டாகும். இந்தியர் பர்மா அரிசி முதலிய விளைபொருள்களை வாங்காவிட்டால், பர்மியர் திண்டாடவேண்டிய தேற்படும். இந்தியாவிலும் பர்மியருக்கு விரோதமான கிளர்ச்சி தோன்றி, பர்மா பகிஷ்கார இயக்க மேற்பட்டால் பர்மியரின் நினைப்பு "கிணறுவெட்ட பூதம் வெளிவந்தது" என்ற கதையாகவே முடியும். தவிரவும், பர்மியர் இந்தியரைத் துரத்திவிட்டால், தங்கள் நாட்டைப் பூரண சுயேச்சையுள்ள நாடாக ஆக்கிக்கொள்ள

வும் முடியாது. ஐரோப்பியரின் ஆதிக்கம் இன்னும் அதிகமாகப் பெருகுமே யன்றி, குறையப்போவதில்லை. ஆதலால், பர்மியர் இனியேனும் இந்தியருக்கு விரோதமான இவ்வுணர்ச்சியைக் கைவிடுவார்களாக.

தவிர, நமது இந்திய நாட்டிலுள்ள ஹிந்து மகா சபைக்கு ஒரு வார்த்தை கூற விரும்புகிறோம். பர்மாவில் இந்தியரின் விரோதிகளால் தூண்டிவிடப்பட்ட இந்திய எதிர்ப்புக் கிளர்ச்சியின் மத்தியில், ஹிந்து மகா சபையினரும், ஆரிய சமாஜிகளும் சேர்ந்து, இந்திய முஸ்லிம்களுக்கு விரோதமான உணர்ச்சியைத் தூண்டிவிட்டிருக்கின்றனர். அதுவும் போதாதென்று கலகம் தோன்றிய பிறகு பர்மியருக்கு ஆதரவு புரிந்து ஹிந்து மகா சபைத்தலைவர் செய்தி விடுத்திருக்கிறார். இவர்களது இப்போக்கினால் ஹிந்து சமூகம் நன்மையடையப்போவதில்லை. இரங்கோன் துறைமுகத் தொழிலாளர்கள் மீது பர்மியத் தொழிலாளர் கலகஞ் செய்து படுகொலை புரிந்தபோது, ஏழை இந்திய ஹிந்துத் தொழிலாளருக்கு உதவிபுரிந்து, அவர்களைக் காப்பாற்றியது பர்மா வாழ் சோலிய முஸ்லிம்களே யாவர். அந்நிய நாடுகளில் ஹிந்து முஸ்லிம் என்ற பாகுபாடின்றி இந்தியர் ஒருவருக்கொருவர் துணைபுரிந்து ஐக்கியமாக வாழும் இந்நிலைமையில் வகுப்பு வித்தியாசத்தைப்பாராட்டி பர்மியருக்கு ஹிந்து மகா சபையினர் உதவி புரிந்து, முஸ்லிம்களைத் துரத்தி விட்டாலும் அல்லது அடக்கி அழித்து விட்டாலும், அப்புறம் ஹிந்துக்கள் மீது பர்மியர் பாணம் தொடுக்கும்போது அவர்களால் என்ன செய்ய முடியும்? என்பதைச் சிந்தித்துப்பார்க்கட்டும். பர்மியருக்கு இந்தியர்மீது வெறுப்புணர்ச்சியைத் தூண்டு மியக்கம் வேலை செய்துகொண்டிருக்கிற இந்நிலைமையில், ஹிந்து மகா சபையின் இப்போக்கு அவ்வியக்கத்திற்கு ஆதரவு அளிக்கிறதேயன்றி அதனை அகற்றுவதாக இல்லை. இரண்டு சமூகத்தினரும் சேர்ந்திருக்கும் போதே, இந்தியர் நிலை இவ்வாறிருந்தால், அவ்விரு சமூகமும் பிரிந்துவிட்டால் மிகச் சுலபமாக இந்தியர் அனைவரையும் கருவருக்கப் பர்மியரால் முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஹிந்து மகா சபையின் இப்போக்கை பர்மாவாழ் ஹிந்துக்கள் ஆதரிக்கவில்லை என்பதைக்கண்டு நாம் சந்தோஷமடைகின்றோம். ஆகவே, அந்நிய நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் ஜாதி மதபேதமின்றி ஒற்றுமையுடன் வாழ்வதிலே அவர்களுக்கு நன்மை இருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அடிமைகள் யார்?

நானும் அடிமைதான், நீங்களும் அடிமைகள் தாம். இவ்வுலகிலுள்ள சிலரைத் தவிர, ஏனைய எல்லா மனிதர்களும் அடிமைகள் தாம். இதிற் சந்தேகமே இல்லை. "எனது தேசத்தை சுதந்திரத்தின் உச்சஸ்தானத்திற்குக் கொண்டு வந்து விட்டேன்" என்று ஜெர்மன் சர்வாதிகாரி ஹெர்ஹிட்லர் கூறுகிறார். அவர் பொய்யுரைக்கிறார். அவரது கூற்றில் உண்மை கிடையாது. அயர்லாந்து தேசத்தை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்துவிட்டதாக டிவாலரா கூறுகிறார். அதுவும் தவறுதான். முஸ்தபா கமாலாக இருந்தாலும் சரி, முஸோலினியாக இருந்தாலும், டிவாலராவா யிருந்தாலும் சரி, ஹெர் ஹிட்லராக இருந்தாலும் சரி, இன்னும் எவரானாலும் சரி அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டதாகவோ, விடுவித்து விட்டதாகவோ கூறுவாராயின், அவர் பொய் தாவா தான் செய்கிறாரே அன்றி வேறில்லை. இது மட்டுமா? அவர்களும் ஏமாற்றமடைந்ததுடன் மற்றவர்களையும் ஏமாற்றவே முயலுகின்றனர். ஏனெனில், எல்லாரும் அடிமைகளே. எவ்வாறெனில், ஒவ்வொருவரும் தங்கள் மனவிருப்பத்திற்கு அடிமையாகவே இருக்கிறார்கள். அவர்களது அரசாங்கங்களும் இவ்விருப்பங்களுக்கு அடிமைப்பட்டுத் தானிருக்கின்றன.

மதத்திற்குத் தலைவர்களென்றும், மார்க்கக் கல்வியிற் தேர்ந்தவர்களென்றும் சொல்லிக் கொள்வோரைக்கவனியுங்கள். அவர்களும்விருப்பத்திற்கு அடிமைகளாகத் தானிருக்கிறார்கள். தேசவிடுதலைக்காக தேசிய தலைவர்கள் தொண்

டை கிழியப் பிரசங்கம் புரிகின்றனர். விடுதலை என்பதுதான் அவர்கள் எப்பொழுதும் காணும் கனவு. அப்படி இருந்தாலும் அவர்களும் விருப்பத்திற்கு அடிமைகளேயாவர். ஆகவே, அரசனுயினும் ஆண்டியாயினும் எல்லோரும் விருப்பத்திற்கு அடிமைகளேயாவர். இவ்வித நிலைமையில் மனித வர்க்கத்திற்கு விடுதலை யளித்துவிட்டதாகவோ, மனித வர்க்கம் அடிமைத்தளையிலிருந்து விடுபட்டுவிட்டதாகவோ ஒருவரும் கூறமுடியாது.

விருப்பத்திற்கு அடிமைப் படுவதிலிருந்து தப்பித்துக்கொள்ள ஒருவராலும் முடியாதென்பதிற் சந்தேகமில்லை. இதனை நாம் மறுப்பதற்கும் தயாராக இல்லை. என்றாலும், நாம் நமது மனவிருப்பத்திற்கு மிகவும் மோசமான முறையில் கட்டுண்டு அடிமைப்பட்டிருக்கிறோம். விருப்பம் என்ற தளைகளால் நமது ஆன்மா வெகு சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாம் உயிருடனிருந்து கொண்டு இவ்வடிமைத் தளையிலிருந்து முற்றிலும் விடுபட்டுவிடுவதென்பது சிரமம்தான். என்றாலும், இக்கட்டுகளை, இத்தளைகளைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்ள நம்மால் முடியும். விருப்பம் என்ற சங்கிலியை நாம் குறைத்துக்கொண்ட அளவிற்கு நாம் இக்கட்டுகளைத் தளர்த்த இயலும். நபிமார்கள் ஒலிமார்களது வாழ்க்கை முறைகள் நம் முன் சரித்திரமாக எழுதப்பட்டிருக்கின்றன. அவர்களது வாழ்க்கை முறைகளைப் பற்றிய விருத்தாந்தங்கள் இன்றும்கூட நமக்கு போதிக்கப்படுகின்றன. அவர்களது சரித்திரங்களிலிருந்து நாம் படித்துக்கொள்ளும் பாடம் என்னவென்பதை நாம் சிந்தித்துப் பார்த்தோமா? இல்லவே இல்லையென்பதிற் சந்தேகமில்லை. அவர்களது சரித்திரங்களை நன்கு துருவி ஆராய்ந்து பாருங்கள். அவர்கள் தங்களது மனவிருப்பங்களை அடக்கி விட்டனர். இதனல் தான் அவர்களது ஆத்மசக்திகள் மேலோங்கின. ஆகவே, நாம் இவ்வவனியில் அடிமைத் தளையிலிருந்து விடுபட உண்மையாகவே விரும்புவோமாயின், நாமும் அப்பெரியார்களைப் பின்பற்றி, நமது மன விருப்பங்களை, ஆசைகளை, இச்சைகளை ஒடுக்க முயலல் வேண்டும். இவ்வாறு செய்வதில்தான் நமது ஆத்ம முன்னேற்றம் மறைந்திருக்கிறது.

மனவிருப்பம், இச்சை, ஆசை எவ்விதம் ஒரு சொட்டாக இருந்து, ஒரு பெரும் பிரவாகமாக மாறுகிறதென்பதற்கு ஒரு சிறு உதாரணத்தை இங்கு கூறுவது அவசியமாகும். ஜங்கிஸ்கானை அறியாதாரிலர். ஒரு பாதி உலகை ஜெயித்த வீரர். அவரது இவ்வெழுச்சிக்குக் காரணம் யாது? எனக் கருதுவீர்கள். அதனைச் சிறிது கூறுவாம்:

ஜங்கிஸ்கான் ஒரு கன்னியைக் கண்டார். அவளது அழகைக் கண்டு மயங்கினர். அவளை மனைவியாகக் கொள்ளவேண்டும் என்ற விருப்பம் அவருக்குண்டாயிற்று. அப் பெண்ணின் பெற்றோர்களும் அவளை அவருக்கு விவாகம் செய்து கொடுக்க இணங்கினர். ஆனல், ஒரே ஒரு நிபந்தனைமட்டும் விதித்தனர். அதாவது சில குதிரைகள், சில ஆடுகள், சில தங்கக் காசுகள் இவைகளை தங்களுக்கு அளித்தால், அவைகளுக்கு பதிலாக அவளை மனைவியாகத் தரலாம் என்று கூறினர். ஜங்கிஸ்கான் காதலின் காரணமாக அவைகளைத் தருவதாக வாக்களித்தார்.

ஆனல், ஜங்கிஸ்கான் ஏழை. பணமில்லாதவர். நாடோடி. இந்நிலைமையில் பெண்ணின் பெற்றோர்கள் கேட்டதைக் கொடுப்பதாகவும் வாக்களித்து விட்டார். கொடுக்க முடியாது என்று கூறுவது பேடித்தன மாகையால், இதற்கு யாதுசெய்வோம் எனச்சிந்தித்தார். ஒன்றுந் தோன்றவில்லை. அழகிய அரிவையை அருகில் வைத்துப் பார்க்கவேண்டும் என்ற அவரது விருப்பம் அவரைச் சும்மா இருக்க விடவில்லை. இறுதியாக சீன தேசத்தின்மீது கொள்ளையடிக்கச் செல்வதென்ற முடிவுக்கு வந்தார். தனது துணைவர்களை ஒன்று கூட்டினர். சீனவில் கொள்ளையடிக்க வாரம்பித்தார். கணக்கில்லாத செல்வங்கள் குவிந்தன. பல கொலைகள் புரியப்பட்டன. ரத்தஞ் சிந்தப்பட்டது. இவ் விருப்பம் அதிகமாக வளர்ந்துகொண்டே இருந்ததன் பயனக அவர் ஒரு பாதி உலகை அழித்து, நாசஞ் செய்தார் என்று கூறலாம். இவ்வளவு செய்தும் அவரது மனம் சாந்தியடையவேயில்லை. அவருக்கு மன நிம்மதியுமில்லை. அவரது விருப்பம் அதிகப்பட்டுக்கொண்டிருந்ததே யன்றி, குறையவில்லை.

"சூரியன் மேற்குத் திக்கில் உதயமாகிவிடலாம். பனிக்கட்டி நெருப்பாகி விடலாம். நெருப்பு பனிக்கட்டியாகிவிடலாம். இவைகளெல்லாம் நிகழக்கூடிய காரியங்களேயாகும். ஆனல், மனவிருப்பம் பரிபூரணமாகப் பூர்த்தியாகி, அது இல்லாதொழிந்துவிடுவது முடியாத காரியம். மனிதனது விருப்பம் பூர்த்தி

யாகிவிடுவதில்லை. அவனது ஒரு விருப்பம் கைகூடிவிட்டால், உடனே, அதற்குப் பதிலாக இரண்டு விருப்பங்கள் உண்டாகி விடுகின்றன. இவை இரண்டும் நிறைவேற்றப்பட்டால், அப்புறம் நான்கு விருப்பங்கள் தோன்றுகின்றன. இவ்விதமாக மனித விருப்பங்கள் பெருகிக்கொண்டே போகின்றனவே யன்றி ஒரு போதும் அவை இல்லாதொழிந்துவிடுவதில்லை'' என்பதாக ஸீஸர் கூறி இருக்கிறார்.

சேனையில் உயர்தர உத்தியோகப் பதவிகளில் ஒன்றை அடையவேண்டும் என்பதுதான் நெப்போலியனின் ஆரம்ப விருப்பம். அவருக்கு அப்பதவி கிடைத்தவுடன் சேனாதிபதியாகிவிட வேண்டுமென்று கணவுகாண ஆரம்பித்தார். சேனாதிபதி பதவி கிடைத்தவுடன் சக்கிரவர்த்தியாக விரும்பினார். ஆகவே, அதற்காக பிரான்சு தேசத்து அரியணையைத் தலைகீழாகப் புரட்டினார்.

பிரஞ்சு சக்கிரவர்த்தியான பிறகு, அக்கம் பக்கத்திலுள்ள நாடுகளைக் கைவசப்படுத்த வேண்டுமென்ற எண்ணமுண்டாகி இந்த எண்ணமும் அவருக்கு நிறைவேறியது. அத்துடன் அவரது விருப்பம் நின்றுவிடவில்லை. அவரது எண்ணம் நிறைவேறிய அளவிற்கு, அவரது விருப்பங்கள் பெருகிக்கொண்டே இருந்தன. இறுதியாக உலகம் முழுவதையும் கைப்பற்றிவிடவேண்டுமென நினைத்தார். இதன் பயனாக, அவர் கைதியாகி, தேச பிரஷ்டம் செய்யப்பட்டு, தன்னந்தனியே அநாதிப் பிணமாக மரித்தார்.

"நமது தேவை நிறைவேறிய அளவிற்கு, புதுப்புது ஆசைகள் நமக்கு உண்டாகிக்கொண்டே இருக்கின்றன. இவைகளுக்கு, நாம் நமது ஜீவியத்திற்கு இன்றியமையாததாகவுள்ள தேவைகளைப் பார்க்கினும் அதிக முக்கியாம்சத்தைக் கொடுக்கிறோம். எனவே, உங்களது ஆசைகளை நீங்கள் பகிர்ந்து பாருங்கள். உங்களது விருப்பங்களில் எத்தனை நியாயமானவை? எத்தனை அநாவசியமானவை? என்பதை நீங்கள் பகுத்துப் பார்த்தால், உங்களது விருப்பங்களில் பெரும்பாலானவை பொய்யாசைகளாகவே இருக்கும். இப்பொய்யாசைகளுக்குத்தான் நீங்கள் இரவு பகலாகக் கவலையுடன் முயற்சி செய்கிறீர்கள். இந்த முயற்சியிலேயே உங்களது ஜீவியம் முழுவதும் கழிந்துவிடுகிறது" என்பதாக ஜான்ஸன் கூறி இருக்கிறார்.

"பெரும் பெரும் ஆசைகள் நிறைவேறுவதனால் மனிதனுக்கு மனவமைதி உண்டாகிவிடமாட்டாது; உண்மையான மனவமைதி விருப்பங்களைக் குறைத்துக்கொள்வதனால்தான் உண்டாகமுடியும். உங்களாலியலுமாயின், உங்களுக்கு நியாயமாகவும் உண்மையாகவுமுள்ள விருப்பங்களையும்கூட குறைத்துக் கொள்ளுங்கள். அப்புறம் உங்களது ஜீவியம் எவ்வளவு சமாதானமாக இருக்கிறது என்பதையும், சந்தோஷகரமானதாக இருக்கிறது என்பதையும் கவனித்துப் பாருங்கள்" என்பதாக பர்க் கூறி இருக்கிறார்.

நபிமார்களும், ஒலிமார்களும் இவ்வுலகிற்றோன்றி மனச்சாந்தியடைவதையே மக்களுக்குப் போதித்தார்கள். தனது மன ஆசைகளை ஒடுக்குவதற்கு 'தஜ்கியத்துல்கல்பு' (மனதைச் சுத்தப்படுத்தல்) செய்வது அவசியமாகும். திருகுர்ஆன் முதலிய வேதங்களும் கூட மனத்தூய்மை, அகத்தூய்மை ஆகியவைகளை வற்புறுத்திக்கூறிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, மனிதன் இம்மையில் நிம்மதியாக வாழ விரும்பும் பக்ஷத்தில் தனது விருப்பங்களைக் குறைத்துக் கொள்வதன்மூலம், அகத்தூய்மை அடைவதே ஏற்ற வழி. இவ்வழி இஸ்லாம் மதத்தை முற்றிலும் பின்பற்றுவதால் மிகச்சுலபமாகக் கிடைத்துவிடும்.

நன்கொடை

நம் ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கம், மாசிகை இவைகள் இஸ்லாம் மார்க்கத்திற்கும், முஸ்லிம் சமூகத்திற்கும் ஆற்றிவரும் அரும் தொண்டுகளைக் கருதி சிலோன் பிரபல வர்த்தகர்களான, பதுளை ஜனாப் K. M. S. முகைதீன் ஸலாஹுத்தீன் மரைக்காயர் ரூ. 100, கொழும்பு மெஸ்ஸர்ஸ் S. S. K. ஹாஜா அலாவுத்தீன் & ஸன்ஸ் ரூ. 25, நன்கொடை அளித்திருக்கின்றனர். அல்லஹ் தாஆலா இவர்களுக்கு தக்க நற்கூலி அளிப்பானாக.

"தாருல் இஸ்லாமி"ன் தவருன பத்வா

சென்ற 22-9-38வ வெளியான "தாருல் இஸ்லாம்" என்னும் தாருல் ஹர்புப் பத்திரிகையின் மார்க்க வினவிடைகள் என்ற பகுதியில் 'பத்வா' என ஓர் வியாசம் வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தப் பத்வாவைப் பார்க்கும்போது தாருல் இஸ்லாம் மறுபடியும் காதியானிப் பிரசாரம் செய்ய முன் வந்துவிட்டதோ? வென, நினைக்க இடமேற்படுகிறது. அந்தப்பத்வாவை நேயர்களின் பார்வைக்காக அப்படியே கீழே தருகிறோம்.

"வினா:—ஷீஆ, ஸுன்னீ, வஹ்ஹாபீ, காதியானீ— ஆகியவர்களுக்கிடையில் இஸ்லாமிய முறைப்படி வித்தியாசம் என்ன ? எந்த வகையில் வித்தியாசமுண்டு. (சந்தாதார்)

விடை:—ஒரே தந்தைக்குப் பிறந்து, ஒரே வீட்டில் ஏகக் குடித்தனமாய்க்கூடி வாழ்ந்து, தந்தையின் பெயரைச் சொல்லிக்கொள்வதில் பெருமையடையும் நான்கு சகோதரர்களுக்கிடையில் எவ்வித வித்தியாசமுங் கிடையாது. வெவ்வேறு பெயர்களை வைத்துக்கொண்டு, வெவ்வேறு சுபாவத்தினராய் இருப்பதையொட்டி, அந்நால்வரும் தந்தையின் புதல்வர்களாயில்லாது போகமாட்டார்கள். அவ்வாறே இஸ்லாமிய மூலாதாரக்கோட்பாடுகளில் விகற்பமில்லாமலிருக்க சில்லரை யனுஷ்டானத்திலும் கொள்கையிலும் சிறிது வேறுபட்டுக் காணப்படுவதைக்கொண்டு ஷிஆக்களும், சுன்னீகளும், வஹ்ஹாபீகளும், காதியானீகளும் இஸ்லாமிய சமூகத்தை விட்டுப் பிரஷ்டமானவர்களாய்க் கருதப்படுதல்கூடாது. "அல்லாஹ் ஒருவனே வணக்கத்துக் குரியவன்; முஹம்மது நபீ(ஸல்.)அவனது திருத்தூதர். குர்ஆன் அல்லாஹுடைய வேதம். நாயகவாக்யம் குர்ஆனின் வியாக்யானம்...."என்ற இஸ்லாமிய மூலாதாரக் கோட்பாடுகளில் பிரஸ்தாப கோஷ்டியினர் ஏகமாய் நம்பிக்கை (ஈமான்) கொண்டிருப்பதால் அவர்கள் முஸ்லிம்களேயாவர். ஆகவே, முஸ்லிம்களுக்குள் வேற்றுமை பாராட்டுவது, இஸ்லாமிய தத்துவத்தை யுணராது, கட்சிப்பிரிவினைகள் உண்டாக்கும் பேதைகளின் செயலாகும்."

பத்வா கொடுக்கத் தெரிந்தால் பத்வா கொடுக்கவேண்டும். இல்லையேல், தெரிந்தவர்களிடம் கேட்டுக்கொள்ளுமாறு கூறிவிடவேண்டும். இவ்விரண்டுமில்லாது "தாருல் இஸ்லாம்" பத்வாக்கள் வெளியிடுவதானது "குருடன் ராஜவிழி விழிப்பதற்கு" ஒப்பாகவே இருக்கிறது. எவ்வாறெனில், ஷீஆ, சுன்னீ, வஹ்ஹாபீ, காதியானீகளுக்கிடையில் இஸ்லாமிய முறைப்படி வித்தியாசம் என்ன? எந்த வகையில் வித்தியாசமுண்டு? என்பது கேள்வி. இக்கேள்விக்கு பதில் கூறுவதாயின் "வித்தியாசம் உண்டு அல்லது இல்லை" என்றே பதிற் கூறவேண்டும். வித்யாசமுண்டு என்றுபதிலளித்தால், எந்தெந்த விதத்தில் வித்தியாச மிருக்கிறது என்பதை விளக்கவேண்டும். இதுதான் பத்வாக் கொடுப்பதன்முறை. இதைவிட்டுவிட்டு "தாருல் இஸ்லாம்" பத்திரிகை கூறும் பதில் பைத்தியக்காரன் பினாத்துவதற்குச் சமமாகவே இருக்கிறது. ஷீஆக்களும், சுன்னிகளும், வஹ்ஹாபீகளும், காதியானிகளும் இஸ்லாமிய சமூகத்தை விட்டு ப்ரஷ்டமானவர்களாய்க் கருதப்படுதல்கூடாது. "...................................."என்ற இஸ்லாமிய மூலாதாரக்கோட்பாடுகளில் பிரஸ்தாபக் கோஷ்டியினர் ஏகமாய் நம்பிக்கை (ஈமான்) கொண்டிருப்பதால் அவர்கள் முஸ்லிம்களே யாவர் என்பதாகப்பதிற்கூறி இருப்பதானது கேள்விக்குத்தக்க பதிலாக இல்லாதிருப்பதுடன், முட்டாட்டனமான பதிலாகவும் இருக்கிறது. இவ்வகுப்பினர் இஸ்லாமிய சமூகத்தை விட்டுப் பிரஷ்டமானவர்களா அல்லவா ?, முஸ்லிம்களா ? அல்லவா ? என்ற கேள்வி இல்லாமலிருக்கும்போது இதனைப்பற்றிக் கூறவேண்டிய அவசியமே இல்லை.

தவிரவும், பொய்யர்களுக்கு ஞாபக மறதி அதிகம் என்ற பழமொழிக்கேற்ப, தாருல் இஸ்லாத்திற்கு ஞாபகப் பிசகு அதிகமென்றே தெரிகிறது. ஞாபகப்பிசகு இல்லாதிருந்தால், அப்பத்திரிகை முன்னுக்குப் பின் முரணாக எழுத முனைந்து முன்வரமாட்டாது. எவ்வாறெனில், சென்ற 2-8-1929வ வெளியான

தாருல் இஸ்லாம் பத்திரிகையின் 6-வது பக்கம் 3-வது பத்தியின் ஆரம்பத்தில் "தாருல் இஸ்லாமும், காதியானி விஷமமும்" என்று கொட்டையெழுத்துக்களில் தலைப்பகமிட்டு எழுதியுள்ள வியாசத்தில்,

"காதியானிகள் காபிர்களென்று இவ்வுலக முஸ்லிகளால் ஒதுக்கித் தள்ளப்படுகின்றனர்.... இன்னமும், இவர்கள் நபிகள் பெருமானின் (ஸல்) இறுதி நபியென்னும் தத்துவத்தை நிராகரிக்கின்றனர்; அந்த இறுதி நபியவர்களின் புர்க்கானுல் மஜீதென்னும் இறுதி மறையையும் அடியோடு புரட்டுகின்றனர். இஸ்லாத்தின் ஏக சகோதரத்துவத்தைக் குலைக்கின்றனர்"

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தாருல் இஸ்லாம் அன்று எழுதிய இக்கூற்றுக்கள் மெய்யா? இன்று பத்வா என்று வெளியிட்டிருப்பது மெய்யா? வென வினவுகிறோம். தாருல் இஸ்லாத்தின் அக்கூற்றும், இந்த பத்வாவும் மெய்யானல், காதியானி மதத்தில் ஏதேனும் வித்தியாசமேற்பட்டிருக்கிறதா? சுமார் 9 வருஷங்களுக்குமுன், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் இறுதி நபியென்னும் தத்துவத்தை நிராகரித்த காதியானி மதம், தனது அடிப்படையான கொள்கையை மாற்றிக்கொண்டு இப்பொழுது நபிகள் நாயகம் (ஸல்.) அவர்களை இறுதி நபியென்று பகிரங்கமாக ஒப்புக்கொள்கிறதா? என்ற வினக்களுக்கு "தாருல் இஸ்லாம்" பதில் கூற முன்வருமா? ஓரிடத்தில் ஒரு மாதிரியும் இன்னொரு இடத்தில் வேருெரு மாதிரியுமாக தா. இ. எழுதிவரும் இழித் தன்மையை உலகம் இப்பொழுது நன்கு தெரிந்து கொண்டது. சந்தாதாரர்கள் குறைவாக இருப்பதைப் பெருக்கிக்கொள்ளுவதற்காகவே இவ்வித தவருன பத்வாக்களை எழுதிப் பிரசுரித்து விவாதத்தைக் கிளப்பி, இழந்துபோன தனது "செல்வாக்கை" மறுபடியும் உற்பத்திசெய்து கொள்ள விரும்புகிறதா? அல்லது வழக்கம் போல் காதியானி ஏஜண்டாக இருந்து, கனத்த சம்பளம் பெற முயலுகிறதா? என்பதை இனிப் போகப்போகத்தான் உணரமுடியும். ஆனல், குட்டிக்கரணம் போட்டாலும், பழைய தோரணை இனித் திரும்பி வரப்போவதில்லை. மத விஷயத்தில் தலையிட்டு, காதியானிப் பிரசாரம் செய்ததும், மன்னர்குடி வழக்கில் மன்னிப்புக் கேட்டு, ஒப்பந்தத்திற்கு கட்டுப்படாமல் மூலையில் ஒளிந்துகொண்டதும் இன்னும் முஸ்லிம் நேயர்களின் ஞாபகத்திலிருந்து கொண்டுதானிருக்கிறது.

அப்புறம், ராஜீய விவகாரங்களில் காங்கிரஸைத் தாக்கிக்கொண்டிருந்து, திடீரென கக்ஷி மாறி காங்கிரஸில் சேர்ந்து, முன்னேடியாக இருந்ததையும், அப்புறம் முஸ்லிம் லீக்கை ஆதரித்து தாருல் இஸ்லாமும், காங்கிரஸை ஆதரித்து தேச சேவகனும் எழுதிவருவதையும் ராஜீயவாதிகள் உணர்ந்துகொண்டு, இவ்விதம் பச்சோந்தி வேஷம் போடுவதற்குரிய காரணம் யாது என்பதைத் தெரிந்து கொண்டனர். இந்நிலைமையில் காதியானிகளும் முஸ்லிம்கள்தான் என்று வாதம் செய்வதன்மூலம், தமிழ்நாட்டில் காதியானி அபிமானங்கொண்டவர்களின் அபிமானத்தைப் பெறவும் இடமில்லை. ஹிஸ்புல்லாக்களுக்குப் பயந்து, ஒப்பந்தஞ்செய்து கொண்டு தங்களை நட்டாற்றில்விட்ட தாருல் இஸ்லாமின் செய்கையை அவர்கள் இவ்வளவு சீக்கிரம் மறந்திருக்கமாட்டார்கள்.

இஃதிருக்கட்டும். இனி பத்வாவில் கூறப்பட்ட விஷயங்களைக் கவனிப்போம். சில வருஷங்களுக்குமுன் அஹ்ரார் கக்ஷித்தலைவர்களிலொருவரான மௌலானா அத்தாவுல்லா ஷாஹ் புகாரீ அவர்கள்மீது நடந்த வழக்கின்போழ்து காதியானி கலீபாவான மியான் பஷீர் அஹ்மது கோர்ட்டில் ஆஜராகி, தாம் குலாம் அஹ்மது காதியானியை நபியென்று நம்பி வருவதாகவும், அவரை நபியென்று அங்கீகரிக்காதவர்களைக் காபிர்கள் என்று கருதுவதாகவும் பகிரங்கமாகச் சாக்ஷி கொடுத்ததை தாருல் இஸ்லாத்திற்கு நினைவூட்ட விரும்புகிறோம். காதியானி கலீபா மட்டுமில்லாமல், லாகூர் அஹ்மதியா ஜமாஅத்துத் தலைவர் முகம்மது அலீயும் அவ்வழக்கில் சாக்ஷியங் கூறியபோது, குலாம் அஹ்மதின் மனைவியை அவர் உம்முல் மூமினீன் (மூமின்களின் தாய்) என்றழைத்ததையும், குலாம் அஹ்மதை நபியென ஒப்புக்கொண்டெழுதியதையும் ரிகார்டு மூலம் அஹ்ரார் கக்ஷியினர் ருஜூப்படுத்தியதை தாருல் இஸ்லாம் மறந்து விட்டதா?

அதுவுமல்லாமல், காதியானி வகுப்பிலுள்ள சிலர் தங்களுக்கு வஹீ வருவதாகவும், தாங்களும் நபிமார்கள்தான் என்றும் கோர்ட்டில் சாக்ஷியம் கூறியது தா. இ-க்கு ஞாபகமில்லையா? என்று கடாவுகிறோம்.

குலாம் அஹ்மதை நபியென ஒப்புக் கொள்பவர்களையும், தங்களுக்கும் 'வஹீ' வருவதாக

நினைத்துக் கொண்டிருப்பவர்களையும், தாங்களும் நபிமார்கள் தாம் என்று தாவாச் செய்பவர்களையும் கொண்ட காதியானீக் கூட்டம் எவ்வாறு முஸ்லிம்களுடன் சேர்ந்திருக்க முடியும்? என்பதைப் பாமரர்களும் கூட நன்கு தெரிந்து கொள்ள முடியும்.

“முஸ்லிம்களுக்குள் வேற்றுமை பாராட்டுவது இஸ்லாமிய தத்துவத்தை புணராது கட்சிப் பிரிவினைகள் உண்டாக்கும் பேதைகளின் செயலாகும்” என்று தாருல் இஸ்லாம் பிரஸ்தாப பத்வாவிற் கூறி இருப்பதற்கேற்ப, ஒரு சமயம் காயானிகளைக் காபிர் என்றும், மற்றொரு சமயம் அவர்களை முஸ்லிம்களென்றும் எழுதி பாமர ஜனங்களுக் கிடையில் கட்சிப் பிளவை உண்டுபண்ணி, ஒரு சாராரைத் தன் பக்கல் சேர்த்துக்கொள்ள முயல்வது பேதையின் செயலல்லவா? ஆகவே, இனி தாருல் இஸ்லாத்தை, தாருல் இஸ்லாம் என்றழைக்காமல் ‘பேதை சுபாவமுடைய ஒரு பத்திரிகை என்றே அழைக்க வேண்டியிருக்கிறது. இந்த பேதைக்கு இஸ்லாமிய தத்துவம் தெரியாததால்தான் காதியானிகளை முஸ்லிம்கள் என்று கூறுகிறது போலும்.

தவிர, இக்காலத்தில் தன்னை ஹிந்து என்று சொல்லிக் கொள்பவனிடமோ, கிறிஸ்துவனென்று சொல்லிக் கொள்பவனிடமோ, வேறு எவனிடமோ வேண்டுமானாலும் சரி, யாரிடம் கேட்டாலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் (கடவுள்) தான் என்பதையும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அவனது திருதூதர் என்பதையும், திருகுர்ஆன் இஸ்லாத்தின் வேதம் என்பதையும் அங்கீகரிப்பான். அப்படி இருந்தும், அவர்களை நாம் ஹிந்து என்றும், நஸாரா என்றும் தான் அழைக்கிறோம். அவர்களும் தங்களை அவ் வண்ணமே கூறிக்கொள்கின்றனர். அவர்களை நாம் அவ்வாறு அழைப்பதற்குக் காரணம், அவர்கள் மேற்கண்டவாறு கூறிக்கொண்ட போதிலும் அனுஷ்டானத்திலும், கொள்கையிலும் அவர்கள் அதனை ருஜூச் செய்யாமல் அக் கொள்கைக்கு முரணான வேறு பல கொள்கைகளை நம்பி வருவதேயாகும். இதனால் அவர்கள் இஸ்லாத்திற்குப் புறம்பானவர்களாகிவிட்டனர். இதுபோல, காதியானிகள் வணக்கத்திற்குரியவன் அல்லாஹூத் தஆலா தான், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவனது திருத்தூதர், திருகுர்ஆன் அவனாலருளப்பட்ட வேதம் என்ற கொள்கைகளைப் புறத்தில் கூறினாலும், குலாம் அஹ்மது காதியானியை நபியென்றும், நபிமார்களிற் சிறந்தவரென்றும் நம்புவதாலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நபித்துவம்தான் இறுதியானது, அவர்களுக்குப் பின் வஹீ வராது, நபித்துவத்தின் வாசல் அடைபட்டுவிட்டது என்ற கொள்கைகளை நிராகரிப்பதாலும், நபிகள் நாயகம் (ஸல்.) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்ற கொள்கையை அவர்கள் சரிவர அங்கீகரிக்கவில்லையென்பதும், திரு குர்ஆனை ஒப்புக்கொள்ளவில்லை என்பதும் நன்கு வெளியாகிறது. ஏனெனில், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதி நபி யென்ற விபரம் திரு குர்ஆனில் தெளிவுற கூறப்பட்டிருப்பதை அவர்கள் நிராகரிக்கிறார்களல்லவா? இவ்வித தன்மைகளுள்ளவர்களை முஸ்லிம்கள் என்று அந்த பேதை தாருல் இஸ்லாம் கூறுவதைப் பார்த்தால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதி நபி யென்னும் தத்துவமும், நாயகம் (ஸல்.) அவர்களுக்குப் பிறகு வஹியின் வாசல் அடைபட்டுவிட்டது என்று நம்புவதும் சில்லரை விஷயங்களென்று அப்போதைக்கு தோன்றுவதாகத் தெரிகிறது. இதுபோலவே, தன்னை நபியென்று தாவாச் செய்வதும், தனக்கும் வஹீ வருவதாகக் கூறுவதும், குலாம் அஹ்மதை நபியென அங்கீகரிப்பதும் அனுஷ்டான விஷயத்திலுள்ள சில அற்ப வித்தியாசங்கள் போலும். ஆனால், கோவில்களுக்கு முன் சென்று, காங்கிரஸ் கொடி யேற்றுவதும், காங்கிரஸ் கொடி வணக்கத்திற்கு இமாமாக இருந்து அதனை நடத்தி வைப்பதும், “உலக மாதாவாகிய ஜானகியை மீட்பதற்காக ஸ்ரீ ராமபிரான் இத்தீவை சிருஷ்டித்தார்” என்று பிரசங்கிப்பதும்தான் தா. இ.க்கு மார்க்கத்திலுள்ள மகா மகா முக்கிய விஷயங்களாகத் தோன்றுகிறது போலும்.

இனி ஷீஆக்கள் விஷயத்தை எடுத்துக்கொள்வோம். ஷீஆக்களில் பல பிரிவாருண்டு. ‘ஜக்காத்’ வரியை மறுப்பவர்களும், தொழுகை மூன்று நேரம்தான் பர்லு என்று நம்புவாரும் அவர்களிலுண்டு. ஆகவே, அடிப்படையான மூலாதாரக் கொள்கைகளை அங்கீகரிக்காமலிருக்கிற இத்தகையவர்களை முஸ்லிம்களென்று கூற முடியுமா? அவர்களுடன் முஸ்லிம்கள் மத சம்பிரதாயப்படியுள்ள சம்பந்தங்களை வைத்துக் கொள்ள முடியுமா? ஆகவே, தா. இ.வின் பிரஸ்தாப பத்வாவைக் கண்டு எவரும் மோசம்

போகமாட்டார்கள் என்று நம்புகிறோம். அவ்வாறு மோசம் போகும் காலம் இனி இல்லை என்பதை தா. இ. உணரட்டும். தவிர, இவ்வித வினாக்களையும், விடைகளையும் தா. இ. சுயமே சிருஷ்டித்துப் பிரசுரிக்கிறதே யன்றி, உண்மையில் தா. இ. இடம் இவ்வித வினாக்களைக் கேட்கும் உண்மை முஸ்லிம் எவரும் இல்லை. அப்படி ஒருவர் இருவர் கேட்டாலும், தா. இ.வின் காதியானிக் கொள்கை ஒழிந்ததா? இல்லையாவென்பதை உலகம் நன்கறிந்து கொள்ளட்டும் என்ற நோக்கத்தின்பேரில் எவரேனும் வினவக்கூடும். ஆகவே, தா. இ. பேதையாக இருப்பதால், இவ்வித பிரசாரத்தின் மூலம் தனக்கு ஒரு இடத்தை உண்டுபண்ணிக் கொள்ள முயற்சிக்கிறது. இம்முயற்சி பேதமையாகும் என்பதை தா. இ.க்கு தெரியப்படுத்துகிறேன். உலகம் ஜாக்கிரதையாக இருக்கிறது. தா. இ. உஷார்! இவ்வாறான கபட சூட்சிகளைக் கண்டெல்லாம் மக்கள் ஏமாந்து போகமாட்டார்களென்பது திண்ணம்.

காங்கிரஸும் முஸ்லிம் லீக்கும்

இந்தியாவிற்கு மாகாண சுயாட்சி அமலில் வந்து 18 மாதங்களாகி விட்டன. இச்சுயாட்சி அமுலில் வருவதற்குமுன் புதிய சீர்திருத்தத்தின் படி அமைக்கப்படவேண்டிய சட்டசபைகளுக்குத் தேர்தல் நடைபெற்றன. இந்தியாவிலுள்ள காங்கிரஸ் மகாசபை, முஸ்லிம்லீக் முதலிய பல ராஜ்ய ஸ்தாபனங்கள் இத் தேர்தலில் தங்கள் சார்பாக அபேக்ஷகர்களை நிறுத்தின. ஹிந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் முதலிய பல தொகுதிகளிலும் காங்கிரஸ் தனது அபேக்ஷகர்களை நிறுத்திற்று. காங்கிரஸ் கக்ஷியினருக்கு அதிகமான வெற்றிகள் கிடைத்தன. 6 மாகாணங்களில் நிரந்தரமான மெஜாரிட்டி கிடைத்தது. ஆனால், காங்கிரஸ் அடைந்த வெற்றிகளெல்லாம் பெரும்பாலும் ஹிந்துத் தொகுதிகளில் தான். முஸ்லிம் தொகுதிகளில் நிறுத்தப்பட்ட அபேக்ஷகர்களிற் பெரும்பாலர் தோல்வியுண்டனர். தேர்தல் பிரசினைகள் தீர்ந்தபின் சட்டப்படி மந்திரிப் பதவிகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய காலம் வந்தபோது நொண்டிச் சாக்குகளைக் கூறி காங்கிரஸ்காரர்கள் மந்திரிப் பதவிகளை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். இதன்பயனாக இந்தியாவிலுள்ள 11 மாகாணங்களில் 5 மாகாணங்களுக்கு முஸ்லிம்கள் கூட்டுகக்ஷி மந்திரி சபையை அமைத்தனர். 6 மாகாணங்களில் இடைக்கால மந்திரிச் சபைகள் ஏற்பட்டன.

“மந்திரி சபையை அமைக்கமாட்டோம்” என்று விலகி இருந்த காங்கிரஸ் காரர்கள் மூன்று மாதங்களுக்குள் தங்கள் தவறை யுணர்ந்தபின், மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்டு மாகாண சுயாட்சி சர்க்காரை நடத்தி வருகின்றனர். மந்திரிச் சபை அமைக்கும் பிரசினை அவர்களிடம் வந்தபோது முஸ்லிம்களிலிருந்தும் சிலரை மந்திரிகளாக நியமிக்கவேண்டிய சமயம் வந்தது. அதுபோழ்து சில மாகாணங்களில் காங்கிரஸ் கக்ஷியில் முஸ்லிம் ஒருவர் கூட இல்லாம லிருந்தனர். சில இடங்களில் ஒருவர் மட்டிலுமே இருந்தனர். இந்த மாகாணங்களில் காங்கிரஸ்காரர்களது நிலை சிறிது சங்கடமாக இருந்தது. முஸ்லிம் லீக் பார்ட்டியினருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு அக்கட்சியிலுள்ள முஸ்லிம்களை மந்திரிச் சபையில் நியமித் திருக்கலாம். அவ்வாறு நியமித்தால் அந்தந்த மாகாணங்களில் காங்கிரஸ் முஸ்லிம் லீக் ஆகிய இருகக்ஷியினரும் சர்க்கார் கக்ஷியினராக இருந்து அரசாங்கத்தை எவ்விதத் தடையுமில்லாமல் நடத்தி யிருக்கலாம். இவ்வித நேர்வழியைக் காங்கிரஸ் கடைப்பிடிக்கவில்லை. ஏனெனில், முஸ்லிம் லீக்குடன் ஒப்பந்தம் செய்தால் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பெரும் பான்மையினர் அபகரித்துக் கொள்ளவோ, காங்கிரஸ் ஏதேச்சாதிகாரம் செலுத்தவோ இடமிருக்காதல்லவா? ஆகவே, சுயநலங்கொண்ட சில முஸ்லிம்களைக் கூலிக் கமர்த்திக்கொள்ளவும், சிலருக்குப் பதவி ஆசைகாட்டித் தன் கக்ஷியில் சேர்த்துக்கொள்ளவும் காங்கிரஸ் முயன்றது. இம் முயற்சியில் காங்கிரஸுக்குஇரண்டொரு இடங்களில்வெற்றி

கிடைத்தது. ஒரிஸா போன்ற மாகாணத்தில் இம் முறையில் கூட முஸ்லிம்களை நியமிக்காமல், முஸ்லிம்களின் பாத்தியதை அடியுடன் புறக்கணிக்கப்பட்டு விட்டது. மாகாண சுய ஆட்சியை ஒழித்து, பிரதிநிதித்துவ சபையைக் கூட்டி, பூரண சுயராஜ்யத்திட்டம் வகுக்கவே, சட்டசபைகளுக்குச் செல்வதாகக் கூறிக் கொண்ட காங்கிரஸ்வாதிகள், இறுதியாக மந்திரிப் பதவிகளை ஏற்றுக்கொண்டு, மாகாண சுயாட்சித் திட்டத்தை அமுல் நடத்தி வைக்க முற்பட்டனர். இதற்கிடையே ஹிந்து முஸ்லிம்களுக் கிடையில் வகுப்புச் சமரஸப் பேச்சுக்கள் நடந்தன. முஸ்லிம்லீக் கேரிய நேர்மையான நிபந்தனைகளை சில போலிக் காரணங்களைக் கூறி காங்கிரஸ் நிராகரித்துவிட்டது. ஆயினும், ஹிந்து முஸ்லிம் ராஜிப் பேச்சு அடியுடன் முறிந்து விட்டதாக முஸ்லிம்லீக் இன்னமும் கருதவில்லை. அதற்கான முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டுதா னிருக்கின்றன.

பதவியை ஒப்புக்கொண்டவுடன் இந்தியாவிலுள்ள எல்லா மாகாணங்களிலுமுள்ள காங்கிரஸ் கக்ஷியினருக்கும் பதவி ஆசையுண்டாகி விட்டது. ஆகவே, மைனரிடியான மாகாணங்களிலுள்ள காங்கிரஸ்காரர்களின் வற்புறுத்தலுக்கு காங்கிரஸ் இணங்கி, எல்லைப்புற மாகாணத்தில் கூட்டுக் கக்ஷி மந்திரிச் சபையை ஸ்தாபிக்க அனுமதி கொடுத்தது. எனவே, கூட்டுக் கக்ஷி மந்திரிச் சபையை அமைப்பதில்லை என்று காங்கிரஸ் கொண்டுள்ள கொள்கைக்கு விரோதமாக, எல்லைப்புறத்தில் கூட்டுக் கக்ஷி மந்திரிச் சபை அமைப்பதைக் குறித்துச் சிலர் கேட்ட கேள்விகளுக்கு நொண்டிச் சாக்குகளைக் காங்கிரஸ் கூறிற்று. எல்லைப்புற முஸ்லிம்கள் காங்கிரஸ்காரர்களின் நயவஞ்சகத் தன்மையை அறியாததால், அவர்களின் சூழ்ச்சிக்குட்பட்டு அப்துல் கையூம் மந்திரிச் சபைக்கு விரோதஞ் செய்தனர். இதன் பயனாக எல்லைப்புறத்தில் காங்கிரஸ் மந்திரிச் சபை ஏற்பட்டு, கான் சாகிப் பிரதம மந்திரியானார். கக்ஷி பலத்திற்காக 3 பேருக்கு பதிலாக 4 பேர் மந்திரிகளானார்கள்.

அப்புறம் சிந்து மாகாணத்தின்மீது காங்கிரஸ் காரர்களின் திருஷ்டி சென்றது. ஸர் குலாம் ஹுஸைன் ஹிதாயத்துல்லாவின் மந்திரிச் சபையை ஒழிப்பதற்காக அங்குள்ள முஸ்லிம்களிடம் வலை வீசினர். அங்கும் ஒருவாறு பலித்தது. ஸர் குலாம் ஹுஸைன்மீது வெறுப்புள்ள சிலர் காங்கிரஸ் காரர்களது ஆதரவுடன் அச் சபையை வீழ்த்தினர். என்றாலும், காங்கிரஸிடம் சரணாகதி யடைய அவர்களுக்கு இஷ்டமில்லை. ஆகவே, காங்கிரஸ்காரர்கள் மந்திரிப் பதவி ஏற்றுக்கொள்வதற்கு அங்கு வழி ஏற்படவில்லை. என்றாலும், அல்லாபக்ஷ் மந்திரிச் சபைக்கு ஆதரவுகாட்டிச் சிற்சில வசதிகளைத் தங்களுக்குத் தேடிக்கொண் டிருக்கிறார்கள் காங்கிரஸ்காரர்.

பின்னர், வங்காளத்திலுள்ள பஜ்லுக் ஹக் மந்திரிச் சபையை வீழ்த்தப் பகீரதப் பிரயத்தனம் செய்தனர். தாழ்த்தப்பட்டவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் ஆசை வார்த்தைகாட்டி ஏய்த்தனர். இறுதியாக மந்திரிகள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைக் கொண்டு வந்தனர். சட்டசபை கூடுவதற்கு முதல் நாளிலேயே சட்டசபை மண்டபம் சென்று குடியேறவும் செய்தனர். தங்களுக்குத் தெரிந்த ஜகஜ்ஜால வித்தைகளை யெல்லாம் செய்து காட்டினர். நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் ஒன்றன்பின் ஒன்றாக 3 அடிபட்டன. பாக்கித் தீர்மானங்கள் விவாதத்திற் கெடுத்துக்கொள்ளாமல் நிறுத்திக் கொள்ளப்பட்டன.

அப்புறம் அஸ்ஸாமில் அவர்கள் முயற்சி தோன்றிற்று. அங்கு 108 பேர்களைக்கொண்ட சபையில் காங்கிரஸ்காரர்கள் மட்டிலும் 35 பேர்களிருக்கின்றனர். நியாயமான முறையில், யாவருக்கும் நீதி செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன், ஆரம்பத்திலேயே காங்கிரஸ்காரர்கள் கூட்டு மந்திரிச்சபை அமைக்க முன்வந்திருந்தால், மிகச் சுலபமாக அங்கு மந்திரிச் சபை ஏற்படுத்தியிருக்கலாம். அவ்வாறு செய்யத் தவறிவிட்டதால் முஸ்லிம்லீக்கைச் சேர்ந்த ஸர், ஸாதுல்லா கான் கூட்டுமந்திரிச் சபையை அமைத்தார். அவர் மந்திரிச்சபையை அமைத்த பிறகு, வயிற்றெரிச்சல் தாங்கமாட்டாமல், அவரது மந்திரிச் சபையைக் கவிழ்க்க இடைவிடாமல் முயற்சிசெய்தனர். அவர் திறமைசாலியானபடியால் இவர்களுக்கிடங் கொடாமல் தமது கக்ஷிக்குப் பலத்தை உண்டாக்கிக் கொண்டே இருந்தார். இறுதியாக அஸ்ஸாம் மந்திரிச் சபையில் 3 பேருக்கு அதிக ஸ்தானம் கொடுத்தாகிலும், ஸர் சாதுல்லா, மந்திரிச் சபையை வீழ்த்தச் சூழ்ச்சி செய்தனர். சுயநலங்கொண்ட இரண்டு மூன்றுபேர் காங்கிரஸ் காரர்களுடன் சேர்ந்தனர். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. ஸர் சாதுல்லா சமர்த்தரானபடியால் இத் தீர்மானம்

விவாதத்திற்கு வருமுன்னரே தமக்கு கக்ஷி பலமில்லையென்று கூறி ராஜிநாமாச் செய்து விட்டார்.

காங்கிரஸ்காரர்கள்தான் இனி மந்திரிச் சபையை அமைக்க வேண்டியவர்கள். 5 பேர் இருந்த இடத்தில் 8 பேரை மந்திரிகளாக்குவதென்றும், இவ்வெண்பரில் 3 பேர் முஸ்லிம்களாக இருக்கட்டுமென்றும்கூறி, முஸ்லிம்களை வசப்படுத்த முயன்றனர். ஆனல் ஸர், சாதுல்லா ராஜிநாமாக் கொடுத்தது முஸ்லிம்களின் கண்ணை திறந்து விட்டது. 36 முஸ்லிம்களைக்கொண்ட அஸ்ஸாம் சட்டசபையில் முஸ்லிம்களுக்குள்ளிருந்த 5 கக்ஷிகளும் ஒன்று சேர்ந்து இப்பொழுது 34 பேர்கள், ஸர் சாதுல்லாவின் தலைமையில் ஒன்று கூடிவிட்டனர். ஐரோப்பிய அங்கத்தினர் 12 பேரும் ஸர், சாதுல்லாவிற்குப் பக்கபலமாக இருக்கிருர்கள். ஏனைய வகுப்பிலிருந்தும் 10, 11 பேர் சாதுல்லாவிற்குச் சாதகமாகி விட்டனர். ஆகவே, அஸ்ஸாமில் காங்கிரஸ் மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்ட அதே தினத்தில், அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஐரோப்பியரால் கொண்டுவர முயற்சிக்கப்பட்டது. 8 மந்திரிகளில் 5 பேர் பதவி ஏற்றிருப்பதுடன் பாக்கி 3 பேர் இன்னும் பதவியை ஏற்றுக்கொள்ளாமலிருக்கும் போது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவது சரியில்லை என்று காங்கிரஸ் பிரதம மந்திரி ஆக்ஷேபித்ததை சபைத் தலைவர் ஆதரித்து நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைத் தள்ளி விட்டதுடன், தேதி குறிப்பிடாமலே சபையையும் ஒத்தி வைத்துவிட்டார். ஆகவே இப்பொழுது மந்திரிகள் மீது நம்பிக்கையில்லை என்று 56 பேர்கள் கையெழுத்துச் செய்து கவர்னருக்கு அனுப்பி சட்டசபையைக் கூட்டும்படி கேட்டுக்கொண்டிருக்கிருர்கள். இம்மாத மத்தியில் சட்டசபை கூட்டப்படும். 108 பேரில் தலைவர் நீங்கலாக 107 பேர் உளர். இவர்களில் 56 பேர் காங்கிரஸ் கூட்டு மந்திரிச் சபைக்கு எதிராக இருப்பதால், அஸ்ஸாமில் காங்கிரஸ் காவடி எடுக்கவேண்டிய நிலைமையிலிருக்கிறது. இடைக்கால மந்திரிகளாவது 3 மாதம் அதிகாரத்திலிருந்தனர். அஸ்ஸாம் காங்கிரஸ் கூட்டு மந்திரிச் சபை பிறந்தபொழுதிலேயே சாகும் நிலைமையை அடைந்து விட்டது. சரியாக 1 மாத காலம் கூட அதிகாரம் வகிக்க முடியாமல் துரத்தப்படும் நிலைமை அங்கேற்பட்டது.

காங்கிரஸ்காரர்கள் வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் செய்த சூழ்ச்சிகளால் அங்குள்ள முஸ்லிம்களுக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறதென்றே கூறவேண்டும். கக்ஷிப் பிரதி கக்ஷிகளை ஏற்படுத்திக்கொண்டு பிளவுபட்டிருப்பதால் நேரும் அபாயத்தை உணர்ந்து அவர்கள் ஒற்றுமையாகிவிட முன் வந்துள்ளார்கள். அஸ்ஸாமில் இரண்டொருவர் நீங்கலாக மற்றெல்லா முஸ்லிம்களும் ஒருவருடைய தலைமையின் கீழ் ஒன்று கூடிவிட்டனர். வங்காளத்தில் கிட்டத்தட்ட முக்கால்வாசிப்பேர் ஒன்று சேர்ந்து விட்டனர். இறைவன் நாடினல் எஞ்சியுள்ளவர்களும் முஸ்லிம் கக்ஷியில் ஒன்றுபடும் காலம் தூரத்திலில்லை.

பீஹார் ஒரிஸ்ஸா மத்திய மாகாணங்களிலும் முஸ்லிம்கள் தங்கள் நிலையை இப்பொழுதுதான் உணர்ந்திருக்கின்றனர். ஒரிஸ்ஸாவிலும் மத்திய மாகாணத்திலும் முஸ்லிம்களுக்கு மந்திரிச் சபையில் ஸ்தானம் கிடைக்காதது அங்குள்ளவர்களுக்குக் கண்ணைத் திறந்து விட்டிருக்கிறது. பீஹார் மாகாணத்தில் முஸ்லிம் லீக் கக்ஷியென்றே ஒரு தனி கக்ஷி ஏற்படுத்தப்பட்டு வருகிறது; சுயேச்சையாக நின்று வெற்றிபெற்ற முஸ்லிம்களும் இக் கக்ஷியில் சேர்ந்து வருகின்றனர் எனச் செய்திகள் எட்டுகின்றன.

ஐக்கிய மாகாணத்திலோ, முஸ்லிம்லீக் கக்ஷி மிகப் பலமாக இருந்து வருகிறது. அங்கு முஸ்லிம்லீக்கைத் தோற்கடித்துவிட வேண்டுமென காங்கிரஸ்காரர்கள் இடைத் தேர்தல்களில் போட்டி போட்ட இடங்களிலெல்லாம் படுதோல்வியேயடைந்தனர். ஆனல், ஒருவர் மட்டிலும் மந்திரிப் பதவிக்காசைப்பட்டு, காங்கிரஸ் மந்திரிச் சபை அமைத்த சமயத்தில் கக்ஷி மாறி காங்கிரஸில் சேர்ந்தார். பஞ்சாப் மாகாணத்தில் காங்கிரஸ்காரருக்கு ஹிந்துக்களிடத்திலும் கூட ஆதரவில்லை.

எல்லைப்புறத்தில் காங்கிரஸ் மந்திரிச் சபை நடந்துகொண்ட முறையில் அங்குள்ள முஸ்லிம்களுக்கு நித்திரை தெளிந்து விட்டது. முஸ்லிம் லீக்குக்குப் பலத்த ஆதரவு ஏற்பட்டு, மந்திரிச் சபையுங்கூட ஆட்டங் கண்டுவிட்டது. அம் மந்திரிச் சபையை ஸ்திரப்படுத்துவதற்காக காந்தியும், ஆஜாதும், பிறரும் ஓடிச் செல்கின்றனர். எவ்வாருயினும் சட்டசபையின் அடுத்த கூட்டத்தில் எல்லைப்புற காங்கிரஸ் மந்திரிச் சபையின் மீது நம்பிக்கையில்

லாத் தீர்மானம் கொண்டு வரக்கூடும். அங்கு காங்கிரஸ் மந்திரிச் சபை வீழ்ச்சியடையுங் காலம் அண்மையில் நெருங்கிக்கொண்டிருக்கிறது.

சிந்து மாகாணத்திலும் முஸ்லிம்கள் புத்துணர்ச்சி பெற்றுள்ளனர். அங்குள்ள முஸ்லிம் அங்கத்தினர்கள் மொத்தம் 35-ல் 24 பேர்கள் ஸர், குலாம் ஹுஸைன் ஹிதாயத்துல்லாவின் தலைமையின் கீழ் ஒன்றுபட்டு விட்டனர். காங்கிரஸ்காரர்கள் நடு நிலைமை வகிப்பார்களாயின், சிந்து மாகாணத்தில் அல்லா பக்ஷ் மந்திரிச் சபை கூடிய சீக்கிரம் வீழ்ச்சியடைந்துவிடும். மந்திரிகள்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம்கொண்டு வருவதற்கு வசதியாக இருக்கும்பொருட்டு சட்டசபையைக் கூட்டும்படியாக சிந்து கவர்னருக்கு ஸர், குலாம் ஹுஸைன் ஹிதாயத்துல்லா மகஜர் அனுப்பி இருக்கிறார். அல்லாபக்ஷ் சட்ட சபையைக் கூட்டாமல் அதிகாரம் வகித்துக்கொண் டிருக்க முயலுகிறார். ஆகவே, சிந்துவிலும் முஸ்லிம் லீக்கின் கூட்டுமந்திரிச் சபை ஏற்படும் காலம் நெருங்கிக்கொண் டிருக்கிறது.

பம்பாய் மாகாணமும் காங்கிரஸ் கக்ஷிக்காரரை ஆதரிக்கவில்லை. ஆரம்பத்திலேயே காங்கிரஸ் அங்கத்தினராக இருந்த இரண்டொரு முஸ்லிம்களைத் தவிர மற்றவர்கள் காங்கிரஸுக்கு எதிராகவே இருந்து வருகின்றனர். சென்னையில் தான் சட்டசபை முஸ்லிம் அங்கத்தினர்கள் பல கக்ஷியினராகப் பிரிந்திருக்கின்றனர். முஸ்லிம்லீக் கக்ஷியினர் இவர்களை எல்லாம் ஒன்றுகூட்டி ஒரே கக்ஷியாக ஆக்குவதற்கு முயற்சி எடுத்துக் கொள்வதாகவும் தெரியவில்லை. இறைவன் தான் சென்னை முஸ்லிம் களுக்கு ஒற்றுமை புணர்ச்சியை உண்டாக்கி, ஒரு கக்ஷியாக இருக்க அருள்புரிய வேண்டும். எவ்வாறாயினும் காங்கிரஸ்காரர்களின் போக்கு முஸ்லிம்களை ஒன்றுபடுத்தி விட்ட தென்பதிலையமில்லை. இனி ஹிந்து முஸ்லிம் வகுப்பு சமரசமும் ஏற்பட வழி பிறக்குமா என்பதை எதிர்பார்ப்போம்.

காங்கிரஸ் மேதாவிகளின் சொல்லும் செயலும்

(தென்காசி மௌலவி மீ. இ. மு. அபுல்ஹஸன் ஷாதலி ஸாஹிப் வரைவது)

தற்பொழுது இந்தியாவின் 6 மாகாணங்களில் முழுப் பொறுப்புடனும், இரண்டு மாகாணங்களில் கூட்டு மனோபாவத்துடனும் சுருங்கக் கூறுமிடத்து, எட்டு மாகாணங்களில் காங்கிரஸ் பிரதிநிதிகள், அரசியலை ஏற்று ஆங்கிலேயருக்கு துணைபுரிந்து ஆட்சிசெய்து வருகின்றன ரென்பது யாவருமறிந்த உண்மையே. இங்ஙனம், சட்டசபைகளைக் கைப்பற்றினாலும் பதவி ஏற்கக்கூடாதென்பது காங்கிரஸின் ஒரு பகுதியினர்களான அபேதவாதிகளின் அபிப்பிராயமாக விருந்ததெனினும், மற்றொரு பெரும் பகுதியினரான ஹிந்து வர்ணாச்ரம ஆட்சியை நிலை நிறுத்தவேண்டுமென்ற உள்ளெண்ணங் கொண்ட காந்தியார், பட்டேல், தேசாய், பிரசாத், ஆச்சாரியார் போன்ற பிரகஸ்பதிகள் பதவி ஏற்று, உள்ளேபோய் முட்டுக்கட்டை போட்டு புதிய அரசியலை ஸ்தம்பிக்கச் செய்ய வேண்டுமென்றுகூறி பதவி ஏற்க அனுமதியளித்து பொதுமக்களையும் தன்பக்கம் இழுத்தனர். இப் பிரகஸ்பதிகள் மெஜாரிடி பலத்தால் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றி (மந்திரி பதவிகளை ஏற்று) மன திருப்தி யடைந்தனர். இஃதெல்லாம் சட்டசபை ஸ்தானங்களைக் கைப்பற்றிய பின்னர்தான் என்பதை நண்பர்கள் நினைவிலிறுத்திக்கொள்ளல் வேண்டும். பொதுமக்களிடம் வாக்கு கேழ்க்கும் போது இப் பிரகஸ்பதிகள், கூறிய வாக்கியங்களும், கொடுத்த வாக்குறுதிகளும் கொஞ்ச நஞ்சமல்ல. எதிர் கட்சியினர்களையும், பதவியிலிருந்த கட்சியையும் திட்டியது, குறைகூறியது இவ்வளவு அவ்வளவு என்று வருணிக்க முடியாது. இடைக்காலத்தில் பதவி ஏற்று, தங்களால் இயன்ற அளவு நன்மைபுரிய திட்டம் வகுத்த மந்திரிகளைக் குறைகூறியதுடன் வசைப் புராணமும் பாடினர். இவ்விதத் திருவிளையாடல்களுக்குப் பின் காங்கிரஸ் பிரகஸ்பதிகள் ஆங்கிலேயர்களுக்கு சரணாகதியடைந்து ராஜ விஸ்வாசப் பிரமாணஞ் செய்து கொடுத்து ஆறு மாகாணங்

களில் மந்திரிப் பதவியை ஏற்று புதிய சீர் திருத்தத்தை நடத்த ஆரம்பித்தனர். இவர்கள் பதவி ஏற்று ஒன்றேகால் வருஷந்தானுகின்றன. அதற்குள்ளாக இவர்கள் நடாத்திய திரு விளையாடல்கள் பொதுமக்களையும், காங்கிரஸ் பக்தர்களையும் பிரமிக்கச் செய்துவிட்டன. மக்கள் மஞ்சப் பெட்டியை நிறப்பியதாலேற்பட்ட பலாபலன்களைக் கண்ணாரக்கண்டனர், ஏங்கினர், மனங்கலங்கினர். ஆயினுமென்ன? "மேஜாரிடி பலம்" எங்களிடமிருக்கிறது; நாங்கள் தோன்றுவதைச் செய்தே தீருவோம்; நீங்கள் வேண்டுமானுல் நாலு வருஷங்களுக்குப்பின் எங்களுக்கு ஓட்டுகளளிக்க வேண்டாம்" என்று பகிரங்கமாக மந்திரிகள் கூறவாரம்பித்தனர்.

தலைவர் ஜின்னுவின் பொய்யா மொழி

இவர்கள் இங்ஙனமாக பதவிகள் ஏற்ருல் வாக்குறுதிகளுக்கு மாற்றம் செய்வார்கள்என்று அகில இந்திய முஸ்லிம்லீக் தலைவரும், 9 கோடி முஸ்லிம்களின் முடிசூடா மன்னருமான ஆலீஜனுப் முஹம்மது அலீஜின்னு அவர்கள், 26-10-37-ல் பாட்னுவில் நிகத்தியதோர் சொற்பொழிவில்,

"காங்கிரஸுக்கும் முஸ்லிம்லீக்குக்கும் ஒரே ஒரு வித்தியாசம் தானிருக்கிறது. அஃதென்னவெனில், காங்கிரஸ் தான் சொல்வதை நிறைவேற்றிவைக்கும் உத்தேசமுள்ளதல்ல. முஸ்லிம்லீக், தான் எதைச் சொல்லிய போதிலும் அதனை உண்மையாக நிறைவேற்றி வைக்கும் உத்தேசமுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் நுட்பங்களை ஆழ்ந்து கவனிக்கும் நமது இந்திய முஸ்லிம்களின்—அல்ல, எல்லா சிறுபான்மை சமூகத்தினர்களின்—முடிசூடா மன்னர் ஜனுப் முஹம்மது அலீஜின்னு அவர்கள் அன்று அவ்வாறு கூறியபோது அவ்வுத்தமரின் அபிப்பிராயத்தை அலட்சியமாக நினைத்தனர் பலர்; கேலி செய்து பரிகசித்தனர் சில கூலிகள்; திட்டிக் கண்டபடி வரைந்தன பல கூலிக்குக் கூத்தாடும் பத்திரிகைகள். ஆனுல், இன்று நடப்பதென்ன? அவ்வுத்தமரின் அமுத வாக்கியங்கள் அப்படியே நிகழ்வதைக் கண் கூடாகக் காண்கின்ருேம். அன்று தலைவர் ஜின்னு கூறிய வாக்கியங்களை அலட்சியமாகக் கருதினேமே என்று பல அறிவாளிகளும், வாக்காளர்களும் மனம் வருந்துகின்றனர். அந்தோ! நமது மாகாணத்தில் மஞ்சப்பெட்டியை நிறப்பியதால் ஏற்பட்ட பலாபலன்கள் போதும் போது என்று மக்கள் ஏங்கி நிற்கின்றனர்.

ஆதலின், நமது சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் மேதாவிகள், பதவி ஏற்பதற்கு முன் என்னென்ன வாக்குறுதிகள் கொடுத்தனர்; என்ன செய்வதாக பொது மக்களிடம் கூறினர், என்பதையும், இன்று அவ்வாக்குறுதிகளின் படியும், அவர்கள் கூறியபடியும் நடக்கின்றனரா? அன்றி "யானை காட்டும் பல் ஒன்று, மெல்லும் பல் ஒன்று, என்ற பழமொழிப்படி ஸ்தானங்களைக்கைப்பற்றியவுடன் சுயநலங்களை அபிவிருத்தி செய்கின்றனரா? என்பதை இச்சிறிய கட்டுரையில் சுருக்கமாக வரைகின்றனம். அன்பர்கள் ஆராய்ந்து தலைவர் ஜின்னுவின் அழகிய மொழி எவ்வாறு நிறைவேறி வருகின்றதென்பதைக் கவனிப்பார்களாக!

சொல் 1:—எங்களுக்கு ஓட் கொடுங்கள். பல குறைகளுள்ள புதிய அரசியல் சீர்திருத்தச் சட்டத்தை உடைத்தெறிவோம்; தகர்த்தெறிவோம்; அதை நகரத்திற்கு அனுப்புவோம். (என்றனர் ஒரு சாரார்).

எங்களுக்கு ஓட் கொடுத்தால் நாங்கள் பதவிகளை ஏற்று, உள்சென்று நிருவாகம் நடக்கவியலாது முட்டுக்கட்டைபோடுவோம்; எங்கள் கோரிக்கைகளை கவர்னர் ஏற்க மறுத்தால் ராஜிநாமாச்செய்து வெளிவந்து போராடுவோம்; மக்களுக்கு வேண்டிய எல்லா சௌகரியங்களையும் செய்து கொடுப்போம். (என்றனர் மற்ருெரு சாரார்)

("பூர்ண ஸ்வராஜ்யத்தைத் தவிர வேறெந்த அரசியல் திட்டத்தையும் நாங்கள் ஏற்கமாட்டோம்'' என்று சபதஞ்செய்து அதையே காங்ரஸின் முதற் கொள்கையாகக் கொண்ட இவர்கள், சட்ட சபை ஸ்தானங்களைக் கைப்பற்றுவதும், பதவி ஏற்க நாடுவதும் காங்கிரஸின் மூல கொள்கைகளுக்கே முரண் என்பதை பதவி மோகத்தால் இப்பிரகஸ்பதிகள் மறந்து விட்டனர் போலும்!)

செயல் 1:—காங்கிரஸ்காரர்களது வாக்குறுதிகளை நம்பி பொதுமக்கள் தத்தம் வாக்குகளை இவர்களுக்கே அதிகமாக அளித்தனர். இதனுல் பெரும்பான்மையான ஸ்தானங்களைக் கைப்பற்றிய இவர்கள், புதிய அரசியலை ஏற்காமல் உடைத்தெறிய வேண்டியதிருக்க, மந்திரிப் பதவிகளை ஏற்க வழியென்ன? என்ற விஷயத்திலேயே ஆழ்ந்த கவனம் செலுத்தி முடிவில் கவர்னர்கள், தங்களின் சில நிபந்தனைகளுக்குக்

கட்டுப்படுவதாயிருந்தால் பதவி ஏற்பதாகத் தீர்மானித்தனர். கவர்னர்கள் இதை மறுக்கவே இவர்கள், சில மாதங்கள் வரை கவர்மெண்டைத் திட்டிக் கொண்டிருந்தனர். இறுதியாக நிபந்தனையின்றியே கவர்னரிடம் சரணாகதியடைந்து "நாங்கள் புதிய சீர்த்திருத்த சட்டத்திற்கடங்கி நடக்கிறோம்; நாங்கள் ஏதேனும் முரணாக நடந்தால் நாங்களே ராஜிநாமாச் செய்து விடுவோமேயொழிய தாங்கள் எங்களை 'டிஸ்மிஸ்' செய்ய வேண்டாமென்று வேண்டிக் கொள்கிறோம்" என்று பிரமாணம் செய்து கொடுத்து மந்திரிப்பதவிகளை ஏற்றார்கள். இது "உடைத்தெறிவோம்; தகர்த்தெறிவோம்" என்றதற்கு முரணல்லவா? இரண்டாவதாக, 'சட்டசபைகளைக் கைப்பற்றி பதவிகளை ஏற்று முட்டுக் கட்டைபோடுவோம்" என்றதற்குப் பகரமாக ஏதோ நல்ல முறையில் இவ்வரசியலை நடத்தி ஆங்கிலேயர்களுக்குப் பயந்து நல்லபிள்ளைகள் போல் நடந்து கொள்கிறார்கள். இவர்களின் பல கோரிக்கைகளைக் கவர்னர் மறுத்தும் இவர்கள் ராஜிநாமாச் செய்யவில்லை. கவர்னர்கள் மறுக்க முடியாத, புதிய அரசியல் சட்டத்திற்கு உட்பட்ட விஷயங்களையே நடத்தி வருகின்றனரே யொழிய மக்களுக்கு உண்மையாக முக்கியம் வேண்டியவைகளைச் செய்வதைக் காணோம்.

சொல் 2:—எங்களுக்கு வாக்களித்தால் பிரிட்டிஷ் சிங்கத்தின் பிடரி மயிரைப் பிடித்து ஆட்டி நமது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வோம் (என்றனர்)

செயல் 2:—இன்று எந்த பிரிட்டிஷ் சிங்கத்தின் பிடரி மயிரைப் பிடித்து ஆட்டி வைக்கப் போனார்களோ, அதே சிங்கத்தின் வலையில் அகப்பட்டு புதிய சீர்திருத்தச் சட்டத்தின்படி நடந்து, அவர்களிடத்தில் "நல்லவர்கள்" என்ற பட்டத்தை வாங்க அல்லும்பகலும் அனவரதமும் பிரயத்தனப்பட்டு வருகின்றனர். அவர்களும், "காங்கிரஸ்காரர்கள் அரசியலை ஏற்று நல்லமுறையில் நடத்துகின்றனர்" என்று இவர்களைப் புகழுகிறார்கள். இதுதான் பிரிட்டனின் பிடரி மயிரைப் பிடித்து ஆட்டி வைப்பது போலும்!

சொல் 3:—எங்களுக்கு வாக்குகளளித்தால் வெள்ளையர்களை இந்நாட்டை விட்டும் மூட்டை முடிச்சுகளுடன் இங்கிலாந்துக்கு அனுப்புவோம். (என்றனர்)

செயல் 3:—ஆனால் இன்று 'ஆங்கிலேயர்கள், பங்களாக்கள் முன் வைக்கக்கூடிய ரோஜாச் செடிகளைப் போன்றவர்கள்; அவர்களை நாம் கண்ணியப்படுத்த வேண்டும்; இந்தியர்கள் கொல்லையில் முளைக்கும் பீர்க்கங்கொடிப் போன்றவர்கள், என்று ஒரு பிரதம மந்திரியே கூறுகிறார். மற்றொரு மந்திரியோ கவர்னர் எங்களுக்கு ஞானாசிரியர், மேதாவி, அறிவாளி என்று போற்றித் துதிபாடுகிறார். மற்றொரு அபேத வாத மந்திரி, எடுத்ததற்கெல்லாம் பிரிட்டனைக் குறை கூறுவது முட்டாள் தனமானது என்று பெருமையுடன் கூறுகிறார். இங்ஙனம் செய்வது தான் இவர்களை மூட்டை முடிச்சுகளுடன் இங்கிலாந்துக்கு அனுப்புவது போலும்!

சொல் 4:—வெள்ளையர்களுக்கு மட்டும் சம்பளம் அதிகமாகவும் நமது நாட்டு மக்களான இந்தியர்களுக்கு குறைவாகவும் கொடுக்கப் படுகிறது. நாங்கள் சட்டசபைகளுக்குச் சென்று இந்தக் கொடுமைகளை ஒழிக்கப் போகிறோம். எங்களுக்கு ஓட் கொடுங்கள். (என்றனர்)

செயல் 4:—ஆனால் இன்று செய்வதென்ன? வெள்ளைக் காரர்களுக்குச் சம்பளம் குறைக்கக் கூடாது; அவர்களுக்கு செலவு அதிகமிருக்கிறது என்று கூறி அவர்களின் சம்பளத்தைக் குறைக்காமல், இந்திய உத்தியோகஸ்தர்களின் அதிலும் 1927 க்குப்பின் உத்தியோகத்திலமர்ந்தவர்களின் சம்பளத்தைக் குறைத்தனர். இது முன் கூறிய வாக்குறுதிக்கு மாற்றமாயிருப்பது மல்லாமல் (இந்திய ஐரோப்பியர்களான) பிராமணர்களை இந்த சம்பளப்பட்டியினின்றும் ஏகதேசம் காப்பாற்றியது மாகும். [ஏனெனில் பிராமண ரல்லாதார் (முஸ்லிம்களுட்பட) ஏராளமாக உத்தியோகத்தி லமர்ந்ததெல்லாம் 1927 க்குப்பின் ஜஸ்டிஸ் மந்திரிகளின் முயற்சியினால் தான் என்பது வாசகர்கள் நினைவிலிருக்கலாம்.] இங்ஙனம் செய்வதுதான் இந்திய உத்தியோகஸ்தர்களுக்கு உதவி செய்வது போலும்! என்னே கருணை!!

சொல் 5:—எங்களுக்கு ஓட்டுகளளித்து அனுப்பினால் ஸி.ஐ.டி. யை எடுத்து விடுவோம்; இது நம்மவர்களை கேவலப்படுத்தக் கூடியதாகவிருக்கின்றது. பிரசங்கங்களை சுருக்கெழுத்தில் குறித்து வழக்குத் தொடர்ந்து நம்மை அவதிக்குள்ளாக்கும் தன்மையை நீக்கிவிடுவோம். (என்றனர்)

செயல் 5:—ஆனால் இன்று, ஸி. ஐ. டி. இலாக்கா அவசியம். அந்த இலாக்காவும் போலீசும் கவர்ன்மெண்டின் இரு நேத்திரங்களை போன்றதாகும் என்று கூறுவதுடன், காங்கிரஸல்லாத இதர கட்சி பிரசங்கக் கூட்டங்களுக்கு சுருக்கெழுத்து ஸி. ஐ. டி.களை அனுப்பி எழுதச் செய்து வழக்குத் தொடருகின்றனர். இதுதான் முன் சொன்ன சொற்களைக் காப்பாற்றும் தன்மை போலும் !

சொல் 6,—நாங்கள் பதவி ஏற்றால், இந்திய மக்களின் பிரஜா உரிமையைப் பறிக்கக் கூடிய கிரிமினல் திருத்தச் சட்டத்தைத் தொலைத்து விடுவோம். இது மக்களின் விருப்பத்திற்கு விரோதமாக கொண்டுவரப்பட்ட ஓர் கொடிய சட்டமாகும். 124 ஏ. செக்ஷனையும் நீக்கி விடுவோம். (என்றனர்)

செயல் 6:—இன்று, இந்திக் கட்டாயப் பாடமாக்கப்படுவதால் தாய் பாஷையான தமிழுக்கு இடர் ஏற்படும் என்று பிரசாரம் புரியும் தலைவர்களையும், தொண்டர்களையும் கைது செய்து கிரிமினல் திருத்தச் சட்டத்தின் கீழ் தண்டிக்கின்றனர். இவ்வாறு தாங்கள் செய்வது நியாயமென்றும் பிறர் செய்வது தகாதென்றும் வாதாடுகின்றனர். இதைப்பற்றி சிறந்த அறிவாளிகள் பன்முறை எடுத்துக் கூறியும் இதை காங்கிரஸ் மந்திரிகள் சட்டை செய்யவில்லை. இதுதான் கிரிமினல் திருத்தச் சட்டத்தைத் தொலைக்கும் வழிபோலும்! என்னே இவர்களின் அறிவு சென்றவாறு !

சொல் 7:—நாங்கள் பதவி ஏற்றால் கட்டாய ஆரம்பக் கல்வியை நாட்டில் ஏற்படுத்துவோம். தாய்ப் பாஷை அபிவிருத்தி யடையச் செய்வோம். ஏராளமான கல்லூரிகளை அமைத்து மக்களின் அறியாமையைப் போக்குவோம். (என்றனர்)

செயல் 7:—கட்டாய ஆரம்பக் கல்வி ஏற்படுத்துவதைப் பற்றிய பேச்சை எடுக்காமலே, ஒரு ஜில்லாவில் மதுவிலக்கு ஏற்பட்டதைக் காரணமாகக் காட்டி, பல ஜில்லாக்களிலிருக்கக் கூடிய நூற்றுக்கணக்கான உயர்தர, நடுத்தர கல்லூரிகளை எடுத்து விட்டனர். வட ஆற்காடு ஜில்லாவில் மாத்திரம், ஜில்லா போர்டின் கீழ் நடந்துவந்த பள்ளிக்கூடங்கள் 83 மூடப்பட்டிருக்கின்றன. 213 உபாத்தியாயர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர். காரணம் பணமில்லை என்கின்றனர். இதற்கு மாற்றமாக மக்கள், வேண்டா ஹிந்திக்கு ஏராளமான பணத்தைச் செலவிடுகின்றனர். அறியாமையைப் போக்குவதை விடுத்து அறியாமையை வளர்ப்பதற்குரிய முறைகளை கையாளுகின்றனர். இதுதான் கல்வியை பரத்துவதற்குரிய முறைகள் போலும்!

சொல் 8:—தற்பொழுதிலிருந்துவரும் வகுப்புவாரி பிரதிநிதித்துவ உத்திரவை மாற்றாமல் எல்லோருக்கும் உத்தியோகங்களைப் பகிர்ந்து கொடுப்போம். (என்றனர்)

செயல் 8:—இதற்கு மாற்றமாக, காலியாகும் உத்தியோகங்களிற் பெரும்பாலானதை, மிகச் சிறுபான்மையோரான 1,00-க்கு 2 விகிதமுள்ள பிராம்மணர்களுக்குக் கொடுத்து இதரர்களை முன்னேற விடாது தடுக்கின்றனர். (இது சம்பந்தமான புள்ளி விபரங்களை அதி விரிவாக வரையலாமெனினும் அதை வரைந்து இவ் வியாசத்தை நீளமாக்கப் பிரியப்படவில்லை. ஆதலால், விரிவாகக் குறிப்பிடவில்லை.) நீங்கள் முன் சொல்லிய பிரகாரம் பகிர்ந்து கொடுங்களென்று கேட்டால், இங்ஙனம் கேட்பது வகுப்புவாதம், தேசத் துரோகம் என்று இன்று கூறுகின்றனர். இதுதான் வாக்குறுதியைக் காப்பாற்றும் தன்மை போலும்!

சொல் 9—நாங்கள் பதவி ஏற்றால் நிலவரியை பாதியாகக் குறைப்போம். (என்றனர்)

செயல் 9:—ஆனால், இன்று பதவி ஏற்ற பின் செய்ததென்ன? இடைக்கால மந்திரிகள் போட்ட திட்டத்தைக்கூட இவர்கள் நிறைவேற்றாது கண்துடைத்து வருகின்றனர். நிலவரியில் கால் பாகத்தை "சாஸ்வதமாக" குறைக்கவேண்டுமென்று இடைக்கால மந்திரிகள் திட்டம் தயாரித்திருந்தார்கள். அது பூர்த்தியாவதற்குள் காங்கிரஸ் மந்திரி சபை வந்துவிட்டது. இப் பிரகஸ்பதிகள் வந்ததும் "சாஸ்வதம்" என்பதை மாற்றி "தற்காலிகம்" என்று விவசாயிகள் தலையில் எழுதி விட்டார்கள். அவர்கள் கூறியதேபோல் பாதியாகக் குறைக்கவுமில்லை; இடைக்கால மந்திரிகளின் நேர்மையான திட்டத்தை அங்கீகரிக்கவுமில்லை. "இது பெரிய விஷயம்; ஆழ்ந்து யோசித்து வருகிறோம்" என்று, இன்று கேட்கும் மக்களுக்குச் சமாதானம் கூறுகின்றனர். இதுதான் நேர்மை போலும்!

சொல் 10:—முன்னிருந்த (ஜஸ்டிஸ்) சர்க்கார் நமது தேசத்தின் பெயரால் கடன் வாங்கி தேசத்திலுள்ளவர்களைக் கஷ்டமடையச் செய்துவருவதால், நாங்கள் பதவி ஏற்றவுடன்

தேசியக் கடன்களை அடியோடு செல்லுபடி அற்றதாக்கி ஒழித்துவிடுவோம். (என்றனர்)

செயல் 10:—ஆனல், இவர்கள் செய்த தென்ன? இவர்கள் பதவிக்கு வந்தவுடன் நமது தேசத்தின்மீது முன்பிருந்த கடனுக்கும் சேர்த்து கையெழுத்துப் போட்டுவிட்டு, மூன்று தடவையாக, பதவி ஏற்று $1\frac{1}{4}$-வருஷத்திற்குள் $4\frac{3}{4}$ கோடி ரூபாய்கள் கடன்வாங்கி நமது மாகாணத்தை அடமானம் வைத்துவிட்டார்கள். இங்ஙனமாக வாங்கி ஏதேனும் நலன் செய்கிறார்களா வென்றால், அதுதான் பூஜ்யம். பல பள்ளிக்கூடங்கள் மூடப்படுகிறது. பல வைத்தியசாலைகளின் டாக்டர்களுக்கு சம்பளமில்லை யென்று கூறுகிறார்கள். கிராமங்களில் கிணறு வெட்டவோ, ரோட்டுப் போடவோ வேண்டுகோள் செய்தால் பணமில்லை யென்று கூறி புதியவரி கொடுக்கத் தயாராக விருக்கிறீர்களா என்று கூறுகிறார்கள். இதுதான் வாக்குறுதியை நிறைவேற்றும் முறைபோலும்!

சொல் 11:—நாங்கள் செய்யும் தீர்மானங்களைக் கவர்னரோ, வைஸ்ராயோ, இந்தியா மந்திரியோ அங்கீகரிக்க மறுத்தால், இதோ எங்கள் ஜேபில் ராஜிநாமா தயாராக வைத்திருக்கின்றோம். ராஜிநாமாவை வீசி யெறிந்துவிட்டு வெளியில் வந்துவிடுவோம். (என்றனர்)

செயல் 11:—ஆனல், இன்று செய்வதென்ன? ஆந்திராவை தனி மாகாணமாகப் பிரிக்கவேண்டுமென்று சட்டசபையில் ஏக மனதாக தீர்மானம் நிறைவேற்றி அதை இந்தியா மந்திரிக்கு அனுப்பியதும், இந்தியா மந்திரி, "இப்பொழுது ஆந்திராவைப் பிரிக்க முடியாது" என்று பார்லிமெண்டில் கூறியும், ஆந்திர மக்கள் பிரிவினைக்குக் கிளர்ச்சி செய்தும் இன்று வரை இம் மந்திரிசபை, முன் சொன்ன பிரகாரம் ராஜிநாமாச் செய்யவுமில்லை ; நெருக்கடியை உண்டுபண்ணி சீர்திருத்தச் சட்டத்தை ஸ்தம்பிக்கச் செய்யவுமில்லை. இதுதான் ராஜிநாமா எங்கள் ஜேபிகளில் இருக்கிறது என்று கூறியதின் அர்த்தம் போலும்! என்ன பதவி மோகிகளின் மாயா ஜாலவித்தை!!

சொல் 12:—நாங்கள் பதவி ஏற்றால் ஜனநாயக முறைப்படி, ஜாதிமத கட்சி பேதமின்றி ஆட்சிபுரிவோம். எங்கள் அரசியல் எதிரிகளையும் கண்ணியமாகப் பாவிப்போம். அஹிம்ஸை சத்தியமே எங்களின் கொள்கை. (என்றனர்)

செயல் 12:— ஆனல், இன்று ஜனநாயகத்திற்கு மாற்றமாக நடப்பதுடன் கட்சிப் பித்துக்கொண்டுமலைகின்றனர். மக்கள் வறுமையால் வாடுவதையும், 100-க்கு 93 தற்குறிகளாக இருந்து கஷ்டப்படுவதையும் பொருட்படுத்தாமல், காங்கிரஸின் சின்னமான கதர் பிரசாரத்திற்கு 2 லட்சம் ரூபாய்களை ஒதுக்கி வைத்துக்கொண்டனர். மக்கள் வேண்டாத ஹிந்தியை பரப்புவதற்கு பல லட்ச ரூபாய்களை எடுத்துக்கொண்டனர். மாறுபட்ட அபிப்பிராயமுள்ள தலைவர்களை, கழுதைகள் அறிவிலிகள், குரங்குகள் என்று பொறுப்புள்ளவர்களே திட்ட முன் வந்திருக்கும்போது மற்றவர்களைக் கேட்கவா வேண்டும். இதுதான் ஜனநாயக ஆட்சிபோலும்! என்னே வெட்கக்கேடு!

சொல் 13:—ஜஸ்டிஸ் மந்திரிகள் கவர்ன்மெண்டு பணத்தைக்கொண்டு ஊர் ஊராகச் சென்று கட்சிப் பிரசாரம் செய்கின்றனர். இது அக்கிரமம். பொது மக்களின்வரிப் பணத்தை வீண் விரயஞ் செய்வதுமாகுமா ? என்று கூறினர்

செயல் 13:—ஆனல் இன்று, பொது மக்களிடமிருந்து விசூலிக்கப்படும் வரிப்பணத்தைக் கொண்டே நாடோறும் கிராமங்கள்தோறும் 10 மந்திரிகளும், 10 காரியதரிசிகளும் சென்று காங்கிரஸ் பிரசாரஞ் செய்கின்றனர். கதர் மூவர்ணக் கொடியேற்றுகின்றனர். இதுதான் வாக்குறுதிப்படி நடப்பதுபோலும்!

சொல் 14:—இப்பொழுது மக்கள் வரிச்சுமையால் கஷ்டப்படுகின்றனர். இந் நிலைமையில், ஜஸ்டிஸ் மந்திரிகள் வரிகளைக் குறைக்காது ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் சம்பளமாகப் பெறுகின்றனர். எங்களுக்கு ஓட்டுக்கொடுத்தனுப்புங்கள். குறைந்த சம்பளத்தில் பதவிகளை வகித்து மக்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்கிறோம். 500 ரூபாய்களுக்கு மேல் சம்பளம் வாங்கமாட்டோம். (என்றனர்)

செயல் 14:—ஆனல் இன்று இம் மந்திரிகள் ஆள் ஒன்றுக்கு சம்பளம் ரூபாய் 500, வீட்டு வாடகை ரூ 150, கார் அலவன்ஸ் ரூ 150 ஆக ரூ 800 வாங்குவதுடன் வரிப்பணத்திலிருந்து கவர்ன்மெண்டு கணக்கில் தங்கள் சௌகரியத்திற்காக 18000 ரூபாய்களுக்கு கார்கள் வாங்கிக்கொண்டனர். 15-7-37 முதல் 30-6-38 வரை மந்திரிகளும், காரியதரிசிகளும் சுற்றுப் பிரயாணம்செய்த செலவு ரூபாய் 54,715-13-0 ஆகும். இவ்விதச் சுற்றுப் பிரயாணத்தில் இவர்களின் முக்கிய வேலை காங்கிரஸ் பிரசாரமே

யாகும் என, யூகிக்கப்படுகிறது. இதற்கு முன் இல்லாதவாறு சட்டசபை மெம்பர்களுக்கு மாதா மாதம் சம்பளம் ரூ. 75-ம் ஏற்படுத்தி விட்டனர். இவ்வளவு ரூபாய்களைச் செலவு செய்தும் "நாங்கள் ரூ. 500 தானே சம்பளம் வாங்குகிறோம்" என்று கூறுவது யாரை ஏமாற்றுவதற்கு என்பது விளங்கவில்லை. யாரேனும் இங்ஙனம் செய்யலாமா? என்று கேட்க முற்பட்டுவிட்டால் அவனுக்கு தேசத் துரோகி, வகுப்பு வாதி காங்கிரஸ் விரோதி, வெள்ளைக்காரனுக்குப் பின் பாட்டுப் பாடுபவன் என்ற பட்டங்களை வாய்கூசாது கூறுவதில் சற்றும் பின்வாங்கியவர்களாகத் தெரியவில்லை. இதுதான் இப் பிரகஸ்பதிகளின் நேர்மை போலும்!

சொல் 15:—இப்பொழுதிருக்கிற மந்திரிகள் மக்களின் வரிப் பணத்திலிருந்து ஏராளமான பொருள்களை வீண் விரயஞ் செய்யும் பொருட்டு வேனல் காலங்களில் உதகைக்குச் சென்று உல்லாச வாழ்க்கை நடத்துகின்றனர்; இவர்கள் அங்கு செல்வதனால் உத்தியோகஸ்தர்களும் அங்கு செல்லவேண்டிய அவசிய மேற்படுகிறது, இதனால் லக்ஷக்கணக்கான ரூபாய்கள் செலவாகிறது, நாங்கள் பதவி ஏற்றால் உதகைக்குச் செல்லமாட்டோம், உத்தியோகஸதர்களும் செல்லமாட்டார்கள் (என்றனர்.)

செயல் 15:—ஆனால் நடந்ததென்ன? உதகைக்கு காங்கிரஸ் மந்திரிகள் பகிரங்கமாகப் போக முடியாமல் கள்ளத்தனமாக பல்வேறு காரணங்களைக் கூறிக்கொண்டு வேனல் காலத்தில் பல நாட்கள் வரை அங்கு சென்று தங்கியிருந்தனர். ஆங்கிலேய உத்தியோகஸதர்களெல்லாம் உதகைக்குச் சென்று உல்லாச மாசக் காலங்கழித்தனர். அவர்களை அங்கு போக விடாமல் தடுக்க மனமற்ற மந்திரிகள், இந்திய உத்தியோகஸ்தர்களை மாத்திரம் அங்கு செல்லாவண்ணம் தடுத்து விட்டனர். பல மந்திரிகள் ஒரே தடவையில் பல நாட்கள் அங்கு தங்கியிருந்தனர். இவர்கள் செய்த பெரிய வேலை என்னவென்றால், ஐரோப்பியர்களை நாங்கள் மூட்டை முடிச்சுகளுடன் அனுப்பிவிடுவோம் என்று கூறியவர்கள், அவ்வைரோப்பியர்களை நல்ல சுகமனுபவிக்க உதகைக்கு அனுப்பிவிட்டு இந்நாட்டு உத்தியோகஸ்தர்களை உதகைக்கு அனுப்பாது தடுத்து கஷ்டப்படச்செய்ததுதானென்பதை யார்தான் மறுக்கமுடியும்? இதுதான் சிக்கனம்போலும்!

சொல் 16:—நாங்கள் பதவி வகித்தால் வரிகளைக் குறைப்போம். புதிய வரிகளைப் போட்டு மக்களைக் கஷ்டப்படுத்த மாட்டோம். (என்றனர்)

செயல் 16:—ஆனால் இன்று செய்வதென்ன? பதவி ஏற்றதுதான் தாமதம், தாங்கள் முன் கூறியதையெல்லாம் மறந்துவிட்டு கண்டபடி புதிய புதிய வரிகளைப் போட ஆரம்பித்துவிட்டனர். (1) உள் நாட்டு மில் துணிகளுக்கு புதியவரி, (2) உள் நாட்டு வைத்தியர்களுக்கும் லைசென்ஸ் வரி, (3) பத்திரப் பதிவுகளுக்கு வரி உயர்வு, (4) வேலைக்கு மனுப் போடுகிறவர்களுக்கு வரி விதிப்பு, (5) மோட்டார்களுக்கு வரி உயர்வு, (6) தோல் கேட்டுகள் திறந்து புதிய வரி விதிக்கத் தீர்மானம், (7) மாணவர்களுக்கு சம்பள உயர்வு: இன்னுமிவை போன்ற சுமார் 20-க்கு மேற்பட்ட வரிகளைப் போட்டிருக்கின்றனர். இன்னும் (1) விவசாயிகளுக்கு வருமானவரி, (2) புகையிலைக்கு மிளகாய்க்கு வரி, (3) விவாகங்களுக்கு வரி, (4) மரணவரி முதலிய பல வரிகளைப் போட யோசித்து வருவதாகவும் தெரிகிறது. இதுதான் வரிகளைக் குறைப்பதாகக் கூறிய தன் கருத்துப் போலும்!

அன்புமிக்க சகோதரீர்! மேற்வரைந்த விஷயங்களை நன்கு கவனித்துப் பார்த்தால், காங்கிரஸ்காரர்களின் முரணான செயல்களையும், தலைவர் ஜின்னாவின் வாக்கியம் மெய்யாகும் தன்மையையும் நன்குணர்ந்து கொள்வீர்களென்பது திண்ணம். இந்நிலைமையில், காங்கிரஸை நம்பி நிபந்தனை, ஒப்பந்தமின்றி எங்ஙனம் நாம் காங்கிஸில் சேர்ந்துழைக்க முடியுமென்பதை சிந்தித்துப் பாருங்கள். இதனால்தான், முஸ்லிம் சமூக முன்னேற்றத்திற்கு "முஸ்லிம்லீகை" பலப்படுத்துவதைத் தவிர்த்து வேறு வழியில்லை என்ற முடிவுக்கு நமது உண்மைத் தலைவர்கள் வந்துள்ளார்களென்பதைக் கவனித்து, நமது லீக்கைப் பலப்படுத்த ஒவ்வொரு இஸ்லாமிய பக்தரும் முன் வரும்படி வேண்டிக் கொள்கிறேன். வஸ்ஸலாம்.

முஸ்லிம் லீக் ஜிந்தாபாத்!

முஹம்மது அலீ ஜின்னா ஜிந்தாபாத்!!

அல்லாஹு அக்பர்!!!

218943

ஞானுந்தம்

இஃது ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் இமாம் கஸ்ஸாலீ (றஹ்) அவர்களால் எழுதப்பட்ட "இஹ்யாஉ உலுமித்தீன்" என்னும் அறபிக்கிரந்தத்தின் கிதாபுத்தவ்ஹீத் வத்தவக்குல் என்ற பகுதியின் தமிழ் மொழிபெயர்ப்பு. இஸ்லாம் மதத்தின் அத்வைதக் கொள்கையை தெள்ளத் தெளிய விளக்கு கிறது. இதனுடன் பெயர்பெற்ற பாரசீகப் பெரியாரான ஸஅதீ ஷீராஸீ (றஹ்.) அவர்களால் எழுதப்பட்ட போஸ்தான் என்னும் காவியத்திலிருந்து ஒரு பகுதி மொழிபெயர்த்து அசல் பார்ஸீ செய்யுட்களுடன் இணைக்கப் பெற்றிருக்கிறது.

சென்னை "ஸைபுல் இஸ்லாம்" பத்திராதிபர் ஆலீ ஜனுப் மௌலானு மௌலவி S. S. அஹ்மது ஸயீத் சாகிப் பாக்கவி, கூத்தாநல்லூர் மத்ரஸா மன்பஉல் உலாவின் நாஜிரும், சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கக் காரியதரிசியுமான ஆலீ ஜனுப் அல்ஹாஜ் மௌலவி ச. அ. முஹம்மது அலிசாகிப் பாக்கவி, சென்னை "ஹிபாஜத்துல் இஸ்லாம்" பத்திராதிபர் ஆலீ ஜனுப் அல்ஹாஜ் மௌலானு மௌலவி A. R. அப்துர் ரஹீம் சாகிப் பாக்கவி, சென்னை, ஆலீ ஜனுப் S. முஹம்மது கமாலுத்தீன், B.A, B.L., உத்தமபாளையம் அல்ஹாஜ், மௌலானு மௌலவி S. S முஹம்மது அப்துல் காதிர் சாகிப் பாக்கவி ஆகிய கனவான்களின் வாழ்த்துரை, மதிப்புரை, கணிப்புரை, போற்றுரைகளும் சேர்ந்தது.

இஃது, பிரபல மார்க்கோபதேசியான திண்டுக்கல் மௌலானு மௌலவி அபுல் பயான் M. முஹம்மது மியான் சாகிப் பாக்கவி அவர்களால் தமிழில் எழுதப்பட்டது. படிக்கப் படிக்கப் பேரானந்தம் விளைவிக்கும் பல அரிய விஷயங்கள் இந்நூலில் அடங்கியுள்ளன. கிரௌன் $\frac{1}{8}$ சைஸ் 80 பக்கங்களுள்ளது. கிளேஸ் காகிதம் இதன் விலை அணு 6.

தனிப்பிரதி வேண்டுவோர் 8 அணு அனுப்பி புக்போஸ்ட் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

கிடைக்குமிடம்:—M. முஹம்மது மியான் & கோ.,

சிகார் பாக்டரீ,

உறையூர், திருச்சி.

218943

சந்தா நேயர்கட்கு

ஒவ்வொரு ஆண்டுக்குமுள்ள சந்தா ரூபாயை வருட ஆரம்பத்தில் கொடுத்து இந்த மாசிகையை அன்போடு ஆதரிக்கவேண்டியது முக்கியமாக இருக்க, அநேகர் சென்ற வருடங்களின் பழைய பாக்கிகளை அனுப்பி கொடுக்காமலே இருக்கின்றனர். நமது மாசிகைக்கு ஏற்பட்டுள்ள சந்தா ரூபாய் வெகு சொற்பமாகையால் இதற்காக அடிக்கடி தபால் எழுதுவது கொண்டு வீண் செலவேற்படுகிறது. ஆதலால், அன்பர்கள் தங்கள் பாக்கிகளையும், புதிய ஆண்டுக்குரிய சந்தா ரூபாயையும் உடனே அனுப்பி வைக்குமாறு கோருகிறோம்.

சிலோன் சந்தா நேயர்கள் :—சிலோன் பகுதிகளுக்கு வி. பி. அனுப்புவதானல் அதிகமான வீண் செலவேற்படுகிறது. சந்தா நேயர்கள் அதிகமான ரூபாய் கொடுத்து வி. பி. பெற்றுக் கொள்ளும்படி நேரிடுகிறது. ஆகவே, கொழும்பு, கண்டி, மாத்தளை, நீர்கொழும்பு, கம்பளை முதலிய இடங்களிலுள்ளவர்கள் தங்கள் பாக்கிகளை நமது ஏஜண்டு ஜனுப் **A. M. K.** ஆலிம் சாஹிப் (144, கைசர் ஸ்டீட், கொழும்பு) இடம் கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ளும்படி கோருகிறோம்.

பர்மா :—ரெங்கூன், மாந்தலே முதலிய பர்மா பகுதிகளுக்கு தபால் கட்டணம் அதிகமாய்விட்டதால் ஒவ்வொரு சந்தாதாருக்கும் தனித்தனியே தபால் எழுதுவது கொண்டு அதிகச் செலவேற்படுகிறது. ஆகவே, அவ்விடங்களிலுள்ள சந்தா நேயர்கள் சென்றவருட பாக்கியையும் நடைபெறும் இவ்வருடத்திற்குரியவைகளையும் உடனே அனுப்பிவைப்பார்களென்று எதிர்பார்க்கிறோம்.

பினங் :—இவ்விடமுள்ளவர்கள் தங்கள் பாக்கியை அவ்விடம் ஜனுப் N. K. முகம்மது கௌஸ் சாஹிப் (127, Pitt Street, Penang) அவர்களிடம் கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கோருகிறோம்.

மலாயா :—இவ்விடங்களிலுள்ளவர்கள் தங்கள் பாக்கிகளை கிள்ளான் ஆலீ ஜனுப் அல்ஹாஜ் **K. A.** பகீர் முகம்மது சாஹிப் அவர்களிடம் நேரில்கொடுத்தோ, தபால் மூலம் அனுப்பியோ ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கோருகிறோம்.

சிங்கை :—இவ்விடத்திய சந்தாநேயர்கள் சென்ற வருடத்திற்குரிய தங்கள் சந்தா பாக்கியையும், புதிய வருடத்திற்குரிய சந்தாவையும், ஜனுப் **L. A.** முகம்மதுயாஸீன் அவர்கள் (249, தஞ்சாங்பகர்ரோட், சிங்கை) இடம் கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ளுமாறு கோருகிறோம்.

மானேஜர்.

Printed by V. Sundram Iyer at the Kesari Printing Works, 150, Anna Pillai St., Madras & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 43, Post Office St., G. T. Madras.